50வது ஆண்டை நோக்கி.......

# மல்லிகை

ஆசிரியர்: டொமினிக் ஜீவா

PUBLIC LIBRARY






## முக்கோண இணைப்பில் முக்கியத்துவம் வாய்ந்த ஒருவர்!

நவம்பர்– 2009

விலை – 40/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Public Library
Jaffna
2362

## திருமண சேவை

செருப்பு தேய தேடியலையும் பழமையின்றா திருமணம்?.......
போதும் செருப்பும் தூசும் படிவு ஏற்படாத நேரத்தில் பொருந்தக் கூடிய வரனைக் கோவையைத் தேர்ந்தெடுக்கக் கூடிய இலே சான வழிமுறையே வேல் அமுதனின் 'சுயதெரிவு முறை'!



சுய தெரிவுமுறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திட இன்றே–
'சுய தெரிவுமுறை முன்னோடி', தனிநபர் நிறுவநர் மூத்த, புகழ் பூத்த, சர்வதேச, சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மயெழு வேல் அமுதனுடன் செவ்வாய், வியாழன், தவிர்ந்த நாட்களில் தொடர்பு கொள்ளுங்கள்!
தொலைபேசி: 2360488/ 2360694/ 4873929

சந்திப்பு முன்னேற்பாட்டு ஒழுங்குமுறையில்!
தாங்களோ, தங்கள் பிரதிநிதியோ
திங்கள், புதன், வெள்ளி மாலைவேளையிலோ,
சனி, ஞாயிறு நண்பகலிலோ வேல் அமுதனை
நேரில் சந்திக்கலாம்!

முகவரி:
8-3-3 மெற்றோ மாடிமனை (வெள்ளவத்தை காவல் நிலையத்திற்கு முன்பாக, திலப்பக்கம், 33ஆம் ஒழுங்கை வழி) 55ம் ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு-06

விரைவான – சுலபமான தெரிவுக்குச் சுயதெரிவு முறையே!
மேலோங்கு மணவாழ்வுக்குக் குரும்பசிட்டியூர், மாயெழு வேல் அமுதனே!

# மல்லிகை

50 - வது ஆண்டு
நோக்கி...
நவம்பர்
386

*Mallikai Progressive Monthly Magazine*

மல்லிகை தரப்படுகிறது உங்களுடன் வெளிவரும் தொடர் சிற்றேடு மாத்திரமல்ல - அது ஓர் ஆரோக்கியமான இலக்கிய இயக்கமுமாகும்.

201/4, Sri Kathiresan St,
Colombo - 13.
Tel : 2320721
mallikaijeeva@yahoo.com

PUBLIC LIBRARY
JAFFNA

## ஒப்பனைகள் எதுவுமேயற்ற வெளிப்படையான கருத்து இது!

நீண்ட நெடுங்காலமாகவே எனது அடி நெஞ்சில் முளை கொண்டிருக்கும் ஆதங்கம், இது.

முன்னர் ஐம்பது அறுபதுகளில் எழுத்தாளர்களாகிய நாம் எல்லோரும் ஒன்றுபோலப் பாசப் பேசியிருக்கின்றோம், பழகியிருக்கின்றோம். கலந்துரையாடி வந்துள்ளோம்.

ஆனால், வரவர, அருமை அறிவு பிசிறு பிசிறு, நாம் ஒவ்வொருவரும் தனித் தனித் தீவாகப் பிரிந்து செயல்படுகின்றோமோ என நான் சில சமயங்களில் ஆறுதலாக இருந்து சிந்திக்கும் வேளையில் யோசித்துப் பார்ப்பதுண்டு.

முன்னர் படைப்பாளிகளில் நம்மில் பலர், பல்வேறு கருத்து மட்டங்களில் இயங்கியிருக்கின்றோம். அடிப்படைத் தத்துவ நோக்கில் கூட நாம் மாறுபட்டுச் சிந்தித்திருக்கின்றோம். மோதிக் கொண்டும் கூட இருந்திருக்கின்றோம். தெருச் சண்டை கூடப் பிடித்துள்ளோம்.

ஆனால், சகோதரப் படைப்பாளிகளின் மனமாச் சுத்தக் காரணத்தைக் கொண்டும் நாம் புண்படுத்தியதேயில்லை.

கழ் முட்டை அரசர்கள் என்ற வரலாற்றுக் கறை எம்மீது காத்தப்பட்டதுண்டு. அது சரியா, தவறா- என்பது இங்கு முக்கியமல்ல. நடந்தது நடந்தேவிட்டது.

அதை எதிர்கால வரலாறே தீர்மானிக்கட்டும்! சரியோ தவறோ என்பதை எதிர்காலம் சொல்லட்டும்!

அந்த முட்டைப் படி சிறாவில் வைத்து நின்று ஆக்ரோஷமாக அமைக்கெதிராகக் குரல்

கொடுத்தவர்களில் இனிய இலக்கிய நண்பர் புன்னாலைவாணியும் ஒருவர். விழா நடைபெற்றதற்கு அடுத்த நாள், 'டேய், சொக்கா! எப்படா இருக்கிறாய்?' எனக் கேட்டுக் கொண்டு, மல்லிகைப் படிக்கட்டுகளில் ஏறி வந்து, என்னைக் கை சேமம் விசாரித்த பாசப் பக்குவம் இருக்கிறதே, அதுவே மனுக்குலப் பண்பாடாகும். உயர்ந்த நாகரிகமாகும்.

ஆயிரம் தான் கருத்துச் சண்டைகளை மேடைகளிலும் எழுத்து உருவத்திலும் நாம் போடலாம், விவாதிக்கலாம். ஆனால், அடிப்படை இலக்கியப் பண்பை நாம் இழந்து விடவே கூடாது! குரோதம் சுரப்பும் பகைமையுமுள்ள சூழலை நாம் உருவாக்கிவிடக் கூடாது!

பிரமிக்கத் தக்க வகையில் இன்று பல இளம் தலைமுறையினர் ஆக்க இலக்கியத் துறைக்குப் பங்களிப்புச் செய்ய முன் வந்துள்ளனர். இது நமது இலக்கிய காலப் பக்குவத்தை எட்டிய முதிர்ச்சி நிரம்பியது. ஆரோக்கியமான ஆக்க பக்குவத்திறனை வெளிப்படுத்த வல்லது. புது விஷயமாகுது.

ஆனால், பிஞ்சிலே பலர் பழுத்துவிடுகின்றனர்.

எங்களது காலத்தை ஒரு தவக் காலம் என்றே குறிப்பிடலாம். எழுதி எழுதியே ஓய்ந்து நிராகரிக்கப்பட்டு, முடங்கிப் போய் விடவும் செய்யும். படைப்பொன்றுமே அச்சேறாது தவம் கிடப்போம். ஆனால், தொடர்ந்து முயற்சித்துக் கொண்டேயிருப்போம். சளைக்க மாட்டோம். தொடர்ந்து போராடுவோம்.

இன்றோ அப்படியல்ல-

கொஞ்சம் கையெழுத்துப் பிரதியும் தேடிக் கொண்ட சில வசதி வாய்ப்புகளும் கிடைக்கப் பெற்றவுடன் உடனே கடக் கட அவரது பெயரில் ஒரு புத்தகம் வெளி வந்து விடும்.

தூரமே தூரமில்லையோ அந்த இளைஞரின் பெயர் பத்திரிகைகளில் சொற்ப காலத்திற்கு அச்சில் அடிபட்டுச் சிலரால் வாசிக்கப்படவும் கூடும்.

அப்புறம் அவரது பேச்சிலே ஒருவகை மிதப்புத் தனம் அகங்காரமாகவே தலை காட்டும். அப்புறமென்ன? நாளை இலக்கியப் பகுதியிலிருந்து அவர் தனிமைப்பட்டுப் போய்விடுவார். அவர் இலக்கிய உலகிலே செய்த மிகப் பெரிய சாதனையே முதன் முதலில் வெளியிட்டு வைத்த கன்னிப் புத்தகமாகவே பெரும்பாலும் அமையும்.

அந்தக் காலத்தில் நல்ல நாள்- பெருநாட்களில் சகோதர எழுத்தாளர்களை வீடு தேடிச் சென்று சந்தித்து உரையாடிக் களிப்போம். சிறீசுவர் கபே, சிற்றி பேக்கரி போன்ற தேநீர்க் கடைகளின் பெயர்கள் அந்தக் காலத்தில் எம்மவர் எழுத்தில் ஆவணமாகப் பதிவுபட்டு இன்றும் பேச்சு வழக்கில் உள்ளன.

'மறீனா பீச்சில்' தனியாக நின்று கொண்டிருந்த [illegible] கம்பத்தை ஒரு சாயங்கால வேளையில் 'எழுத்துச் செல்லப்பா' எனக்கு அதனது வரலாற்றைச் சொல்லிச் சிரித்தார்.

அதன் கீழேதான் புதுமைப்பித்தன், உட்படப் பல பல இலக்கிய நெஞ்சங்கள் ஒரு தடவை சந்தித்துக் 'கதைத்ததாகவும்' சரித்திரம் புகன்றார். நானும் பிரமிப்புற்றவனாக அக்கரையில் நின்று கொண்டு, முன்னால் பரந்து விரிந்து தெரியும் இந்து மா சமுத்திரத்தைக் கண்ணுற்று மகிழ்ந்தேன்.

தமிழ்ப் படைப்பாளிகளுக்கு நீண்ட நெடிய பாரிய வரலாறு உண்டு. பகைமைத் தொடர் பகையாக வளர்த்தெடுக்காமல், காரசாரமாக எதிராளியை மறைமுகமாகக் குத்திக் குதறி எடுத்த ஒரே நேரில் சந்திக்கும் வேளைகளில் மிகமிகப் பவ்வியமாகவும் கண்ணியமாகவும் பழகிக் காத்த பல பல தலைவர்கள் இன்று கூட இருந்து வருகின்றனர்.

இவைகள் நமக்கொரு முன்மாதிரியாகத் திகழட்டுமே!

— டொமினிக் ஜீவா

PUBLIC LIBRARY
JAFFNA



# வட புலத்தில் இன்று புதியதோர் ஆரோக்கியமான இலக்கியச் சூழ்நிலை, உருவாகி வருகின்றது!

நீண்ட நெடுங்காலமாகப் பாரியதொரு யுத்தச் சூழ்நிலைக்குள் சிக்கிப் போய்த் திணறித் திக்காடிப் போயிருந்த வட புலத்து இலக்கியச் சூழ்நிலை, இன்று மெல்ல மெல்ல ஆரோக்கியமானதொரு புதிய ஆக்க நிலைக்கு மாற்றமடைந்து வருவதைக் கண்டு, மெய்யாகவே ஆழ்ந்த மகிழ்ச்சியடைகின்றோம், நாம்.

யாழ் பிரதேச எழுத்தாளர்களுக்கென்றே ஒரு சொந்தமான கட்டடத்தை முன்னரே பெற்றுக் கொண்டு, அதில் பிரகாசமாகவே இயங்கி வந்தவர்கள், நமது எழுத்தாளச் சகோதரர்கள், அந்த நிலையத்தைப் புதுப்பித்து, வெளியே விளம்பரப் பலகை மாட்டி, அந்த மண்டபத்திலேயே தமது இலக்கிய நடவடிக்கைகளை ஒட்டு மொத்தமாக முன்நின்று நடத்தி வந்துள்ளனர், நீண்ட காலமாக.

யுத்தம் சகல முன்னேற்றங்களையுமே நாசப்படுத்திவிட்டது.

இன்று மறுபடி புத்தாக்கத்துடனும் புத்த விழிப்புடனும் தொடர்ந்து ஐக்கியமாக ஒருமுகப்பட்டு இயங்க முன் வந்துள்ளதைக் கேள்விப்பட்டு மெய்யாகவே மகிழ்ச்சியடைகின்றோம்.

பொருளாதார ரீதியாக உதவிகள் கிடைக்கவும் பயன்படுத்தி முன்னேறவும் வாய்ப்புகள் பொறுப்புடன் தரப்பட்டுள்ளன. பேரழிவுகளை, ஏனைய நாசங்களைப் பற்றித் திரும்பவும் திரும்பவும் நாம் பேசிக் கொண்டிருக்கக் கூடாது. அது ஓர் ஆரோக்கியமான இனத்தைக் கட்டியெழுப்ப உதவப் போவதுமில்லை.

புதிய தமிழனை- புதியதொரு தமிழ் மரபை நாம் உருவாக்கியே ஆக வேண்டும். அதற்கு நமது உழைப்பையே அர்ப்பணித்து உருவாக்க வேண்டும்.*

படைப்பாளிகளிடையே கருத்து முரண்பாடுகள் இயல்பானதுதான். அந்த முரண்பாடுகளை நாம் பகை முரண்பாடுகளாக வளர்த்தெடுத்து விடக் கூடாது.

இன்று தேசமளாவிய ரீதியில் தமிழ்ப் படைப்பாக்கம் புதிய புதிய கோணத்தில், ஆரோக்கியமான திசை வழிகளில் வளர்ந்து வருவதை நாம் திரும்பிப் பார்க்கின்றோம்.

- சிறப்பாக இருக்கின்றது!

இந்த வளர்ச்சியை நாம் தொடர்ந்து முன் கொண்டு செல்ல வேண்டும். இன்று வாரம் ஒரு புதிய நூல் வெளிவருகின்றது. பெண்கள் தமது திறமையை எழுத்துலகில் காட்ட, நம்மையெல்லாம் சிந்திக்க வைக்கின்றனர். விற்பனைச் சந்தை தான் கஷ்டம்.

எனவே, நமக்கெல்லாம் பொறுப்புணர்ச்சி மேம்பட வேண்டும். அர்ப்பணித்து உழைக்க முன்வர வேண்டும். கிடைத்துள்ள அருமையான சந்தர்ப்பத்தைத் தக்க வழிகளில் பயன்படுத்துவோம். ஒரு புதிய செழிப்பான பண்பாட்டை உருவாக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டைப் படம்

# கொடகே- இலக்கிய வளர்ச்சியின் இணையற்ற பங்காளன்

–திக்குவல்லை கமால்

தமிழ் இலக்கியவாதிகள் மத்தியில் இன்று அதிகம் உச்சரிக்கப்படும் பெயர்தான் கொடகே. வெளியீட்டாளராகவும் விற்பனையாளராகவும் மாத்திரமன்றி, 'கொடகே தேசிய இலக்கிய விருது விழா'வைக் கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேலாக நடாத்தி, சிங்கள இலக்கியவானில் பிரகாசிப்பவர்.

இவ்வாண்டு விழாவின் போது, தமிழ் இலக்கியத்திற்கு அரும் பணியாற்றி வரும் டொமினிக் ஜீவா, ஏ. இக்பால், கோகிலா மகேந்திரன் ஆகியோருக்கு பொற்கிழி வழங்கிக் கௌரவித்தார். இனிவரும் ஆண்டுகளில் தமிழ் இலக்கியப் படைப்புக்களுக்கும் கொடகே விருது காத்திருக்கின்றது.

இந்த வெற்றிக்கு நல்லதொரு ஆரம்பமாக இவ்வருட ஆரம்பத்தில் இடம் பெற்ற எழுத்தாளர் சந்திப்பு அமைகிறது. தேசிய நூலக ஆவணவாக்கல் சபை கருத்தரங்கு மண்டபத்தில் இந்நாட்டின் சிரேஷ்ட எழுத்தாளர்கள் முப்பது பேர் கலந்து கொண்டு தமது உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டனர். அதன் விளைவாகவே சிங்கள தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் உதயமானது. அதற்கு கொடகே நிறுவனமே தொடர்ந்து அனுசரணை வழங்குகிறது.

இப்படி நல்ல மனசு கொண்ட **சிரிசுமன கொடகே** பற்றி மேலும் அறிந்து கொள்ள ஆவலேற்படுகிறதல்லவா?

இவர் மாத்தறை பாலடுவ என்ற கிராமத்தில் பிறந்தவர். சகோதர, சகோதரிகளென்று எல்லாம் ஒன்பது பேர். அதில் ஆறாம் உருப்படி இவர். இவரது தகப்பனான கொடகே ஜேம்ஸ் அப்புஹாமி நிலபுலனற்ற ஒரு கூலி விவசாயி.

விறாந்தை, சாலை, இரு அறைகளென்று களிமண் சுவரும் ஓலைக் கூரையும் கொண்ட வீடு, பெரும்பாலும் எல்லா வீடுகளும் அப்படித்தான். போதாக் குறைக்கு அடிக்கடி வெள்ளத்தினால் பாதிக்கப்படும் கிராமம்.



சிறுவயதில் சிரிசுமன கொடகே தொடர்ச்சியாக வலிப்பு, சோகை போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டார். எல்லோரும் 'நோயாளிப் பிள்ளை' என்றே அழைத்து அனுதாபம் காட்டினர். ஒரு கிராமத்து பரியாரியிடம் இவரை கூட்டிச் சென்றனர். அவர் நாடி பிடித்துப் பார்த்துவிட்டு, மருந்து கொடுக்கவில்லை. ''நன்றாகச் சாப்பாடு கொடுங்கள்'' என்றார். 'நன்றாக' எப்படிப் போனாலும் உரிய சாப்பாட்டு வேளைகளை நகர்த்திக் கொள்வதே அந்தப் பெரிய குடும்பத்திற்குக் கஷ்டமாகவிருந்தது.

நோய் காரணமாகத் தனது பாடசாலை வாழ்வு இல்லாமல் போய்விடுமோவென்று அவர் வெகுவாகக் கவலைப்பட்டார். 'நோயாளிக்கு என்ன படிப்பு?' என்ற பாங்கிலேயே குடும்பத்தவர்களும் நடந்து கொண்டனர். எப்படியாவது பாடசாலைக்குப் போக வேண்டுமென்ற ஆவல் அவரை ஆட்டிப் படைத்தது.

1942ல் பாலடுவ குணரத்ன வித்தியாலயத்தில் அரிச்சுவடி வகுப்பில் அவர் சேர்க்கப்பட்டார். வகுப்பில் பண்பான, திறமையான மாணவராகவே காணப்பட்டார். ஆசிரியர்களின் அன்பு அவருக்குக் கிட்டியது. இருந்தும் ஏழாந் தரத்திற்கு வந்த போது, பாடசாலையைக் கைவிட்டு விடவேண்டுமென்ற எண்ணம் அவருக்கேற்பட்டது.

எப்படியோ சிரிசுமன கொடகேக்கு பதினைந்து வயதாகிவிட்டது. அவர் வெகுவாகச் சிந்திக்க ஆரம்பித்தார். 'என்னைக் கற்பிக்கப் பெற்றாரால் முடியாது. எல்லோருமே கூலி வேலைதான் செய்கிறார்கள். பெற்றார், சகோதரருக்குப் பாரமாக நின்று படிப்பதை விட, நானும் எங்காவது சென்று உழைப்பது தான் நல்லது'- தன்மானம் தலை நிமிர்ந்தது.

கட்டிளம் பருவத்திலேயே அவருக்கு வாசிப்பில் ஆர்வமேற்பட்டு விட்டது. முதற் கட்டத்தில் பியதாஸ சிரிஸேனவின் நாவல்களே அவரது கரமெட்டின. நிலாச் சுவாந்தர்களும் பணக்காரரும் மக்கள் மீது செலுத்திய மேலாதிக்கத்திற்கு எதிரான கருத்துக்களை அந்நாவல்கள் முன்வைத்தன. கூடவே, மேற்கத்தேய கலாசாரத்தைப் பெரிதாக எண்ணிச் சுய கலாசாரங்களை மறந்து வாழும் சிங்களவர்களைப் பற்றிய கண்டனத்தையும் அவை தெரிவித்தன. இவை சமகால வாழ்க்கையோடு ஒட்டியதாக இருந்ததால், அவை அவரைச் சிந்திக்கத் தூண்டின. இப்படியாக அவரது வாசிப்பு வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு மத்தியிலும் பின் தங்கிவிடவில்லை.

பள்ளி செல்லும் பருவத்திலிருந்தே, மாட்டு வண்டிகளுக்குப் புல்லுக் கட்டு விற்றல், கீரைக் கட்டுக்களைச் சுமந்தபடி சந்தைக்கு மட்டுமன்றி, வீடு வீடாகவும் சென்று விற்றல், பாலத்தடியில் இளநீர் விற்றுத் தாயாருக்கு உதவிய அனுபவம் அவருக்குண்டு. எப்படியோ வீட்டிலிருந்து தொழில் தேடி வெளியேறிவிட்டார். பல இடங்களில் பல வேலைகளைச் செய்து கொண்டலைந்து, ஒரு கட்டத்தில் தள்ளு வண்டியில் விறகு விற்றுக் கொண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கும் போது, தற்செயலாக உறவினர் ஒருவரின் கண்களில் பட்டுவிட்டார்.

அவர் ஒரு அச்சுக் கந்தோரில் புத்தகம் கட்டும் வேலை பழகச் சேர்த்து விட்டார். கூடவே, அவர் அச்சுவேலை தொடர்பாக சில முன்னறிவுகளைப் பெற்றுக் கொள்ளவும் அது வாய்ப்பாகியது. எவ்வாறாயினும், அவரது எதிர்காலப் பாரிய வளர்ச்சிக்கான அடிக்கல் அங்குதான் நடப்பட்டதெனலாம்.

இருந்தாலும், அங்கு மிகவும் குறைவான சம்பளமே வழங்கப்பட்டது. தனிப்பட்ட வகையில் தொழில் பார்த்தால் இதைவிட அதிகம் உழைக்கலாமென்ற நம்பிக்கை அவருக்கேற்பட்டது. அதே வேளை 'நல்லமுறையில் புத்தகம் கட்டுபவர்' என்ற நற்பெயர் மெல்ல மெல்லப் பரவலாகி வந்தது.

தெமடகொடையில் புத்தகம் கட்டும் வேலையை ஆரம்பித்த போது, வித்தியோதயப் பல்கலைக் கழக மாணவர்களதும், நூலகப் புத்தக வேலைகளும் அவரைத் தேடி வந்தன. தொடர்பும் வளர்ந்தது.

"உங்களிடம் நல்ல நுணுக்கமிருக்கின்றது. புத்தகம் கட்டிக் கட்டியிருக்காமல் புத்தகம் வெளியிட ஆரம்பித்தால் என்ன?" என்று நல்ல நோக்கில் பலரும் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

அந்த நல்லெண்ணத்தை மையமாகக் கொண்டு நூல் வெளியீட்டு முயற்சியில் இறங்கினார். முதலில் ஐநூறு பிரதிகள் அச்சிட்டு வேறு நிறுவனங்களுக்குக் கொடுத்து அவற்றை விற்பனை செய்து வந்தார். அது அவ்வளவாக வெற்றியளிக்கவில்லை. பின்னர் கூலிக்குக் கடையெடுத்து வெளியீடு, விற்பனை, புத்தகம் கட்டுதலென்று ஒரே அறையில் எல்லாம் கவனித்து வந்தார்.

படிப்படியாக, இப்பொழுது மருதானையில் அமைந்துள்ள **கொடகே புத்தக மாளிகை** அமைந்துள்ள இடத்தைச் சொந்தமாக வாங்கக் கூடியளவுக்கு வளர்ந்தார்.

1970ல் ஆண்டுக்கு ஐந்து நூல் தான் வெளியிட்டார். இது 1997 ஆகும் போது, ஆண்டுக்கு நானூறு என்று வளர்ந்தது. 1986 முதல் அதிக நூல்களை வெளியிடும் நிறுவனத்திற்கான இலங்கை சாகித்திய மண்டல விருது இன்று வரை தொடர்ச்சியாகக் கொடகே நிறுவனத்திற்கே கிடைத்து வருகிறது.

வெளியீட்டு நிறுவனம், புத்தக மாளிகை, அச்சகம், வாகனங்கள், நூற்றுக்கு மேற்பட்ட ஊழியர்களென்று வெகுவாக வளர்ந்து புத்தக அதிபதியாக சிரிசுமன கொடகே அவர்கள் வளர்ந்து விட்டார்.

இரண்டு அரசியல் வாதிகள் அவரது மனதில் நிறைந்துள்ளனர். அவர்களிடமிருந்து கற்றுக் கொண்டதை அவர் தன் வாழ்வில் பிரயோகித்தும் வருவர்.

ஒருவர் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்ஹ. வெள்ளப் பெருக்கினால் பாலடுவ கிராமம் பாதிக்கப்படும் போது டாக்டர்



தனது தொண்டர்களோடு வந்து விடுவார். எல்லா வீடுகளுக்கும் அரிசி, பருப்பு, சீனி போன்றவற்றைக் கொடுத்துதவுவார். வறுமைப்பட்ட மக்களின் உயர்ச்சிக்காக பல சேவைகள் செய்துள்ளார். அந்தச் சேவையுணர்வு கொடகேயின் மனதை வெகுவாகப் பாதித்தது.

அடுத்தவர் வீரக்கெடியவைச் சேர்ந்த டீ. ஏ. ராஜபக்ஷ அவர்கள். எப்பொழுதுமே அவரது வீட்டுக்கு உதவி கேட்டுச் சனங்கள் வந்தபடியிருப்பார்கள். எல்லோருக்குமே மனம் கோணாமல் உதவுவார்கள். கூடவே, நீளமான மேசையில் உணவு, பானங்கள் நிரம்பியிருக்கும். வருபவர்கள் எவரும் சாப்பிடாமல் செல்லக் கூடாது. இந்த உதவி செய்யும் மனப்பான்மையும் கொடகேயின் மனதில் ஒட்டிக் கொண்டுவிட்டது.

இவரது பரவலான நூலபிவிருத்திச் செயற்பாட்டுக்கு, சேவை உணர்வும் உதவும் மனப் பான்மையுமே காரணமென்றால் அதில் தவறில்லை. திடமான இவரது சேவைக்காகப் பல்வேறு நிறுவனங்கள் மூலம் ஐம்பதுக்கு மேற்பட்ட விருதுகளைப் பெற்றுள்ளார்.

சார்க் நூலபிவிருத்தி சபை, சார்க் நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கு வாழ்வில் ஒரேயொரு தடவை, ஒரு நாட்டுக்குப் பதினொரு ஆண்டுகளுக்கு ஒருமுறை வழங்கும் உயர் விருது நமது நாட்டில் முதற் தடவையாகக் கொடகே அவர்களுக்கே கிடைத்தது. இலங்கை அரசும் தேசபந்து விருதளித்துக் கௌரவித்துள்ளது.

தனது ஆரம்பகால வாழ்க்கையை என்றுமே மறக்காத பண்பாளர் இவர். என்றும் தூய வெண்ணுடையில் கவர்ச்சியான எளிமையுடன் காணப்படுவார். எவரையுமே புன்னகைத்து அன்போடு வரவேற்பார். எவருடைய மனதும் தனது நடத்தையால் நொந்துவிடக் கூடாதென்பதில் அக்கறை மிகுந்தவர். பலவிதமான எழுத்தாளர்கள் நாளாந்தம் அவரைச் சந்திக்க வருவர். 'தனது ஆக்கம் மிகச் சிறந்தது' என்ற எண்ணத்துடனேயே அங்கு வருவார்கள். அவரது அணுகுமுறையே அலாதியானது.

சிங்கள- தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் அமைக்கப்பட்ட பின்னர், அதன் குழுக் கூட்டங்கள் அவரது அறையிலேயே நடைபெறும். எதையும் அவர் பொறுப்பெடுத்து அடுத்த கட்ட இயக்கத்துக்கு வழி செய்து விடுவதுடன், அடிக்கடி அதுபற்றி விசாரித்து பின்னூட்டல் செய்து கொண்டிருப்பார். தேயிலைச் சாயமும் கருப்பட்டியும் தந்து உபசரிக்கத் தவறமாட்டார். சின்னச் சின்னப் பிஸ்கட் பக்கற்றுக்களெல்லாம் அவரது கபேட்டில் எப்பொழுதும் தயாராகவிருக்கும். சில வேளை அவரே தேநீர் தயாரித்துக் கொண்டு வரவும் செய்வார்.

என்றும் ஒரே சீரான பழக்க வழக்கங்களை மேற்கொண்டு வாழ்ந்து வருபவர். அதிகாலை நாலரை மணிக்கே எழுந்து கடவுள் வணக்கத்தில் ஈடுபடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைத் தொடர்ந்து வெல்லம்பிட்டியிலுள்ள அவரது வீட்டைச் சுற்றி வாழும் பறவைகளெல்லாம் அவரைத் தேடி வரும். அவற்றுக்கு உணவு கொடுத்து இன்புறுவார். எல்லா விடயங்களிலும் இப்படியொரு ஒழுங்கு முறை அவரிடமுண்டு. அவர் எடுக்கும் முடிவுகள் தீர்க்கமானவை. அதனைக் காப்பாற்றவும் தவறமாட்டார்.

கட்டிளம் பருவத்தில் அவர் விருப்பத்தோடு தென்னம் பதநீர் குடிப்பார். அவரது அப்பா ஒவ்வொரு நாளும் கொண்டு வருவார். ஒருநாள் முட்டியிலிருந்த பதநீரைக் குடித்தவர் சற்று நேரத்தில் வெறித்து அப்படியே வீழ்ந்துவிட்டார்.

அம்மாவுக்குப் பெரும் கவலை மேலிட்டது. இவனும் கள்ளுக் குடிக்கத் தொடங்கிவிட்டானே என்றுதான். மயக்கம் தெளிந்த பின் அதுபற்றி விசாரித்தார்.

''அம்மா எனக்குத் தெரியவில்லை. பதநீர் என்று நினைத்துத் தான் குடித்தேன்'' என்றார்.

''உண்மையாகவா?'' என்று சந்தேகத்தோடு கேட்டார்.

''ஆம் அம்மா. இனிமேல் நான் பதநீர் கூடக் குடிக்கமாட்டேன். இது சத்தியம்''- என்று அம்மாவுக்கு உறுதியளித்தார்.

இன்றுவரை அதைக் காப்பாற்றவும் செய்கிறார்.

பன்சலையோடு தொடர்பு பட்ட சீலம் மிகுந்த வாழ்வு இன்று நேற்று ஆரம்பித்ததல்ல. சிறுவயதில் விகாரைச் சூழலில் அமர்ந்து தரும நூல்களை வாசிப்பார். தெளிவான அவரது வாசிப்பைச் சுற்றி வர அமர்ந்து கிராமத்து மக்கள் கேட்டுக் கொண்டிருப்பார்கள்.

எல்லோரையும் ஒன்றுபோல் நேசிப்பவர், அவர். கடந்த காலக் கசப்புணர்வுகளை கவலையோடு நோக்குபவர். எல்லோரும் ஒரு தாய் மக்களாக அன்போடு வாழ வேண்டுமென்று சொல்வார்.

தமிழ் பேசும் மக்களுக்குத் தனது சக்திக்குட்டபட்ட வகையில் சேவையாற்றுவதில் அவர் முனைப்போடிருக்கின்றார். அதன் சமிக்ஞைகளை ஏற்கனவே காட்டியிருப்பதை நாமறிவோம்.

கொடகே வெளியீட்டு நிறுவனத்தின் மூலம் முன்பே பல தமிழ் நூல்கள் வெளிவந்துள்ளன. இனிவரும் காலத்தில் சிறந்த தமிழ் நூல்களை வெளியிட. சிங்கள- தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தோடு தொடர்புபட்டுள்ள எழுத்தாளர்கள் உதவ வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சிரிசுமன கொடகே என்ற தனிமனிதனின் மனிதநேய அரவணைப்பு, ஏனையவர்களுக்கும் அனைத்து நிறுவனங்களுக்கும் ஏன் இந்த நாட்டுக்கும் கூட முன்மாதிரியானதென்பதில் எந்தச் சந்தேகமும் கிடையாது.

அவர் வாழ்க! அவர் பணி வெல்க!



படத்தின் பெயரைத் தொடர்ந்து 'இலக்கிய வடிவில் ஒரு திரைக் காவியம்' என்ற வாக்கியங்களையும், அது எழுதப்பட்டிருந்த வெளியின் கலைநய அமைப்பும் வண்ணச் சேர்க்கையும் என்னைக் கணம் பரவசத்தில் ஆழ்த்தின. பின்னுக்கு அமர்ந்திருந்த இளம் பெண் ''நல்லாய்ச் செய்கிறாங்கள்'' என்று சொல்வதும் காதில் விழுந்தது. அதை ஆமோதிப்பது போலவுமிருந்தது.

சற்று நேரங் கழிய அப்பெண்ணின் தகப்பனார் ''பேய்த்தனமா இந்தப்படத்திற்கு வந்திட்டம். சொன்னாக் கேட்டால் தானே? ஏதாவது விஜேயின் படத்திற்குப் போயிருக்கலாம்'' என்றார். இன்னும் சற்று நேரங்கழிய அருகிலிருந்த இளந்தாரிப் பையன் மொபைல் போனை எடுத்து ஏதோ செய்யத் தொடங்கினான். முன்வரிசையில் இருந்த நெடுவல் பையன் தனக்கு முன்னிருந்த சீட்டில் காலைத் தூக்கிப் போட்டபடி கண்ணயர்ந்தான்.

அவர்களைக் குறை சொல்லிப் பிரயோசனம் இல்லை. இது அவர்களுக்கான திரைப்படம் அல்ல. அவர்கள் ரசனை வேறானது. சேரனின் படைப்புலம் வித்தியாசமானது.

# நாவலின் அநுபவத்தைத் திரையில் தர முயலும்

# 'பொக்கிஸம்'

**—எம். கே. முருகானந்தன்**

ஏற்கனவே சேரனின் 'தவமாய்த் தவமிருந்து' பார்த்திருந்ததால், ஒரு நீண்ட திரைப்படத்தைப் பார்ப்பதற்கு மனம் தயாராகவே இருந்தது. ஆயினும், சில காட்சிகள் மிக நீளமாகவும், பொறுமையைச் சோதிப்பதாகவும் இருப்பதை மறுக்க முடியாது. சில வசனங்களும் கூட, மிக விஸ்தாரமாக அலுப்பூட்டும் வகையில் இருந்தன. இறுதியில் நதீரா பேசுவது தெளிவாக விழங்கவில்லை. திரையரங்கின் ஒலி, ஒளி அமைப்புகள் மோசமாக இருந்ததை இதற்குக் காரணமாகச் சொல்ல முடியாது. அக்கறை எடுக்காத டப்பிங் என்றே எண்ணுகிறேன்.

வழமையான தமிழ் திரைப்படங்கள் போலவே பொக்கிஸத்தின் ஆரம்பக் காட்சியும் இருக்கிறது. நவயுகக் காதலனும் காதலியும் மொபைலில் கதைத்து, ஒருவரை ஒருவர் சீண்டுகிறார்கள். SMS அனுப்புகிறார்கள். மோட்டார் சைக்கிளில் சுற்றுகிறார்கள். விட்டுக் கொடுப்புகள் குறைந்த, அதீத எதிர்பார்ப்புகளுடன் கூடிய காதல்.

ஆனால், சற்று நேரத்தில் படத்தின் போக்கு முற்றாக மாறிக் காவியக் காதலுக்குள் நுழைகிறது. சுமார் முப்பது வருடங்களுக்கு முன்னரான ஒரு காலத்திற்குள் நாம் பயணிக்கிறோம். SMS என்ன டெலிபோனும் Id Call ஸூம் இலகுவாகக் கிடைக்காத கால கட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதங்கள் ஊடாக மட்டுமே உறவு களையும், சிலரின் காதலைக் காக்கவும் வளர்க்கவும் வேண்டிய நிலை.

தந்தை எழுதியதும், தந்தைக்குக் கிடைத்ததுமான சில காதல் கடிதங்களை யும் அவரின் டயறியையும் இந்த மகன் படிக்கிறான். காதலை இழந்த தந்தையின் சோகத்தைப் புரிந்து கொள்கிறான். அவரின் காதலியைத் தேடிக் கண்டு பிடி த்து அக் கடிதங்களை அவளிடமே சேர்க்க முடிவெடுக்கிறான். பின்னோக்கிய பார்வை யாகப் படம் விரிகிறது.

அன்றைய சென்னை, கல்கத்தா என மறைந்த ஓர் கனவு உலகினுள் எம்மை இழந்து விடுகிறோம். மிக அற்புதமான கலையழகோடு கூடிய அரங்க அமைப்புப் படத்தின் வெற்றிக்கு நிறையவே கை கொடுக்கிறது. காரை உதிர்ந்த, மங்கலான வண்ணம் தீட்டப்படாத சுவர்கள். புகை கக்கி சுக்கு சுக்கு என ஓடும் புகைவண்டி, மின்சாரத்தில் ஓடும் டிராம் வண்டிகள், சைக்கிள் ரிக்ஷா, மண்ணெணய் மேசை விளக்குகள், தொப்பி போட்ட சிவத்தக் கூடாக எழுந்து நிற்கும் தபால் பெட்டி, இப் படி எத்தனையோ சொல்லிக் கொண்டே போகலாம். மிக நுணுக்கமாக இறந்த கால த்தை எம் முன் உயிரோடு இயங்க விட்டி ருக்கிறார்கள். வைரபாலனின் கைத்திறன் படத்தின் மிகப் பெரிய பலம்.

ஆழ்ந்த காதலை வெளிப்படுத்தும் திரைப்படம் இது. வெறும் பாலியல் கவர்ச்சி யான காதல் அல்ல. தி. ஜானகிராமனை யும், பாரதியையும் ஆழ்ந்து ரசிக்கக் கூடி யது தான்.

அவர்கள் இருவரிடையே பிறந்த காதல், பொதுவுடமை பற்றிப் பேசக் கூடிய ளவு அறிவார்ந்த உறவு. மருத்துவமனை யில் நேரில் சந்தித்த போது பெற்ற இணக் கம், கடிதங்களூடாக இறுக்கம் பெறுகிறது. "உங்களைப் பார்க்க வேண்டு போலிருக்கி றது" என்று நதீரா சொன்னவுடன் கல் கத்தா, மற்றாஸ், நாகூர் என நெடும் பய ணம் மேற்கொண்டு, முன்பின் அறிமுகம் இல்லாத ஊர்ப் பாடசாலை வாசலில் அவளுக்காகக் காத்து நிற்க வைக்கிறது.

அவளின் தகப்பன் "இஸ்லாம் எமது அடையாளம்" எனத் தமது தனித்துவத்தில் நம்பிக்கை கொண்டவர். இவன் ஹிந்து. இந்த நிலையில் இவர்கள் காதல் கனி வதற்கு வழியே இல்லை என நாம் நினைத்திருக்கும் போது, அவளின் தகப் பன் எதிர்பாராத விதமாகச் சம்மதம் தெரி வித்து விடுகிறான்.

திருமணம் நிச்சயமான காதல், இலக் கிய மணம் கமழும் கடிதங்களில் தொடர் கிறது. ஆனால், திடீரென அவளிடமிருந்து கடிதங்கள் வராது நின்று விடுகிறது. காரணம் புரியாது திகைக்கின்றான். நேரில் சந்தித்து அறிவதற்காக மீண்டும் நாகூருக் குப் பயணப்படுகிறான். அவளது வீட்டில் அவர்கள் இல்லை. வேறு குடும்பம் குடியி ருக்கிறது. எங்கு போனார்கள் என்பது எவருக்கும் தெரிந்திருக்கவில்லை.

கனிந்து விட்டதெனக் களித்திருந்த நிலையில் காரணம் புரியாத பிரிவு, எங் கென்றும் ஏனென்றும் தெரியாது காணா மல் போய்விடும் காதலியைத் தேடுகிறான் லெனின். ஆம் அவன் பொதுவுடமைக் கொள்கையில் ஊறியவரின் மகன். அதனால் தான் அப் பெயர். தனது காத லிக்கு கம்யூனிசம் பற்றிய புத்தகத்தைப் பரிசளிக்கவும் இஸ்லாமியப் பெண்ணான



அவள் அதனை ஏற்றுக் கொள்ளவும், படிக்கவும் புரிந்து விவாதிக்கவும் கூடியள விற்கு அவர்களின் காதல் வித்தியாச மானது.

காதலுக்குக் கண் இல்லை என்பார் கள். கண் மட்டுமல்ல, புத்தி, பகுத்தறிவு யாவும் பேதலித்துவிடுகிறது. லெனின் தான் காதலிக்கு எழுதிய கடிதங்கள் ஒழுங்காகத் தபாலில் சேருகிறதா அல்லது எங்காவது தவறிவிடுகிறதா என்ற அங்க லாய்ப்புடன் கடிதம் போட்ட தபால் பெட்டிய டியில் காத்திருப்பதும், தபால் ஒழுங்காகப் பயணப்படுகிறதா என அவதானிக்கத் தபால்காரன் பின்னே ஓடுவதும், தபாலா பீசில் அந்தத் தபால் பை தமிழ் நாட்டுப் பொதியில் சேருகிறதா என நோட்டமிடுவ தும், இவற்றை அவதானித்த அந்த ஊழி யர்கள் முன் அசடுவழிய நிற்பதும் சிரிக்க வைத்தாலும், சற்று அசட்டுத்தனமான ஜோக்குகள் என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். தபால்காரனின் உடைகள், அவனின் சைக்கிள், மற்றும் மத்திய தபா லாபீசின் பிரமாண்டம் ஆகியன எம்மை அசர வைக்கின்றன.

ஆனால், லெனின் அசட்டுத்தனமான நடத்தைக்குப் பின்னே நிற்கும் காதலின் அழுத்தம் மறக்க முடியாதது. காதலின் தீவிரம் ஒவ்வொரு பிரேமிலும் ஆரம்பம் முதல் வெளிப்படுகிறது. ஆயினும், பிற்பகுதியில் பிரிவின் துயரம், ஏக்கம், திகைப்பு அனைத்தும் முனைப்புறுகிறது.

உண்மையில் இவற்றை வெளிப்படுத்த முடியாது சேரன் திணறுகிறார். ஆனால், நடிப்பின் போதாமையை நாம் உணராத வாறு கமராவின் கோணங்களும், காட்சிய மைப்புகளும் நிரவி மறைத்து விடுகின்றன.

வெறுமனே நிரவுவதற்கு மேலாக உச்சத் திற்கு எடுத்துச் செல்கின்றன. மணற் தரையில் தனது தோற்பை அனாதரவாகக் கிடப்பதையும் உணராது, கைகள் தாறு மாறாக வீசி எறிந்து கிடக்க, ஒரு கால் மடி ந்து மறுகால் நீண்டு கிடக்கும் தோற்றம் மனதைத் துயரத்தில் தோய வைக்கின் றன. காட்சிப் புலன் எழுப்பும் உணர்வுக ளுக்குத் துணையாகப் பின்னணி இசை அமைந்திருந்தது. சபேஸ் முரளியின் பின்னணி இசை அற்புதமாக அமைந்து, பார்வையாளர்களின் உணர்வோடு உணர் வாகக் கலக்கிறது.

நதீராவாகப் பத்மப்பிரியாவின் உடல மைப்பும், மேக்அப்பும் அசல் இஸ்லாமியப் பெண்ணாகவே ஆக்கிவிடுகின்றன. தலையை மேவி மொட்டாக்கிட்ட சேலைக் குள்ளால் எட்டிப் பார்க்கும் அவளது பார் வையும் அழகும் அபாரம். ஆயினும் இறுதிக் கிளைமாக்ஸ் காட்சியில் வயது முதிர்ந்த பெண்ணாக நடிப்பும் குரலும் தோற்றமும் தேறவில்லை.

அவளின் தகப்பனின் நடிப்பு மிகச் சிறப்பாக இருக்கிறது. சில காட்சிகளில் மட்டும் வந்தாலும், மனதில் நிற்கிறார். தான் இல்லாத நேரத்தில் மருத்துவ மனை யில் அனுமதிக்கப்பட்டிருக்கும் மனை வியை அவர் அனுதாபத்துடன் பார்க்க வில்லை. வீணாக அங்கு சேர்ந்திருப்பதா கக் குற்றம் சாட்டும் தோரணையில் பேசுகி றார். ஆனால், அந்த நேரத்தில் லெனின் தகப்பன் அங்கு வந்துவிடச் சட்டெனப் பேச்சை மாற்றி, தான் இல்லாத நேரத்தில் தனது மனைவிக்கும் மகளுக்கும் முற் பணம் ஈறாகக் கைகொடுத்து உதவிய தைப் பாராட்டுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டென முகபாவங்களையும் பேச்சையும் மாற்றி தனது கடைத்தனத்தை மிக அழகாக வெளிப்படுத்துகிறார். வழமையான வில்லன்கள் போல இல்லை. வில்லன் என்ற சொல்லைப் பயன்படுத்துவது கூடத் தவறு. தனது மகளின் எதிர்காலம் சிறப்பாக அமைய வேண்டும் என்பதற்காகத் தனது பணம், சமூக அந்தஸ்து, பதவி ஆகிய கட்டுகளுக்குள் நின்று செயற்படும் ஒரு சாதாரண மனிதன். ஆனால், பார்வையாளர்களின் வெறுப்பிற்கு ஆளாகிறார். அதுவே அவரது வெற்றிக்குச் சான்றாகும்.

சேரனின் தகப்பனாக வரும் விஜயகுமாரது நடிப்புப் பண்பட்டது. தனது பாத்திரத்தை உணர்ந்து நடிக்கிறார். அவருக்குக் கைவந்த வழமையான பாத்திரம்.

இது சேரனின் திரையுலக வாழ்வின் முக்கிய படம் என்பதில் சந்தேகம் இல்லை. தனது முழுத் திறமைகளையும், ஆற்றலையும் பயன்படுத்தி அற்புதமான கலைப்படத்தைத் தர முயன்றிருக்கிறார். திரையுலகில் நல்ல நெறியாளராகவும், அக்கறையுள்ள நடிகனாகவும் அவர் பெற்ற அனுபவத்தையும் படம் முழுவதும் உணர முடிகிறது. தமிழகத் திரைப்படத்தை அதன் உச்சத்திற்கு இழுத்துச் செல்ல முயலும் ஆர்வத்தையும் புரிந்து கொள்கிறோம்.

ஆயினும், திரைக்கதையின் அமைப்பும், வசனங்களும் கை கொடுக்கவில்லை. ஒரு நல்ல நாவலுக்குரிய அனுபவத்தையே தர முயல்கிறார். ஒரு நல்ல நாவலைப் படிக்கக் கூடிய ரசனையும், அதற்கு நேரம் ஒதுக்கக் கூடிய மனப்பான்மையும் இன்று பெரும்பாலானவர்களிடம் இல்லை. அதற்கு மேலாக நாவல் வேறு, திரைப்படம் வேறு. அவற்றிற்கான ரசிகர்களும் வேறு. காதல் மடல்களும், அது எழுப்பும் உணர்வுகளுமே இப்படத்தின் அடிநாதமான போதும், அவையே மீண்டும் மீண்டும் வாசிக்கப்படுவதைக் கேட்டுக் கொண்டிருப்பது திரை ரசிகர்களை அயர்ச்சிக்கு உள்ளாக்கிவிடுகிறது. பிரபலமான நாவல்கள் திரைப்படமாவதுண்டு. ஆனால் இது நாவல் ஆகக் கூடிய திரைப்படம் எனலாம்.

இத்தனை குறைகள் இருந்த போதும், இது நல்ல கலைப்படம். நான் அனுபவித்ததைச் சொல்கிறேன்.

A. R. R. HAIR DRESSERS
89, Church Road,
Mattakuliya,
Colombo - 15.
Tel : 0112527219
முற்றிலும் குளிரூட்டப் பெற்ற சலூன்



# அட்சதை மனது

—ஆனந்தி

அந்த அனெக்ஸ் குடியிருப்பு மனிதர்களையெல்லாம், கட்டளையிட்டு வழி நடத்திச் செல்கின்ற மிகவும் அழகானதொரு ராஜகுமாரன் போல, அவன் இருக்கிறான். ராஜ்குமாரென்ற அவன் இயற்பெயரை இந்த லட்சணங்களுடன் சேர்த்துக் கொஞ்சம் மாற்றினால், இவன் அசல் ராஜகுமாரன் தான். அப்படி தான் ஒரு ராஜவம்சத்திலேயே வந்து பிறந்திருப்பது போலக் காலம் மாறாத அவன் சுய தோற்றங்களான நடத்தைகளிலிருந்தே அவனை அறியாமலே அவை இயல்பாக வெளிப்பட்டு வரும்.

அவனோடு நேர் நின்று பேசவே பயப்படுகிற, ஒரு பின்னடைவான தயக்கம் அங்குள்ள அனைவரையுமே பாடாய்ப் படுத்தும். இதற்குச் சுரணையோ, அவன் குடும்பம் சார்ந்த மற்றவர்களோ விதிவிலக்கல்ல. இப்படியான உறவுகளைப் பகைக்கும் ஒரு விபரீதச் சூழலும், கசப்பையே தரும் மாறுபட்ட வாழ்க்கை அனுபவங்களும், கொழும்புக்கு வந்த பிறகு, அவன் எதிர்கொள்ளும் புதிய சவால்கள். அவன் ராஜ்குமாரென்ற ராஜுவாகச் சுருங்கிப்போய் வாழ நேர்ந்தது. இதைவிடப் பெரிய கொடுமை.

அவன் வயது தானிருக்கும் ராஜுவுக்கு. அவனொரு பொறியியல் பட்டதாரி. மூன்றாம் ஆண்டு மாணவனாம். இன்னும் ஒரு வருடம் போனால், பொறியியல் மேலே மேலே பறப்பதற்குச் சிறகு முளைத்த எஞ்ஜினியராகி விடுவான். அவனின் அப்பா குமுதினிக்கு இதில் மனங் கொள்ளாப் பெருமை. அனெக்ஸ் என்ற போர்வையில் அங்கு காற்றில் கால் முளைத்துப் பறக்கவே முடியாமல் போன, பற்பல அடைப்புக் கூடுகள். அதில் மூச்சுத் திணறிச் சாகவே, இந்த யாழ்ப்பாண மண்ணின் வாசம். பார்க்கப் போனால், மண்ணும் மனிதனும் ஒன்றுதான்.

எந்த மண் நிலைத்தது என்று, இதுவரை புரியவில்லை. ராஜுவோடும் அவனின் குடும்பத்தாரோடும், சரணாகதி வெறும் புறம் போக்குப் பழக்கம் மட்டும் தான். உள்ளார்ந்த அன்பு நினைப்பில், எப்பவுமே உறவு வைத்துக் கொண்டதில்லை. அந்த அனெக்ஸ் குடியிருப்புகளை ஆளும் பெரியவராக டேனிட் ஐயா இருக்கிறார். அவர் தனியாக தான் இருப்பதால், குமுதினி குடும்பத்தோடு நல்ல நெருக்கம். குமுதினியும் ராஜுவின் சகோதரி பாமாவுமாக, அவர் வாசலில் விழுந்து விழுந்து சேவை செய்வார்கள். இதனால் அங்கு ஒட்டுமொத்த வீடுகளுமே, அவர்கள் கையில் குடி மூழ்கிப் போகிற நிலைமைதான்.

கொழும்பு வீடென்றால் சும்மாவா? விற்கப் போனால், கோடிக் கணக்கில் தேறும். அதை நினைத்துத்தான், ராஜன் இப்படியெல்லாம் வாலாட்டுகிறானோ தெரியவில்லை. அந்த வாலை ஒட்ட நறுக்க வேண்டுமென்று, யாரும் கருதவில்லை. அவர்களை அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ விட்டாலே போதுமென்ற நிலைமை தான். அவர்களும் காசு கொடுத்துத்தான் அங்கு குடியேறினார்கள். ராஜன் வாலாட்டுகிறானென்பதற்காக, எப்படி விட முடியும்? இடையில் கிளம்பப் போனால், கொடுத்த அட்வான்ஸ் பணம் தான் கிடைக்குமா? கம்பியூட்டர் படித்துக் குடும்பத்தைக் காப்பாற்றச் சரளா தினமும் வேலைக்குப் போய் வருவதால், ராஜனின் தேவையற்ற இந்தத் தலையீடுகள் குறித்து, அவள் அதிகமாக அலட்டிக் கொள்வதில்லை. அவளுக்குக் கீழே இரு தங்கைகள். அவர்கள் படிக்கிறார்கள். வயதான அப்பா அம்மா வேறு. கல்யாணமாகிற வயதில், அவர்களுக்காகவே, ஆசைகளைத் துறந்து வாழும், ஒரு தபஸ்வினி போல அவள் இருக்கிறாள். மிகவும் அமைதியாகத் தானுண்டு, தன் வேலையுண்டு என்றிருப்பவள். அவளையும் ராஜன் விட்டு வைக்கவில்லை.

அவளுக்கும் அவனுக்குமிடையில், நிகழ்ந்தது பெரிய அளவிலான ஒரு சாத்வீகப் போர். அது ஒரு துயரம் மிக்கப் பெரிய கதை. அவள் அறிந்தவரை கொழும்பென்றால் ஒரே மழைக்காடுதான். இதில் காடு எங்கே முளைத்தது? எவ்வளவு அழகான, பளபளப்பான கண்ணைக் கவரும் பளிங்கு தேசம், இந்தக் கொழும்பு மாநகரம்! அதைக் கழுவி, முகம் துடைப்பது போல, தினமும் மழைதானென்றால் எப்படிப் பொறுப்பது?

அதிலும் இருக்கிறதென்னவோ ஓட்டை வீடு. எங்கே ஒழுகுமென்று தெரியாத, ஒரு தவிப்பு நிலைமை. காசு கறக்கிற மனிதர்களுக்கு, இதில் மட்டும் கண் தெரிவதில்லை. இப்படி விலை போகிற மனித உயிர்கள் பற்றி, அவர்களுக்கென்ன கவலை? பெரிய அளவில் காசுக் கடல், கைக்கு வந்தால் போதும். உயிர்கள் மறுபுறம், ஓட்டை வீட்டிலேயே அடைப்பட்டிருக்கும் வெறும் நிழற் பொம்மைகளாய் இந்தப் பாவப்பட்ட மனிதர்கள்.

இதில் தோலுரிந்து போய்க் கிடக்கும், ஒற்றை நிழற் புள்ளி இந்தச் சரளா மட்டுமல்ல. எப்படியிருந்தாலும், பிறரை நோகடிக்கவே தெரியாத, மிக மென்மையான அன்பு மனம் அவளுக்கு. அவளுடனா ராஜன் சாத்வீகப் போர் தொடுத்தான்? அவளறியாமல் திரை மறைவில் நடந்ததே, அப்படியொரு நயவஞ்சக நாடகம். அவர்களைக் குடியெழுப்பி, ஓட ஓட விரட்டுவதற்காக ராஜன் எய்த அம்பு அது. அம்பல்ல, அட்சதை மழை.

இப்படி வருமென்று யார் எதிர்பார்த்தார்கள்? ஒரு தினம் சரளா வேலை முடிந்து, வீடு திரும்பும் போது நல்ல மழை பிடித்துக் கொண்டது. பிளாஸ்டிக் குடை தாங்காமல், அவள் தெப்பமாக நனைந்து கொண்டே, நீண்ட தூரம் பஸ் ஏறி வந்த களைப்பு- அவசரமாக நடந்து வந்து, வீட்டினுள் படியேறி வரும்போது, வெள்ளம் பெருகி வழிந்தது.

ஓரளவு மழைநீர் ஒழுகி வடியும் ஓட்டை வீடு தானென்றாலும், அணை உடைத்துப் பாய்கிற மாதிரி, இப்போது வீடல்ல, மனிதர்களே மூழ்கிப் போய்விடுமளவுக்குப் பெரு வெள்ளம், அலை பொங்கிப் பாய்கிறதென்றால், இதில் ஏதோ சூழ்ச்சி நிகழ்ந்திருக்க வேண்டுமென்று, அவள் மனவருத்தத்துடன் நினைவு கூர்ந்தாள். அவள் உள்ளே வந்து, அறைக் கதவைத் திறந்து பார்த்தால், ஒரே வெள்ளக்காடாக இருந்தது. அறை மூலையிலிருந்த, இரும்பு அலுமாரியின் தலைக்கு மேலே கூரை பிளந்து



தண்ணீராய் கொட்டுகிறது. அவளைத் தவிர, வீட்டிலுள்ள அனைவரும் செய்வதறியாது, பிரமை தட்டும் கலங்கிய முகங்களோடு, வெளித் தாழ்வாரத்தில் தஞ்சம் புகுந்து சமைந்து போய் நின்றிருந்தனர். அம்மா அவள் உள்ளே போவதைக் கண்டதும், மனம் கேளாமல் பின் தொடர்ந்து ஓடி வந்தாள்.

அவள் வருவதைத் துயரம் மிகுந்து, பார்த்தவாறே சரளா அறை வாசலில் நிம்மதியிழந்து நின்று கொண்டிருந்தாள். அப்போது குரலை உயர்த்தி அம்மா சொன்னாள்.

''இனி இஞ்சை இருக்கேலாது. வா பிள்ளை வெளிக்கிட்டுப் போவம்!''

அதற்குச் சரளா வேதனை கலந்த வரட்டுச் சிரிப்போடு, தொண்டை வரண்டு போய்க் கேட்டாள்.

''எங்கையம்மா போறது? அதுவும் இந்த நேரத்திலை? ஆர் வீட்டை போறது? பேசாமல் கிடவுங்கோ. இப்படியே கிடந்து சாக வேண்டியது தான்''

அதற்குப் பிறகு அம்மா வாயே திறக்கவில்லை. அவர்களைச் சுற்றி, மனிதர்களே ஒழிந்து போன, வெறும் காடு போல், அது அவர்களை எரித்தது.

யாழ்ப்பாண மண்ணை விட்டு, அவர்கள் இங்கு வந்தது நிம்மதியாக வாழத்தான். அதற்கே இப்போது வழியில்லையென்றால் இனி என்ன செய்வது?

சரளாவால் இதற்கு விடை கண்டறிய முடியாமல், அவள் மிகவும் களைத்துப் போயிருந்தாள். அக்களைப்பு மேலீட்டினால், பெரும் ஆயாசத்துடன் நிலை வாசலில் சரிந்தவாறே, நிம்மதியிழந்து உறங்கும் பாவனையில் விழி மூடி நிற்கையில் மூடிய அவளின் கண் பேழைக்குள், ஒளி மாறாத சிரிப்புடன் எங்கெல்லாமோ ஏகப்பிரம்மமாய் பரவி, ஊடுருவி நிற்கிற, அதே ராஜகுமாரன் தான், பளிச்சென்று முகம் காட்டித் தோன்றுவது போல், அவள் உணர்ந்தாள். வெற்றியெல்லாம் தன் பக்கமே என்று கூறுவது போல, அப்போது அவன் முகம் ஜோதிப் பிழம்பாகவே தக தகத்து, மின்னிற்று. அந்த மின்னல் உட் புகுந்து, பாய்ந்த அத்தருணமே, மறக்க முடியாத ஒரு வாழ் நாள் காயமாக அதை மனதில் சுமந்தபடி அவள் வெகுவாக மனம் வருந்தி, அழத் தொடங்கிய போது, மீண்டும் அவளின் தலைக்கு மேலே, ராஜகுமாரன் தூவிய அந்த அட்சதை மழை. அவனின் மனப்பூர்வமான இந்த வழியில் அன்பு செய்யத் துணிந்த, ஆசீர்வாத செயற்பாடுகளையெல்லாம், பொய்யாகாத சான்றுமுகமாக நிரூபித்து வெளிப்படுத்தவே, அவளின் தலைக்கு மேலே, இந்த அட்சதை மழை. அப்படித் தூவுவதாலே, சகல நற்குணங்களையுமுடைய, பிராமணவம்சத்து, உத்தம புருஷர்களில் ஒருவனே அவனும் என்றாகிவிடுமா?

இல்லையே? இப்படி முகடு கிழித்து, எங்களுக்குப் புதைகுழி தோண்டிய அவனால் அப்படி ஆகி விடமுடியுமா? அதை நினைக்கத் தனது கவலையெல்லாம் மறந்து, வாய்விட்டுச் சிரிக்கிற பாவனையில், சூழ்ந்திருக்கிற அந்தகாரத்தையே கிழித்துக் கொண்டு, அவள் முகம் ஒளி விட்டுப் பிரகாசிப்பதாய் அம்மா உணர்ந்தாள். அதை வாய்விட்டே கேட்டும் விட்டாள்.

''என்ன சரளா சிரிக்கிறாய்? ஏதும் கனவு கண்டனியோ?''

''கனவு தானம்மா! நான் இந்த மறக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கேலை. இதற்கெல்லாம் ஆர் பொறுப்பு எண்டு, எனக்கு நல்லாய் தெரியும். அதை வெளியிலை சொன்னால், நீங்கள் கொதிச்சுப் போடுவியள். இப்படி எங்களையெல்லாம் வாழ்விக்க ஓர் இராஜகுமாரன், வானத்திலை இருந்து குதிச்சு வரேலை. இஞ்சைதான், எங்கடை கண்முன்னாலை, அந்த இராஜ குமாரனின் தேர் எங்களையெல்லாம், மிதிச்சு ஒடிக் கொண்டிருக்கே! நீங்கள் காணேலையே?''

"ஆரைச் சொல்கிறாய்?"

"இதற்கு அடைமொழி வைத்து, நான் கூற இயலுமோ? அப்படிக் கூற வெளிக்கிட்டால், திரை விலகும். ஒருவரை ஒருவர் அடித்தே கொல்கிற மாதிரி, வீண் சண்டை மூளும். இதை வாய்விட்டுக் கேட்கிற நிலைமையில் கூட, நான் இல்லை. நாங்கள் ஒழிந்தால், போதுமென்பதே, அவன்ரை நினைப்பு. எப்படி ஒழியிறது? இப்படியே ஒழிந்து போனால், பிறகு வாழ்க்கைதான் எதற்கு?''

அவள் பேசிய அந்தப் பேச்சின் சாரம் புரியாமல், அம்மா திணறிக் கொண்டிருந்தாள். அவளின் கண்களுக்கு முன்னால், பரந்த அளவில் தூவப்படுகிற இந்த அட்சத மழையும், ஆசீர்வாதப் பெரு மழையும், அந்த ராஜகுமாரன் மனம் குளிர்ந்து போகவல்ல. சரளா வேதம் கற்றுக் கொள்ளவே என்ற உண்மை பிடிபட அம்மாவுக்கு வெகு நேரம் பிடித்தது. அதுவும் அவள் சொல்லித்தான்.


**மல்லிகை ஆண்டுச் சந்தாதாரராகச் சேருபவர்கள் கவனத்திற்கு....**



**ஆண்டுச் சந்தா 600/-**
**தனிப்பிரதி 40/-**
**ஆண்டு மலர் 200/-**

**ஓராண்டுச் சந்தாவுக்குக் குறைந்தது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.**

**வங்கித் தொடர்புகளுக்கு:**

**Dominic Jeeva 072010004231,- Hatton National Bank. Sea Street,Colombo - 11.**

45வது ஆண்டு மலர் தரமான தயாரிப்பு. விரும்பியோர் தொடர்பு கொள்ளவும். காசோலை அனுப்புபவர்கள் Dominic Jeeva எனக் குறிப்பிடவும். காசோலை அனுப்புவோர் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, **Dominic Jeeva** என எழுதுவோர் இந்தப் பெயருக்கு முன்னாலோ பின்னாலோ வேறெதுவும் கண்டிப்பாக எழுதக் கூடாது. காசுக்கட்டளை அனுப்புபவர்கள் Dominic Jeeva. Kotahena, P.O. எனக் குறிப்பிட்டு அனுப்பவும்.

பலர் தனித் தனி இதழ்கள் கேட்டு எம்முடன் தொடர்பு கொள்ளுகின்றனர். தனி இதழ் தேவைப்படுவோர் ஐந்து பத்து ரூபா முத்திரைகள் அனுப்பி மல்லிகையின் தனி இதழ்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :**

201/4, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 13. தொலைபேசி : 2320721





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கோடாப் போட்ட சுருட்டு


-செங்கை ஆழியான்


''நீங்கள் புங்குடுதீவு அடியா?'' என்று பலர் என்னைக் கேட்பதுண்டு. என்னுடைய தகப்பனார் யாழ்ப்பாணம் சுண்டுக்குழியைச் சேர்ந்தவர். என் தாயாா வண்ணார் பண்ணைக் கலட்டியைச் சேர்ந்தவர். என் அம்மப்பா ஆறுமுகமும் அவ்விடத்தைச் சேர்ந்தவர். ஆனால், அம்மாவின் தாயார் நாகமுத்து புங்குடுதீவைச் சேர்ந்தவர். எனவே, ஏதோ ஒரு விதத்தில் புங்குடுதீவுடன் எனக்குத் தொடர்புண்டு. இந்த விபரம் ஆரம்பத்தில் பூரணமாகத் தெரியாததால் பல்கலைக்கழகத்தில் புவியியல் விரிவுரையாளர் பதவியைத் தவறவிட்டேன். ''உமது பிறந்த ஊர் என்ன? என்ற கேள்விக்கு நான் ஒரு பதிலும் வேலணை நண்பர் ''வேலணை'' என்றும் பதில் சொன்னதால் அவருக்குக் கிடைத்தது. நான் தட்டுப்பட்டேன். பல்கலைக்கழகத்தில் புவியியல் உதவி விரிவுரையாளராக வேண்டுமாயின் தீவுப்பகுதியாக அல்லது சொந்தச் சகலனாக இருக்க வேண்டும். கல்விப்பகுதிக்காயின் வடமராட்சியாக இருக்க வேண்டும் என்ற இரகசியம் பல்கலைக்கழகத்திற்குப் பதிவாளராகப் போன பிறகுதான் எனக்குப் புரிந்தது. ''உம்மடை பரீட்சைப் பேப்பர் திருத்திறன்.'' என ஏதோ ஒருவகையில் குதர்க்கமாகப் பேசி முகத்தில் சேறு பூசிக் கொண்டதுடன் வேலை நீக்கப்பட்ட விரிவுரையாளர்கள் ஓரிருவர். தப்பி விட்டவர்கள் பலர். பிரதேசவாதம், பற்பல பலவீனம் என்பன பல்கலைக் கழகத்தில் அனைத்திலும் கொடி கட்டிப் பறக்கிறதாக வதந்திகள் உலாவி வந்தன.

என் அம்மாவைப் பற்றிய எண்ணங்கள் எழுகின்றன.

என் தாய் அதிகம் படித்தவரல்லர் ஆனால் உலக ஞானம் நிறையவுண்டு. அவருக்குத் தெரியாத புராணக் கதைகள் எதுவுமில்லை. இராமயணத்திலிருந்து விக்கிரமாதித்தன் கதைகள் வரை தெரியும். நித்திரைக்கு அம்மாவுடன் உறங்கும் போது ஏதாவது கதை கேட்பது எங்களது வழக்கம். ஒரே கதையை எத்தனை தடவைகளாயினும் கேட்போம். ஏழு கடல்கள் தாண்டிய அரசகுமாரன் கதை, சுக்குமான் தடி செய்யும் விநோதங்கள், வேலைக்கு அமர்த்திய முனி எனக கதைகள் பலவும் அத்துப்படி. அம்மாவுக்குக் கஷ்டங்கள் வந்தால், 'இதென்ன கஷ்டம் அரிச்சந்திர மன்னனுக்கு வராத கஷ்டங்களா?'' என்று தேற்றிக் கொள்ள அம்மாவுக் குத் தெரியும்.

காணி வாங்குவதாயினும் சரி, அக்காமாருக்குச் சீதனம் கொடுப்பதாயினும் சரி அம்மா தான் முன் நிற்பார். அம்மாவிடம் சேமிப்பு இருந்தது. ஐயாவின் சிறு உழைப்பில் சேமிக்கத் தெரிந்திருந்தது. பெரிய அக்காவுக்குக் கலியாணம் பேசி வந்தபோது பத்தாயிரம் கேட்டார்கள். ஐயா கலியாணத்தையே மறுத்துவிட்டார்.

''இவ்வளவு காசு கொடுக்க எங்க போறது?''

''ஓமெண்டுங்கோ.....நான் தாறன்..'' என்று அம்மா முன் வந்தார். ஐயாவுக்கு அதிசயமாகி விட்டது. பாக்கு மூடைகள் சீவுவதற்காக வீட்டில் அடுக்கி வைத்திருக்கும். பாக்குகளை வீட்டுக்கு வந்து வாங்கிச் சென்று அயலவர்கள் சீவித்தருவார்கள். அந்தப் பாக்குகளில் வைரப் பாக்குகளை அம்மா தெரிவு செய்து கொள்வார். கொக்கான் வெட்டுவது போலப் பாக்குகளைத் தூக்கிப் போட்டு அவற்றின் சத்தத்திலிருந்து வைரப்பாக்குகளைத் தெரிவு செய்து கொள்வார். அப்பாக்குகளைப் புறம்பாக எடுத்துச் சீவி உள்ளூர்க் கடைகளுக்கு வியாபாரம் செய்து தனிச் சேமிப்பு. ஐயா தெரிந்தும் கண்டு கொள்வதில்லை.

'மனிசியென்ன.. தனக்கே சோக்குப் பண்ண சேமிக்குது. ஆபத்துக்கு உதவத் தானே?'

அம்மாவுக்கு மூன்று ஆண் சகோதரங்களும் இரண்டு பெண் சகோதரிகளும் இருந்தனர். எங்கள் குடும்பங்கள் வசதியானவை அல்ல. எனக்குத் தெரியத் தக்கதாகப் பெரியாச்சி விதவையாக இருந்தார். சின்னம்மா நடுத்தரக் குடும்பம். பின்னேரங்களில் அக்காமார் எங்கள் வீட்டுக்கு வருவார்கள். அல்லது அம்மா அவர்கள் வீடுகளுக்குச் செல்வார். சகோதரிகள் வலு வாரப்பாடு. சாப்பாடுகளில் கொடுக்கல் நிலவும். ஏனோ தெரியவில்லை அம்மாவின் மூத்த சகோதரியைப் பெரியாச்சி என்று அழைத்தோம் சின்ன அக்காவை குஞ்சியாச்சி என்று அழைத்தோம். அம்மா அவர்களுக்கெனக் காலைப் பலகாரத்தில் எடுத்து வைத்திருப்பா. அல்லது இரவில் தண்ணீர் விட்ட சோற்றினைப் பழைய கறியுடன் குழைத்து அல்லது அம்மியில் காரசாரமாக அரைத்த சம்பலுடன் குழைத்துத் திரணைகளாக்கி வைத்திருப்பா. அம்மா ஆக்குகின்ற பலகாரங்களிலும் அவர் திரணைகளாக்கி வைத்திருக்கிற பழம் சோறு சுவையானது என்பது என் கருத்து. நானும் சிலவேளைகளில் அவர்களுடன் சேர்ந்து கொள்வேன்.

எங்கள் குடும்பத்தின் பிரதான தொழில் சுருட்டுக் கைத்தொழிலாகும்..... எனது தாயாரின் பேரன் கதிரவேலு புகையிலை வியாபாரி. தமையன்மாரும் அவ்வாறே. இரண்டாவது அம்மான் கொடிகாமம் சந்தைக்குக் காலத்துக் காலம் சென்று புகையிலை கட்டி வருவார். மூத்தவர் வீட்டில் சுருட்டு விக்கின்ற கொட்டிலே இருந்தது. புகையிலையோடு தொடர்பு இருந்ததால் எல்லாரும் சுருட்டுப் பற்ற வைத்துக் கொள்வார்கள். அம்மாவுக்கும் அந்தப் பழக்கம் இருந்தது. உணவு அருந்திவிட்டு தன் கையால் சுருட்டுச் சுற்றி வாயில் வைத்துக் கொள்வார். ஒரு மூலையில் அமர்ந்து அமைதியாக ரசித்துக் குடிப்பார். ஐயாவும் இரவு வேளைகளில் அம்மாவுக்கும் சுருட்டிக் கொடுப்பார்.



அக்காலத்தில் வீடுகளில் பெண்கள் சுருட்டுக் குடிப்பது ஒன்றும் அதிசயமன்று. பொது இடங்களில் அது நடக்காது. யாழ்ப்பாணத்தில் சுருட்டுக் கோடா இட்டுக் கெக்கிராவைக் கடைக்கு விற்க அனுப்பி வைப்பார் பெரிய அம்மான். மாதத்தில் ஒரு நாள் கொக்குவிலில் மெயில் றெயின் ஏறிக் கெக்கிராவைக்குச் செல்வார். வரும்போது சாசுகளைச் சேகரித்து பழம் துணியொன்றில் சுற்றிக் கட்டி அரையில் வேட்டிக்குள் மறைவாகக் கட்டி வருவார். பெரிய அம்மானின் வளவுக்குள் போறனை ஒன்றிருந்தது. புகையிலைகளைக் காய வைத்து புகையூட்டுகின்ற மடுவம் அது. அங்கு புகையிலைகளைத் தொங்க வைத்து கீழே அளவாக தென்னை மட்டைகளை எரித்துப் புகைய விட்டிருப்பார்கள். பெரும்பாலான கலட்டி வீடுகளில் போறனைகளும் கோடா காய்ச்சும் தொட்டிகளும் இருக்கும். பெரிய அம்மானும் தன் சுருட்டு களுக்குச் சில வேளைகளில் கோடா காய்ச்சுவார்.

ஐயாவுக்குச் சயிக்கில் ஓடத் தெரியும் என்றாலும் ஓடுவதில்லை. ஒரு வருடத்துக்கு முன் எனக்கு ஒன்பது வயது நடக்கும் போது, கடையைப் பூட்டிக் கொண்டு சயிக்கிலில் திவி லாம்பைப் பூட்டிக் கொண்டு மெதுவாக வந்து கொண்டிருந்தாராம். முட்டாசுக்கடை சந்தியில் வெறியில் வந்த காடை கனகன் ஓங்கி அவருடைய காலைப் பெடலோடு சேர்த்து ஒரு பொல்லால் அடித்து விட்டானாம். ஐயா பயந்துவிட்டார். அடியை வாங்கிக் கொண்டு வீட்டுக்கு நொண்டிக் கொண்டு வந்து விட்டாராம். அதற்குப் பிறகு சயிக்கிலை எடுப்பதில்லை. நடை அல்லது பஸ் தான்.

ஐயாவின் வடிவம் இப்போதும் நினைவில் நிற்கின்றது. அம்மாவைப் போலத் தங்க நிறமல்ல. பொது நிறம். முறுக்கி விட்ட மீசை. அள்ளி முடிந்த கொண்டை. அரையில் நான்கு முழம் வேட்டி. அரைஞாண் வெள்ளிச் சங்கிலியில் வேட்டியின் முன் மடிப்பைச் செருகியிருப்பார். மடியில் சின்னதொரு வில்லுக்கத்தி மடித்து வைத்திருப்பார். தோளில் சால்வை.

''ஐயா, ஏன் வில்லுக்கத்தி வைச்சிருக்கிறார்.''என்று ஒரு நாள் அம்மாவிடம் கேட்டேன் ''சண்டை பிடிக்கவா?''

அம்மா சிரித்தார்.

''இந்தாள் பயந்த மனிசன். கனகன் வெறியில் அடித்தான் என்றதுக்காக சயிக்கில் ஓடுவதை விட்ட மனிசன். சண்டை பிடிக்கவாவது?''

பின் ஏன்.....?

''இராவிலே பெரிய கடையயிலிருந்து வீட்டுக்கு வரேக்கை பேய் பிசாசுக்குப் பயந்து மடியில் இரும்பு வைச்சிருக்கிறதக்குப் பதிலாக வில்லுக்கத்தியைச் செருகி வைச்சிருக்கிறார். உனக்குத் தெரியாதே கையில இரும்பு இருந்தா பேய்ப் பிசாசுக்குப் பயமில்லை. ஒருதடவை காடை கனகன் ஐயாவின்ர மடியை வெறியில பிடிச்சிருக்கிறான். வில்லுக் கத்தி கீழே விழுந்திட்டுது. ஐயா பாய்ந்து அதை எடுக்க தன்னை ஐயா குத்தத் தான் எடுக்கிறார் என்று காடைக் கனகன் பயந்து விட்டான். அந்த இடத்தைவிட்டு அவன் ஓடின ஓட்டம். அதுக்குப் பிறகு அவன் ஐயாவிடம் வலு மரியாதை.... அவர் பக்கமே வாறதில்லை..'' அம்மா கலகலவெனச் சிரித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தடவை பெரிய அம்மானிடம் சுருட்டுக் கட்டொன்று களவெடுத்து தானும் அக்கைமாரும் அகப்பட்ட கதையை அம்மா மறக்காமல் சொல்வார். அளவாகக் கோடா இட்டு சுருட்டுப் பெட்டி ஒன்றிற்குள் கட்டுச் சுருட்டுகளை அடுக்கிக் கொண்டிருந்தார் பெரிய அம்மான். சுருட்டை அடுக்கியவர் அவசர வேலையொன்றிற்காக வெளியே எழுந்து சென்றார். அவ்வேளை அம்மாவும் பெரியாச்சியும் அவ்விடத்துக்கு வந்தார்கள். அடுக்கியிருந்த கோடாச் சுருட்டைப் பார்த்ததும் வாய்கள் ஊறின. கோடாச் சுருட்டின் சுவை பார்க்க வெகு நாட்களாக ஆசை. ஒரு கட்டை எடுத்துக் கொண்டு வெளியேறி விட்டார்கள். அம்மான் வந்து பார்த்தார். அடுக்கில் ஒன்று குறைவதைக் கண்டு கொண்டார்.

அன்னமும் தையலும் தான் வந்தவை எனத் தெரிந்து கொண்டார்.

''தங்கச்சி!'' என்று கூப்பிட்டார். இன்னொரு சுருட்டுக் கட்டொன்றை எடுத்து அம்மாவிடம் நீட்டினார்..

''ஆசையெண்டா உதையும் குடி....'' அதற்குப் பிறகு அம்மா கள்ளம் செய்வதில்லை.

எங்கள் குடும்பத்தில் பெரிய அம்மான் வித்தியாசமானவர். வேட்டி கட்டி தோளில் எப்போதும் சால்வை ஒன்று அணிந்திருப்பார். கிருஷ்ண பக்தர். கிருஷ்ணனின் கதைகள் அனைத்தும் மனப்பாடம். எனக்கு அனைத்தையும் சொல்லி மகிழ்ந்தவர் அவர். வாங்கில் அமர்ந்து கதைகளாகச் சொல்வார். அவர் ஒரு கலைஞர். பல்வகைப் பட்டங்களை அந்த வயதிலும் (காத்தாடி) கட்டுவார். அவர் வீட்டின் முற்றத்தில் நின்ற ஒற்றைப் பனையில் விட்டம் கட்டிக் கொடி ஏற்றுவதில் திறமைசாலி. எட்டு மூலை, பிராந்து. கொக்கு எனப் பல்வேறு கொடிகள் கட்டுவார். ஆளளவுக் கொடிகள். தளும்பாமல் விண் கூவியபடி அவை விண்ணில் பறக்கும் அழகே தனி.

சோளகம் பெயர்ந்ததும் வலசைக்குத் தயாராகும் பட்சிகள் போன்று பெரிய அம்மான் அவசரப்படுவார். சோளகம் வீசுவது அவரைப் பொறுத்தளவில் வேறு ஒரு காரணத்துக்காக ஆகும். கனகனைக் கூப்பிட்டு முற்றத்து ஒற்றைப் பனையில் கொடியேற்ற விட்டம் கட்டுவிப்பார். சாண்டாதெருவுக்கு மூங்கில் தடி தேடிப் புறப்பட்டு விடுவார். பட்டம் தயாரிப்பதற்கான பொருட்களை வாங்கிக் கொள்வார். சிறு பையனாகி விடுவார். முற்றத்து ஒற்றைப் பனையில் கொடியேற்றிய பின்னர்தான் அவரது ஆசை அவசரம் என்பன நீங்கும்.

அறுபது வயதிலும் அவர் கொடியே பிடிப்பதை நிறுத்தவில்லை. அந்தக் கலைஞரிடம் கொடி கட்டுவதில் மறைந்திருந்த தொழில் நுட்பத்தை நான் எங்கும் கண்டதில்லை. ஒரு தடைவ ஏற்றிய கொடி ஐந்து ஆறு நாட்கள் வரை தரைக்கு இறக்கப்படுவதில்லை. விண் கூவியபடி வானத்தில் பறந்தபடி இருக்கும். 'ஙொய் என்ற இனிமையான இரைச்சல் எழுந்தபடி இருக்கும். தங்கள் தூக்கம் கெட்டு விட்டதாக அயலவர்கள் முறைப்பட்டாலும் அவர் கவலைப்படுவதில்லை.

அவரிடமிருந்து நான் கற்றுக் கொண்டவை அதிகம்.



# உயிரிலும் மேலானது

—க. பரணீதரன்

நெற்றிப் பொட்டில் அடித்தது போல, ஓர் அதிர்வு. சட்டென்று கண்கள் விழித்துக் கொள்கின்றன. வெளியே மழை தூறிக் கொண்டிருக்கிறது. சாதாரண மழைக்கும் தாக்குப் பிடிக்க இயலாத கூடாரம். அதற்குள் மூன்று குடும்பங்கள். குஞ்சு குருமான்களால் நிறைந்த இரண்டு குடும்பங்கள். மூன்றாவது இவனும் அவளுந்தான். அந்தக் குடும்பங்களுக்கு இடம் விட்டு ஓர் ஓரமாக இவனும் அவளும் கூடாரத்துள் ஒதுங்கி இருந்து கொண்டார்கள். கூடாரத்தின் உச்சியில் இருந்து மழைநீர் துளித்துளியாக அவள் அருகே வந்து விழுகிறது. பாத்திரம் ஒன்றை எடுத்து, துளி விழும் இடத்தில் வைத்து விட்டு அவளைப் பார்க்கின்றான். அவள் ஆழ்ந்த உறக்கம். எந்த இரவு அவள் அமைதியாகத் தூங்கி இருக்கிறாள்? கடந்த இரவும் அவள் தூங்காமல் சலித்தாள். விடிகாலையில் தான் அவள் உறங்கி இருக்க வேண்டும். இந்த மழைத் தூறல், அவள் தூக்கத்தைக் கலைக்கவில்லை. பாவம்! அவள் தூங்கட்டும். அவளைப் பார்க்கப் பார்க்க இவன் உள்ளம் ஏனோ கவலையால் சஞ்சலமடைகின்றது.

எப்படி இருக்க வேண்டியவள்? ஆனால்...... இன்று இந்தக் கூடாரத்துள் கிடக்கின்றாள்!

வன்னிக்கு வராதிருந்தால் அவளைச் சந்திக்க வேண்டி நேர்ந்திருக்காது. கல்விப் பொதுத் தராதரம் சித்தி அடைந்த பின்னர் குடும்பக் கஷ்டம் உத்தியோகம் தேட வைத்தது. எட்டுப் பிள்ளையால் உள்ள குடும்பத்தை, சிறிய ஒரு வயலும் எரு ஏற்றிப் பறிக்கும் வண்டிலும் மாடும் காப்பாற்றுமா? குடும்பக் கஷ்டத்தை உணர ஆரம்பித்து விட்ட மூத்த பிள்ளைக்கு எப்படிப் படிக்க முடியும்? வேலை தேடி அலைந்து கொண்டிருந்த போது, அதிர்ஷ்டவசமாக அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றில் வேலை கிடைத்தது. அந்த வேலையை வன்னி மண்ணில் செய்யுமாறு நிறுவனம் பணித்தது.

வன்னியில் வாழ வேண்டி நேர்ந்த போதும், அவள் வீட்டுக்கு அண்மையிலா தங்கி இருக்க வேண்டும்?

அவளைக் கண்டு கொள்ளும் சமயங்களில் எல்லாம் அவள் மேல் ஓர் ஈர்ப்பு. அந்த நாட்டத்துக்கான காரணம் என்ன என்று விளங்கவில்லை. இது பருவத்தின் கவர்ச்சியா? அல்லது முற்பிறப்பின் வழிவந்த பூர்வ சொந்தமா?- பந்தமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத் தவிப்பை மனந்திறந்து அவளுக்கு எடுத்துச் சொல்லும் வாய்ப்பு இவனுக்குக் கிட்டவில்லை. மனதில் குமைந்து கொண்டிருந்தான். இவனை விளங்கிக் கொள்ள இயலாத பிஞ்சுப் பிள்ளையல்ல, அவள். ஆனால், இவன் எண்ணத்துக்கு இசைந்து வரும் மனம் அவளுக்கில்லை. இவன் ஏ9 பாதை பூட்டியதும் தனி மரமானான். வீட்டுக்குப் போய் வர முடியவில்லை. கடிதத் தொடர்புகளும் இல்லாமல் போனது. இவன் மீளுவதற்கு மார்க்கமில்லாது சிறைப்பட்டுப் போனான். இவனுக்கு இருந்த ஒரேயொரு மகிழ்ச்சி, அவளைக் கண்களால் காண்பது தான்.

ஒரு தினம் இவன் வற்றாப்பளை அம்மன் கோயிலுக்குச் சென்றிருந்தான். அங்கு, தன் இதயத்தில் குடிகொண்ட அந்தத் தேவதையைச் சந்திக்க நேரும் என்று இவன் எதிர்பார்க்கவில்லை. தோழிகளுடன் பொங்கலுக்கு அவள் வந்திருந்தாள். இந்தச் சந்தர்ப்பத்தைத் தவற விடக் கூடாதென்று உறுதியாகத் தீர்மானித்துக் கொண்டான்.

இவன் தானாகவே வலிந்து சென்று ''தர்சினி'' என மெல்ல அழைக்கின்றான். அவள் சற்றுத் தரித்து நின்று, இவனைத் திரும்பிப் பார்க்கின்றாள். இவனுக்கு நெஞ்சு 'படபட' என்று அடிக்கிறது. அவளோடு என்ன பேசுவதென்று தெரியவில்லை. நா எழ மறுக்கிறது. சிறிது நேரத்தின் பின்னர் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு, ''என்னைத் தெரியுமா, தர்சினி?'' என்கிறான்.

அவள் மௌனமாக மெல்லச் சிரிக்கிறாள்.

அவள் நின்று பேசிக் கொண்டிருப்பதைக் கவனிக்காது தோழிகள் நகர்ந்து போய்க் கொண்டிருக்கிறார்கள்.

''பாதை மூடின பிறகு நீங்கள் ஊருக்குப் போகவில்லையோ?''

அவள் நக்கலாகக் கேட்கிறாளா? அல்லது அனுதாபப்படுகிறாளா? இவனுக்குப் புரியவில்லை. ஆனாலும் சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் சொல்லுகின்றான்.

''பாதை மூடினதுக்கு நன்றி சொல்ல வேண்டும்''

''ஏன்?''- அவள் அதிசயமாகச் சட்டென்று கேட்கின்றாள்.

''பாதை திறந்திருந்தால் தர்சினி இப்ப கம்பஸுக்குப் போய் இருப்பியள். நான் தினமும் உங்களைக் காண முடியாது''

''நீங்கள் எல்லை மீறிப் போகிறியள்''

''நான் என்ரை உள்ளத்தைத் திறந்து சொல்லுறன்''

''நான் உங்கடை நிலைமையைக் கண்டு அனுதாபப்படுகிறன். ஆனா, உங்கடை எண்ணம் நிறைவேறக் கூடியதல்ல''

அவள் சொல்லிவிட்டுத் திடீரென அங்கிருந்து கிளம்பிப் போகின்றாள்.

மழைத் தூறல் சற்று ஓய்ந்து விட்டது.

அவள் நினைவில் ஆழ்ந்து கிடந்த அவனை, பக்கத்துக் கூடாரத்து மோகன் எழுப்புகிறான்.

''கோபி..... கோபி.... எழும்படா, உன்னை வரச் சொல்லி இருக்கினம். கூப்பிடுறாங்கள்'' என்று கோபியின் பக்கத்துக் கூடாரத்துள் இருக்கும் மோகன் எழுப்புகிறான்.



திடுக்குற்று எழும்புகின்றான். இவன் அரையிற் கட்டிய சாரத்தைச் சரி செய்து கொண்டு தலையைக் கையால் நீவிக் கொண்டு அழைப்பு வந்த தலைமைக் காரியாலயத்தை நோக்கி ஓடுகின்றான்.

''நீ தான் கோபியோ?'' என்கிறார் முகாம் பொறுப்பாளர்.

''ஓம், ஐயா!'' என்றவாறு தலையசைக்கிறான் இவன்.

''உனக்கு உன்ரை வீட்டில இருந்து ஒரு 'போன் கோல்' வந்திருக்கு. ஐந்து நிமிசந் தான் பேசலாம். சரியா...? இந்த, பிடி....'' என்று ரிசீவரைக் கொடுக்கிறார்.

''கோபி...... ராசா...... நான் உன்ரை அப்பா கதைக்கிறேன்ரா''

நீண்ட காலத்திற்குப் பின்னர் அப்பாவின் குரலைக் கேட்டதில் இவனுக்கு இனம் புரியாத ஒரு மகிழ்ச்சி. ஆனந்தக் கண்ணீர் கண்ணில் இருந்து சொரிய...... ''அப்பா....'' என நா தடுமாற அழைக்கின்றான்.

''அப்பன், சுகமாக இருக்கிறியே? ராசா''

''ஓம் அப்பா! வீட்டிலை எல்லோரும் சுகமே, அப்பா?''

''எல்லாரும் சுகமாக இருக்கினம் ராசா. நீ உயிரோட இருக்கிறியோ இல்லையோ எண்டு தெரியாம நாங்கள் பட்ட அவஸ்தை அந்தப் பிள்ளையாருக்குத் தான் தெரியும். கொம்மா பித்துப் பிடிச்சவள் போலக் கோயில் குளம் என்று திரியிறாள். தங்கச்சியவை, தம்பியவை உன்னை நினைச்சு நினைச்சு எந்த நேரமும் விம்முதுகள். முந்தா நாள் தான் பெரியப்பான்ரை பெடியனுக்கு நீ முகாமிலை இருப்பதா யாரோ சொன்னவையாம். அதைக் கேட்ட பிறகு தான் போன உயிர் திரும்பி வந்தது, ராசா. எப்பிடி இருக்கிறாய் ராசா? உனக்கொரு பிரச்சினையும் அங்கை இல்லையே?''

''எனக்கொரு பிரச்சினையும் இல்லை. நான் சுகமாத் தான் இருக்கிறன் அப்பா..... ஆனால்....''

''என்ன ராசா? சொல்லு!''

''என்னெண்டப்பா சொல்லுகிறது?''

''என்ன ராசா, சொல்லு. என்னெண்டாலும் அப்பாட்டை ஒளிக்காமல் சொல்லு ராசா. எனக்கு என்ரை பிள்ளை தான்ரா முக்கியம். என்ரை உயிர் நீ தான்ரா, ராசா''

''அப்பா நான் தனியாக இல்லை''

''அப்ப..... சிநேகிதர்மாரோடை இருக்கிறாயாக்கும். அந்தக் கவலை ஒண்டும் உனக்கு வேண்டாம். உன்னை முகாமை விட்டு வெளியாலே கெதியா எடுக்கப் போறன். அதுக்கு வழி இருக்கு. எவ்வளவு காசு போனாலும் பரவாயில்லை. என்ரை காணியை வித்தெண்டாலும் உன்னை எடுக்கிறதா முடிவு செய்து போட்டன்''

''அப்பா, கலியாணஞ் செய்யாத இளந் தாரிமார் இஞ்சை வாழ முடியாத ஒரு சூழ் நிலை இங்கை இருந்தது''

''ஓமோம்.... குமர்ப் பிள்ளைகளுக்கும் அப்பிடி ஒரு நெருக்குவாரம் இருந்ததாகக் கேள்விப்பட்டன்''

''அது தான் அப்பா......''

''என்ன சங்கதி சொல்லன்.....?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் கலியாணஞ் செய்ய வேண்டி வந்திட்டுது!"

"அதே சங்கதி! நீ கலியாணஞ் செய்த படியால் தான் உன்னை நாங்கள் உயி ரோடை பார்க்கப் போகிறம். இதைச் சொல் லுறதுக்கே பயந்தன், ராசா. அது சரி, என் என்ரை மருமேளைப் பற்றி நீ ஒன்றும் சொல்லவில்லை?"

"நல்ல வசதியான குடும்பம். ஏக்கர்க் கணக்காய் நிலபுலம் இருக்கு. வசதியான பெரிய வீடு. தகப்பன் அதிபராக இருந்தார். தாய் ரீச்சர். அண்ணன்மார் இரண்டு பேரும் இஞ்ஜினியர்மார். வெளிநாட்டிலை இருக் கினம்"

"என்ன சொன்னாலும் நீ என்ரை பிள் ளையல்லே, ராசா. பிறந்தாலும் பரிபம் கொம் பாத்தான் பிடிச்சிருக்கிறாய். என்ரை மருமோள் என்ன வடிவான பிள்ளையோ, ராசா?"

"நல்ல வடிவு"

"எனக்கு நல்லாத் தெரியும். சின்னனி லையே எல்லாத்திலும் நீ வடிவு பாக்கிற ஆள். இப்படியான நல்ல குடும்பம் நாங்கள் செம்பு தண்ணி எடுக்கக் கூடிய ஆக்களாத் தான் இருக்கும். அப்படித் தானே!"

"........................"

"என்ன பேச்ச மூச்சைக் காணன்....? அது சரி, எங்கடை ஆக்களோ?"

"என்னப்பா கேட்கிறியள்?"

இந்தச் சமயம் பார்த்து, "இந்தா நேரம் சரி" என்கிறார் முகாம் பொறுப்பாளர். இவன் சேட் பையில் இருந்து நூறு ரூபாத் தாள் ஒன்றை எடுத்து இரகசியமாக மேசை மீது வைத்து விட்டுத் தொடர்கின்றான்.

"என்ன சின்னப் பிள்ளை மாதிரிக் கதைக்கிறாய்....? அது தான் தம்பி கேட்கி றன். அவை எங்கடை சாதியே.....?"

"அது வந்து......"

"வந்தும் போயும்..... என்ன ஒரு மாதிரி இழுக்கிறாய்?"

"அவை என்னைத் தங்கடை மகளுக் குக் கட்டி வைக்க விரும்பவில்லை"

"அடே அப்பா! எங்களை விடப் பெரிய சாதிக்காரர் போலைக் கிடக்கு. அப்ப ஏன் உன்னைக் கட்டி வைச்சவை?"

"தங்கடை பிள்ளையின்ரை உயிரை யும் காப்பாத்திறதுக்காகத் தான்"

"டேய்! நான் சிவசேகரமணியக்கா ரன்ரை பூட்டன்ரா! உன்னைக் கட்ட மறுக்கிறதுக்கு..... அவ்வளவு பெரிய ஆக்களோ அவையள்?"

"கரைச்சல் வருமென்று...."

"என்னடா கரைச்சல்? பிள்ளை ஆரடா.... சொல்லித் தொலையன்"

"மோனமடிக்கிறனை...."

"ஆரடா.... கோயிலுக்குப் போய் அடிக் கிறவங்களோ...?"

"இல்லையப்பா.... செத்த வீட்டுக்கு......"

"என்ன துணிச்சலடா உனக்கு? நீ இப்படியொரு கலியாணத்தைக் கட்டிப் போட்டுத் தைரியமாய் எனக்குச் சொல்லு றாய்? எனக்கு வாற கோவத்துக்கு....."

"அப்பா, கோபப்படாதையுங்கோ. அவை நல்ல ஆட்கள். நல்ல படிச்ச குடும் பம், நல்ல பண்பானவை, மரியாதை தெரிஞ்சவை. நல்ல பணக்காரர். இதை விட வேறு என்ன வேணும்?"



"டேய்! என்ன பெரிய ஆட்கள் என்டா லும் அவையள் பறை அடிக்கிறவங்கள் தானே. எங்கடை கோடிக்குள்ளை உள்ளவங் களை நீ எங்கடை வீட்டுக்குள்ளை கொண்டு வரப் போறியோ, என்ன....?"

"அப்பா. அவள் என்னைக் கலியாணம் செய்ததாலை தான் இப்படி இந்த முகா மிலை கஷ்டப்படுகிறாள். நான் உயிரோட வன்னியில் இருந்து வந்ததுக்கு அவள் தான் காரணம்"

"டேய்! எனக்கு எந்தக் கதையும் சொல் லாதை. முடிவாகக் கேட்கிறன். அவளை விட்டிட்டு நீ வாறியோ? அப்படி வாறது என்டால் நாங்க உன்னை வெளியாலை எடுக்கிறம்"

"என்னை நம்பி வந்தவளை, என்ரை உயிரைக் காத்தவளை எப்பிடி அப்பா விட்டிட்டு வாறது?"

"எப்பிடி வாறதெண்டு எனக்குத் தெரி யாது. முடிவாக என்ன சொல்லுகிறாய்?"

"அப்பா, எங்கள் இரண்டு பேரையும் எடுக்கிறதெண்டால் எடுங்கோ. இல்லை என்டால் அவளை விட்டு நான் வர மாட்டன்"

"அது தான் உன்ரை முடிவோ?"

"இதுதான் என்ரை கடைசி முடிவு"

"அட கேடுகெட்ட நாயே! என்னி லையோ நீ செத்து, நான் குடமுடைத்துக் கொள்ளியும் வைச்ச விட்டதாய் நினைச்சுக் கொள்ளுறன்....."

இவன் தொலைபேசித் தொடர்பைச் சட்டென்று அறுத்து விட்டு முகாம் கூடா ரத்தை நோக்கிப் போகின்றான்.

HAPPY PHOTO
Excellent Photographers
Modern Computerized Photograph For
Wedding Portraits
&
Child Sittings
Photo Copies of
Identity Cards (NIC),
Passport &
Driving Licence
Within 15 Minutes
309, Modera Street,
Colombo - 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## —எல். வஸீம் அக்ரம் கவிதைகள்

### பிரிவுத் துயர் அல்லது விடுகை

மிகவும் நேசம் கொண்ட
நட்பின் அல்லது சிநேகத்தின்
அணுக்களின் பரிட்சார்த்தங்கள் மேவும்
பரிசுகளும், நினைவுப் பதிவுப் புத்தகங்களும்
இன்னும் சிலவும் புகைப்படங்களும்
கல்லூரிக் கால நட்பின் விரல்களில்
பரிதவிக்க,
நெருங்கிப் பேச முடியாத
தொலைவுகளில் அன்னியப்பட
தனிமையின் சொரூபம் அரும்பும்

இப்பொழுது
இடம் பெயர்ந்தோரைப் போல
கண்ணீர் தொடரணியில்
நீயும் நானும்......

***

### தூவுகை

ஒரு நிலவின் கண்கள் முழுவதும்
விழித்துக் கிடக்கின்றன.
உணர்வுப் பூச்சி மொய்க்கின்ற
அந்தரங்கங்களில்
மௌனத்தில் தடயம்
புத்து ஒளிர்ந்து கிடக்கிறது.
காற்றின் ரகசிய மொழிகள்
அறைக்குள் நின்று நிழலாடி
கவிதையின் படிமம் பிசகாமல் நனைத்து
உடல் வெளிகளில்
குளிரின் விசிறிகளை திறந்து
உலரவிட்டு
ரேகைகள் ஒத்திகை பார்க்கின்றன.

***

### இரண்டாவது காலனித்துவம்

மரணத்திலிருந்து வாழ்வுக்கு
ஆருடம் செய்கின்ற
இன்றைய நாட்களின்
நிஜ அரூபங்களை
கோலப்படுத்தும் காட்சிகள்
காலனித்துவத்தையே
நிழல்படுத்தும்

காலனித்துவம் பற்றிய
கதையாடல்கள்
விமரிசனங்கள்
அல்லது ஆய்வுகள்.
கடந்தகால
சிறுபான்மைக் காலனித்துவத்தையே
மறுவாசிப்புச் செய்கின்றன.

***

உனதும் எனதுமான எண்ணங்களில்
அடைமழை பெய்கிறது.
கிடுகுவேலி கண்துளை வழியே
மொழியறுந்த உனது பாடல்
செல் விழுந்த எனது செவிப்பறை யில்
கசிகின்றது.
மண்புழு ஊர்ந்த
மணல் புழுதி படிந்த
என் முற்றத்து மலர்ச் சோலையில்
உனது எண்ணங்களில் முளைத்த
மல்லிகை மணப்பதை
பட்டாம் பூச்சியின்
காதலில்
உணர்கிறேன்.

## தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்

### கலை இலக்கிய நூல்கள் கொள்வனவு

வட மாகாண சபை ஆளுனர் திரு. சந்திரசிறி அவர்கள் வட மாகாண எழுத்தாளர்களினால் அச்சிட்ட கலை இலக்கிய நூல்களைக் கொள்வனவு செய்ய வட மாகாண சபையைப் பணித்துள்ளார். அதற்காக 20 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே வடமாகாண எழுத்தாளர்கள் தங்களது நூலில் ஒரு பிரதியையும் எவ்வளவு நூல்களை வழங்க முடியும் என்பதையும் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்துக்கு 30.10.2009க்கு முன் சமர்ப்பிக்கவும். பருவ வெளியீடுகள் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படா. நூல்களை **செங்கை ஆழியான், தலைவர், 75/10 A பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்., கவிஞர். சோ. பத்மநாதன், பொருளாளர், ஏரகம், பொற்பதி வீதி, யாழ்ப்பாணம்., மு. சிறிபதி. செயலாளர், வளலாய் ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை** ஆகிய முகவரிகளுக்கு தபால் மூலமோ, நேரிலோ வழங்கலாம். தகுதி வாய்ந்த நூல்கள் பரிசீலனையின் பின்னர் கொள்வனவு செய்யப்படும்.

**இப்படிக்கு,**
**தலைவர், தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்டிலில் சிக்கி
துயர்பட்டு இறந்தது மீன்.
பிரிந்தது உயிர்-
முடிந்தது கதை.

## முட்கம்பி வேலி

—தமிழ் நேசன்

நிவாரண முகாம்களில்
நிர்க்கதியான எமது
நிலைமையை என்னென்பது?

சாவுமின்றி வாழ்வுமின்றி
சங்கடங்கள் மிகுந்த
சகதிக்குள் நகர்கிறது
நரக வாழ்க்கை.

'விட்டு விடுதலை காண்' என
விண்ணில் பறக்கும் பறவைகள்
சொல்லிச் செல்கின்றன.

'சுட்டு வீழ்த்துவேன்' என
சுடுகலன்கள் எம்மை
குறிவைத்து நிற்கின்றன.

முட்கம்பி வேலிகளுக்குள்
முடக்கப்பட்ட எம்மை
விட்டுவிடும்படி
அட்ட திக்கும் குரல் கொடுத்தாலும்
ஆட்சியாளரோ அசைவதாய் இல்லை.

இந்த முட்கம்பி
வாழ்வுக்கு முடிவேது?
இந்த வெந்துயர்
வாழ்வுக்கு விடிவேது?





# பெனடிக்ற் பாலன்

—திக்குவல்லை கமால்

மேல் மாகாணம் ஹொரணைக் கல்வி வலயத்திற்குப் பெனடிக்ற் பாலன் என்றொரு உதவிக் கல்விப் பணிப்பாளர் வந்திருப்பதாகத் தகவல் கிட்டியது.

பெனடிக்ற் பாலன் என்ற எழுத்தாளன் கல்வி நிருவாக சேவையில் பணியாற்றுவதாக நான் கேள்விப்பட்டிருக்கவில்லை. இதனை உறுதிப்படுத்திக் கொள்வதில் சங்கடம் நிலவியது.

அவர் பணியாற்ற வந்திருந்த கல்வி வலயத்திலேயே நான் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன்.

அப்படியிருக்கையில் ஹொரணைக் கல்வி வலயத் தமிழ்த் தினப் போட்டியில் நடுவராகக் கடமையாற்ற வருமாறு எனக்கு அழைப்பு வந்தது. இங்கு அவரைச் சந்திக்கும் போது சந்தேகம் நிச்சயம் தீர்ந்துவிடும்.

எல்லகந்த தமிழ் வித்தியாலயத்தில் போட்டிகள் நடைபெற்றன. தேநீர் இடைவேளையின் போது, நடுவர்களான எங்களோடு பெனடிக்ற் பாலனும் வந்து சேர்ந்தார். எனது சந்தேகம் முற்றாகத் தீர்ந்துவிட்டது. அவர் எழுத்தாளர் பெனடிக்ற் பாலன் தான். 1975ல் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற தேசிய ஒருமைப்பாட்டு எழுத்தாளர் மாநாட்டில் சந்தித்த ஞாபகம் அவரை உறுதிப்படுத்தியது. அப்போது நான் இளம் எழுத்தாளனென்பதால் அவர் என்னை ஞாபகம் வைத்திருக்க நியாயமில்லை. சக ஆசிரியர்களுக்கு மத்தியில் நான் அவரோடு அறிமுகமாவதோ, இலக்கியம் தொடர்பாக உரையாடுவதோ உசிதமாகப்படவில்லை.

அப்போது அங்கு வந்த நிகழ்ச்சி அமைப்பாளர் எங்களை அறிமுகப்படுத்த ஆரம்பித்தார். என்னை அறிமுகப்படுத்தும் போது, 'கமால்' என்றே முடித்துக் கொண்டார். அது எனக்கு வேதனையாகவே இருந்தது. அவரும் சிரித்துவிட்டு அடுத்தவரைப் பார்த்தார்.

இடையில் திடீரென்று சில முஸ்லிம் ஆசிரியர்களைப் பார்த்து, ''திக்குவல்லை கமாலின் கதைகளைப் படித்திருக்கிறீர்களா?'' என்று கேட்டார்.

அதற்குப் பதில் சொன்னார்களோ இல்லையோ, ''இவர் தான் திக்குவல்லை கமால்'' என்று சொல்லிவிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்தறை மாவட்டத்தைச் சேர்ந்த நான் களுத்துறை மாவட்டத்தில் இருப்பேனென்று அவர் எதிர்பார்த்திருக்க முடியாது தான்.

பிறகு தான் மனைவி இப்பகுதியைச் சேர்ந்தவரென்றும் குடும்பமாக இங்கே வாழ்வது பற்றியும் தெரிந்து கொண்டார்.

அதன் பிறகு எங்களிடையே தொடர்பு வலுப் பெற்றுவிட்டது. சந்திக்கும் போதெல்லாம் அவர் அதிகாரி, நான் ஆசிரியர் என்பதை அடியோடு மறந்து இலக்கியவாதிகளாக மாறிவிடுவோம்.

**'விபச்சாரம் செய்யாது இருப்பாயாக'** என்ற அவரது சிறுகதைத் தொகுதி அவர் அங்கு வேலை செய்யும் காலத்திலேயே வெளிவந்தது. கொழும்பு விவேகானந்தா கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்ற வெளியீட்டு விழாவின் போது, என்னையும் ஒரு பேச்சாளராகப் போட்டுவிட்டார்.

1995ம் ஆண்டுக்கான சிறுகதைத் துறை சாகித்திய மண்டல விருது மேற்படி நூலுக்குக் கிடைத்தது. அதே ஆண்டு **'ஒளி பரவுகிறது'** என்ற எனது நாவலுக்கும் சாகித்திய மண்டல விருது கிடைத்தது. இருவரும் ஒன்றாகவே பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் விருது பெற்றோம்.

இதனையொட்டி ஹொரணை வலய அதிபர்கள் சங்கம், மில்லகந்த தமிழ் மகா வித்தியாலயத்தில் ஒரு பாராட்டு விழா நடாத்தி, தங்கப் பதக்கம் அணிவித்து அவரைக் கௌரவித்தது.

அதற்கு என்னையும் பேச்சாளராக அழைத்திருந்தார்கள். அப்போது மேல் மாகாண தமிழ் மொழிப் பாடசாலைகளின் பணிப்பாளராகக் கடமையாற்றிய திரு நல்லையா அவர்களும் வருகை தந்திருந்தார்.

அதிபர் அலுவலகத்திலிருந்து கூட்ட மண்டபத்துக்கு, மாணவர்களை இருபக்கமாகவும் வரிசையாய் நிறுத்தி எங்களை அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்திருந்தார்கள். அதற்கிடையில் ஆளுக்கொரு மாலை வேறு போட்டு விட்டார்கள். உண்மையில் எனக்குப் பெரும் சங்கடமாகவும் வெட்கமாகவுமிருந்தது. கழற்றிக் கையில் வைத்துக் கொள்ளலாம் போலிருந்தது.

"அவர்களுக்கு நாம மரியாதை செய்யணும். மேடைக்குப் போகும் வரையில மாலையை கழற்றக் கூடாது" என்று பெனடிக்ற் பாலன் மெல்லச் சொன்னார். "எங்களுக்கு வேறு யார்டாப்பா மால போடப் போறாங்கள்? கொஞ்சம் பேசாம இரு"- என்று தனக்கேயுரிய பாணியில் சொன்னார், நல்லையா சேர்.

அதற்குச் சில காலத்தின் பின்னர் எனக்கும் உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு கிட்டியது வேறு விடயம். பாடசாலை வைபவங்களின் போது, கழுத்தில் மாலை விழும் போதெல்லாம் நான் இவர்கள் இருவரையும் நினைத்துக் கொள்வேன்.

பெனடிக்ற் பாலன் ஹொரணையில் வேலை செய்த காலத்தில் கூடுதலாக எழுதினார் என்றே நினைக்கிறேன். எழுதுவதற்கான முன்னேற்பாடுகளைச் செய்து கொண்டு, குறிப்பிட்ட நாட்கள் மில்லகந்த வித்தியாலய அதிபர் விடுதியில்



தங்கிவிடுவார். அங்கு தான் எழுத்து வேலைகள் நடக்கும்.

இறப்பர் தோட்டம் சூழ்ந்த குளிர்ந்த இதமான பிரதேசம். அவரது மனதை மிகவும் கவர்ந்த பகுதி. ஆசிரிய சேவையின் ஆரம்ப காலத்திலும் அவர் மலையகத்தில் தான் கடமையாற்றினார்.

கல்விசார் நூல்கள் பலவற்றையும் எழுதியுள்ளார். தீவிர இடதுசாரிச் சிந்தனையாளர். "நானொரு சிறந்த 'குடி'மகன்" என்று வேடிக்கையாகச் சொல்லிக் கொள்ளும் அவர், இன்னும் பல சாதனைகளை நிலை நாட்டியிருக்க வேண்டியவர்.

**வாழும் நினைவுகள்; 28**

# குருட்டு வெளிச்சம்

1984ல் எனது **'கோடையும் வரம்புகளை உடைக்கும்'** சிறுகதைத் தொகுதி, சென்னை என். சீ. பீ. எச். வெளியீடாக வந்தது. இது டொமினிக் ஜீவாவின் தனி முயற்சியென்பதை இலக்கிய நண்பர்கள் அறிவர். ஒரு புத்தகம் வெளிவந்த மகிழ்ச்சியேற்பட்டதே தவிர, இந்நூல் விற்பனை ரீதியாக இங்கு வராததால் உரிய இடங்களுக்குச் சென்றடையவில்லை. இதனால் இன்னொரு தொகுதி போட வேண்டிய அழுத்தம் எனக்கேற்பட்டது. இருந்தும் ஒரு பயம். சொந்தப் பணத்தில் புத்தகம் போட்டு நஷ்டமடைவதா? கைப் பணம் போனாலும் பரவாயில்லை. அச்சகத்துக்குக் கடனாளியாகக் கூடாதென்பதில் மிகக் கவனமாகவிருந்தேன்.

அப்பொழுது பேருவளையைச் சேர்ந்த இரு இளைஞர்கள் இத்துறையில் துணிந்து கால் வைத்திருந்தனர். பரீத். ஏ. ஜௌஸகி, இன்ஹாமுல் ஹஸன் ஆகியோரே அந்த இரட்டையர்கள். ஏ. இக்பாலின் 'பண்புயர் மனிதர் பாக்கீர் மாக்கார்' என்ற புத்தகத்தின் மூலம் வெளிச்சத்துக்கு வந்தவர்கள்.

நூலாக்க முயற்சி எனக்குப் புது அனுபவம். இப்படியொரு நூல் வெளிவரப் போகும் செய்தி அப்பொழுது நான் கடமையாற்றிக் கொண்டிருந்த அதுளுகம அல்கஸ்ஸாலி மகாவித்தியாலய ஆசிரியர் குழுவுக்குள் மெல்லம் பொசிந்தது. அது படிப்படியாகப் பாடசாலை மட்ட வெளியீட்டு விழாவாகப் பரிணாமமடைந்தது.

**'குருட்டு வெளிச்சம்'** சிறுகதைத் தொகுப்பைப் பொறுப்பெடுத்த 'பேசும் பேனா' நண்பர்கள், ஒரு தொகைப் பணத்தை வெளியீட்டு விழாவின் பின் பெற்றுக் கொள்ள சம்மதம் தெரிவித்திருந்தனர். வெளியீட்டு விழாவைப் பட்டியல் போட்டுப் பணச் சடங்காக்க நான் எப்போதுமே விரும்புவதில்லை. இலக்கியத்தையும் எழுத்தையும் புரிந்து கொள்ளாதவர்களை, வெறும் பணத்துக்காக மேடையில் உட்கார வைப்பது, எழுத்தின் பேரில் பணமும், புகழும் தேடுவோர் செய்யத் தகுந்த காரியம் தான்.

வெளியீட்டு விழாவுக்கான எல்லா ஏற்பாடுகளும் பூர்த்தி. பத்திரிகைகளில் செய்திகள் வந்துவிட்டன. அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டாயிற்று. பேச்சாளர்கள், இலக்கிய நண்பர்கள் வரவும் உறுதியாகி விட்டது.

பத்து ஆண்டுகள் கழித்து இரண்டாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதைத் தொகுதி வெளியீடு. ஆம் நாளை வெளியீட்டு விழா. விமர்சன உரை நிகழ்த்துவோருக்கு வழமை போல் முழுமையற்ற பிரதிகள் கையளிக்கப்பட்டிருந்தன.

இன்னும் புத்தகம் வந்து சேரவில்லை. இது தான் பிரச்சினை. இன்றும் நாளையும் என்று சொல்லிச் சொல்லிக் கடைசிக் கட்டத்திற்கு வந்தாயிற்று. டெயிலர்மாரும் அச்சகத்தாரும் உரிய வேளைக்குச் செய்து தரமாட்டார்களென்று சொல்வார்களே, என் விடயத்திலும் அது சரியாகிவிட்டது. எப்படியோ நாளை வெளியிட்டாக வேண்டும்!

நண்பர்களைப் போய்ச் சந்தித்தேன். ''அதெல்லாம் சரி நாளை புத்தகம் வரும்'' என்று அலட்டிக் கொள்ளாமல் சொன்னார்கள். என்னால் நம்ப முடியவில்லை. அவர்களோடு அச்சகம் செல்லும் போது மாலையாகிவிட்டது. ஆறுமணிக்குப் பிறகுதான் நால் வர்ண அட்டையை அச்சியந்திரத்தில் போட்டார்கள். அந்தக் காட்சியைக் கண்ட பிறகுதான் எனக்கு நிம்மதியேற்பட்டது. அந்த நிம்மதியோடு ஏனைய நடவடிக்கைகளைக் கவனிப்பதற்காக வந்து சேர்ந்தேன்.

அட்டையை அச்சிட்டுப் பேருவளைக்குக் கொண்டு போக வேண்டும். அங்கு ஏலவே அச்சிட்டுக் கட்டி வைத்துள்ள நூலை இணைத்துக் கட்டி, ஒட்டி நூலாக்க வேண்டும். நாளைய தேவைக்குப் போதுமான பிரதிகளை காலை பத்து மணிக்கு முன்பு விழாவுக்குக் கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டும். இரவிரவாக இயங்கினால் தான் இதனைச் சாத்தியமாக்க முடியும்!

அடுத்த நாள் பத்து மணிக்கு விழா. பதினொரு மணிக்குத் தான் புத்தகங்கள் வந்து சேர்ந்தன. 'சோனக டைம்' படி விழா ஆரம்பித்ததாக எண்ணிக் கொண்டார்களே தவிர, நடந்த விடயங்கள் வெளிச்சத்துக்கு வரவில்லை.

சுமார் இருநூற்றைம்பது பிரதிகளை மேல்வகுப்பு மாணவர்களும் ஆசிரியர்களும் கொள்வனவு செய்ததால், அடுத்த வாரமே அச்சகக் கணக்கை முடித்துக் கொண்டேன்.

இவ்விழாவில் நான் பெற்றுக் கொண்ட அனுபவம் இன்றுவரை எனக்கு நல்ல பாடமாகவே இருக்கிறது. வெளியீட்டு விழா தொடர்பாகத் தொடர்பு கொள்ளும் நண்பர்களுக்குப் புத்திமதி வேறு சொல்ல முடிகிறது.

''புத்தகம் கைக்கு வந்த பின்பே வெளியீட்டு விழாவைத் தீர்மானியுங்கள்''

நான் படித்த பாடம் பயில்க இவ்வையகம்.


### சந்தா செலுத்தி விட்டீர்களா?

**புதிய ஆண்டு பிறக்கப் போகின்றது. தயவு செய்து தமது சந்தாக்களைப் புதுப் பித்துக் கொள்ளவும்.**

**மனந் திறந்து மல்லிகையுடன் ஒத்துழையுங்கள். ஏனெனில் மல்லிகை உங்கள் ஒவ்வொருவரினதும் இலக்கி யக் குரலாகும்.**

**அசட்டை செய்வோருக்கு முன்னறிவித்தலின்றி இதழ் நிறுத்தப்படும்.**




## படைப்பிலக்கியத்தைச் செம்மைப்படுத்தல்
# குறிப்புகள் சில.....

**-மா. பாலசிங்கம்**

இலக்கிய ஆக்கங்களைச் செம்மைப்படுத்தல் என்ற விடயம் தற்போது இலக்கிய உலகின் உரத்த கவனத்தைப் பெற்று வருவதை இலக்கிய நோக்கர்கள் அறிவர். இதற்கான தூண்டுதல்- இன்று மேலெழுந்து வரும்- ஈழத்து இலக்கிய சிந்தனையை மறுசீரமைத்தல் என்ற சிந்தனைப் பெயர்ச்சியால் ஏற்பட்டதா? எனவும் கொழித்துப் பார்க்க வைக்கின்றது. எது எப்படி இருப்பினும், இன்று வெளி வந்து கொண்டிருக்கும் ஈழத்து இலக்கியப் படைப்புகள் இன்னமும் சவலைப் பருவத்திலேயே இருக்கின்றன என்பதற்கான எச்சரிக்கை மணியே இதுவென ஏற்றதாகவே வேண்டும். இது மிகவும் கவலைக்குரியது தான்!

ஈழத்து இலக்கியப் படைப்புகளுக்குப் பெரும்பாலும் வெளியீட்டு ஊடகங்களாக இருப்பவை அச்சு ஊடகங்கள். இலத்திரனியல் ஊடகங்களின் பங்களிப்பு மிகக் குறைவாகவே இருக்கின்றது. ஈழத்துச் சஞ்சிகைகளின் ஆசிரிய பீடங்களில் இருப்பவர்கள் நாடறிந்த படைப்பாளிகள். தேசிய பத்திரிகைகளிலும் இலக்கியத்தில் ஆற்றலும் பட்டறிவுமுள்ளவர்கள் பணி செய்கின்றனர். இருந்தும் செம்மைப்படுத்த வேண்டுமென்ற குரல் ஏன் எழுகிறது?

மேலைத்தேய இலக்கியமே தமிழ் நவீன இலக்கியத்துக்கு வழிகாட்டி எனவும் தமிழக இலக்கியமே கொடுமுடி எனவும் கடல் கடந்து அயல் இலக்கியங்களை வாய்குளிரப் பேசுபவர்கள், நாம். செம்மைப்படுத்தல் அங்கு நடைமுறையில் உள்ளதென்பதை அறிவோம். இதற்கான பிரத்தியேக ஆளணியும், அந்த அச்சு ஊடகங்கள் கொண்டுள்ளன. இந்த 'மூத்தோர்' முன் மாதிரிகளும் நாமும் செம்மைப்படுத்த வேண்டுமென்ற முன்மொழிவை ஏற்படுத்தி இருக்கலாம்! இதை வரவேற்காமலும் பாராட்டாமலும் இருக்கவும் முடியாது.

மெரீனா கடற்கரை இலக்கியத்தோடு சோடி கட்டி நகர்ந்து கொண்டிருந்த ஈழத்து இலக்கியத்தைச் செம்மைப்படுத்திப் புதிய பாதையைத் திறந்து விட்டது ஈழத்து முற்போக்கு இயக்கந்தான். யாருமே அதை மறுதலிக்க முடியாது! முற்போக்கு இலக்கியத்துக்கு மக்கள் சார்ந்த கருத்து வலுவும் இருந்தது. அத்தோடு அரச பலமும் சித்தித்தது. தேசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம், மண்வாசனை என்பவைகளை ஈழத்து இலக்கியத்தில் விதைத்ததும் இதுவே. இச் செல்வாக்கால் உரத்ததோர் இலக்கியப் பட்டாளத்தையும் தன்னகத்தே சேர்த்துக் கொண்டது. எனவே, வெளிவந்த பெரும் பான்மையான இலக்கியப் படைப்புகளும் இவ்வியக்கத்தின் கருத்தியலை உள் வாங்கியனவாகவே காணப்பட்டன. பொழுது போக்கு இலக்கியங்கள் தடைப்பட்டன. முற்போக்கு இலக்கியத்தில் **உள்ளடக்கம்** வெகுவாக வலியுறுத்தப் பட்டது. **வாசித்த**வைகள் வாசகனின் மனதின் ஆழத்தைத் தொட்டு, வாழ்வைச் செழுமைப்படுத்த உதவின. இப்படியிருக்க, இன்றைய திறனாய்வாளர்கள் செம்மைப்படுத்தலை வற்புறுத்துவது இது வரை ஈழத்து இலக்கியவாதிகள் சாதித் தவைகளையும் சோதனைக்கு உட்படுத்துகின்றதாகவேயுள்ளது.

படைப்பாளியின் இல்லத்தில் இலக்கிய ஈடுபாடுள்ளவர்கள் இருந்தால் அவர்களே சம்பந்தப்பட்ட படைப்பாளியின் முதல் வாசகராகலாம். ஊனங்களை எடுத்துரைத்துச் செம்மைப்படுத்தவும் முடியும். நண்பர்கள் மூலமாகவும் இதைச் செய்விக்கலாம். இதைச் செய்வதன் மூலமாக அச்சு ஊடகங்களின் ஊழியரது வேலையைக் குறைக்கலாம். ஆனால், பெரும்பாலான படைப்பாளிகள் இதைச் செய்வதில்லை! ஏனென்றால் மற்றவர்கள்- படைப்புக் குறித்து ''அதை'', ''இதை''ச் சொன்னால் அவர்கள் தாங்கிக் கொள்ளமாட்டார்கள். சலித்துப் போய் புனைவையே நிறுத்தியும் கொள்வர். அது மட்டுமன்றி அச்சு ஊடகங்கள் ஏதாவது திருத்தம் செய்து படைப்பை வெளியிட்டால், ''என் எழுத்தைத் திருத்த அவருக்கு என்ன தகுதி இருக்கு? காயடித்து விட்டாரே.'' எனவும் முணுமுணுப்பர். இப்போக்குப் படைப்பாளிக்குப் பாதகமாகவே அமையுமென்பதை இத்தகைய 'தலைக்கனம்' பிடித்த பிரமாக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

பத்திரிகை ஆசிரியர் ஒருவரிடம் படைப்பொன்றைக் கொடுத்த போது, இணைத்திருந்த கடிதத்தை மட்டும் வாசித்துவிட்டுப் படைப்பைப் பிரசுரிப்பதற்கான ஆயத்தங்களைச் செய்ய அனுப்பினார். இச் செயற்பாடு பத்திரிகை ஆசிரியர் படைப்பாளி மீது வைத்திருந்த நம்பிக்கையையே காட்டுகின்றது. இத்தகைய நம்பிக்கையைப் படைப்பாளிகள் தமது ஆற்றல்கள் மூலம் வளர்த்து விட்டால் அவர்களது படைப்புகளைச் செம்மைப்படுத்த வேண்டுமென்ற எண்ணமே எழாது.

ஈழத்துப் பத்திரிகை உலக ஜாம்பவான் எஸ்.டி. சிவநாயகம், தினபதி நாளாந்த ஏட்டில் தினமொரு சிறுகதையை வெளியிட்டு இளம் படைப்பாளிகளை ஊக்குவித்ததை ஈழத்து இலக்கிய உலகு இன்னமும் நினைவில் வைத்திருக்கும். இச் செயற்பாட்டுக்கும் ஒரு நிபந்தனை இருந்தது. சம்பந்தப்பட்ட கதையை நாடறிந்த எழுத்தாளரொருவர் பரிந்துரைத்திருக்க வேண்டும்! இந்த நாடறிந்த எழுத்தாளர் ஊனமானவைகளைச் சிபாரிசு செய்வாரா? படைப்



பைச் செம்மைப்படுத்தியே தனது பரிந்துரையைச் செய்திருப்பார்!

சில ஆண்டுகளுக்கு முன் தினகரன் தினசரியில் **'புதுப் புனல்'** என்றொரு பகுதி வெளியானது. அமரர் **எம். எச். எம். ஷம்ஸ்** இதற்குப் பொறுப்பாக இருந்தார். வளர் இளம் எழுத்தாளர்களது புனைவுகள் இதில் சேர்க்கப்பட்டன. ஷம்ஸ் கதைகளை நன்கு படித்து நிறைவானவைகளைப் பிரசுரித்தார். ஊனமானவைகளை நிராகரித்து எந்தெந்த விதத்தில் அவை ஊனப்பட்டிருக்கின்றனவென்பதை அம்பலப்படுத்திப் பத்திரிகையிலும் பிரசுரித்தார். இத்தகைய செம்மைப்படுத்தலை உண்மையில் உன்னதமான அர்ப்பணிப்பான சேவை என்றே கூற வேண்டும்.

குறுநாவலொன்றைப் பத்திரிகையொன்றுக்குச் சமர்ப்பித்தபோது, பொறுப்பாக இருந்த ஆசிரியர் திருப்திப்படவில்லை. சில அத்தியாயங்கள் விறுவிறுப்பில்லாமல் Dry ஆக இருப்பதாக அதைத் திருப்பிப் படைப்பாளியிடம் கொடுத்துவிட்டார். நம்பிக்கையை இழக்காத படைப்பாளி முதல் பக்கத்திலிருந்து கடைசி வரை திருப்பி எழுதினார். குறுநாவல் பிரசுரமானது. ஆசிரியர் படைப்பாளியைத் தட்டிக் கொடுத்தார். பாராட்டி நேயர்கள் கடிதம் எழுதி இருந்ததாகவும் சொன்னார். சம்பந்தப்பட்ட படைப்பாளி திருப்பிக் கொடுத்த போது மனமுடைந்து நாவலைக் கிடையில் போட்டிருந்தால் படைப்பாளிக்கு அத்தகைய பெருமை கிடைத்திருக்குமா? ஆற்றல் தான் அம்பலத்துக்கு வந்திருக்குமா?

படைப்பாளி தனது படைப்பைத் திருப்பி எழுதும் போது- நிச்சயமாக அது அசலின் நகலாக அமையாது. சொற்களில் மட்டுமன்றிக் கட்டமைப்பிலும் மாற்றத்தைக் காட்டும். எனவே, படைப்பாளிகள் மீண்டும் மீண்டும் படைப்புகளைக் கருத்தூன்றி வாசித்துச் செம்மைப்படுத்தத் தயங்கக் கூடாது. உன்னதமான படைப்பே ஆளுமையை எழுச்சிப்படுத்தும். அத்தகைய படைப்புகள் தான் மக்களது இயல்பு வாழ்க்கையைச் சித்திரித்து, நடைமுறை வாழ்வை விமர்சனத்துக்குள்ளாக்கும்.

இது இப்படியிருக்க, இந்த விடயத்தின் மறுபக்கத்தையும் இலக்கிய நோக்கர்கள் கவனத்துக்கு எடுக்க வேண்டும். அச்சு ஊடகமொன்றுக்கு- நான்கெழுத்தில் தலைப்பிட்டுப் படைப்பொன்றை அனுப்பிய பொழுது, அது கிடையில் போடப்பட்டது. விசாரித்த போது தலைப்புக் கடுகாக இருப்பதாகவும் நீளமான தலைப்பிட வேண்டுமெனவும் கோரினர். இது படைப்பாளிக்கும் சோதனையாக அமைந்தது. கதையின் கருப்பொருளை ஆசிரிய பீடம் ஏற்காததால் இந்தத் 'தட்டிக் கழிப்பா' என ஊகிக்க வைத்தது. ஒன்பதெழுத்துகளில் தலைப்பை மாற்றிக் கொடுத்த போது, பிரசுரிக்கப்பட்டது. இதெதற்காக? பொறுப்பாசிரியர் எண் சோதிடப் பிரியரா?

'தூண்டில்' என்ற தலைப்பை 'தூண்டல்' என்பதே பொருத்தமானதெனப் பெரியாரொருவர் கருத்துச் சொன்னார்.

கதையின் தீர்வைக் கதைஞர் படைப்பில் காட்டக் கூடாதெனச் சில திறனாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாளர்கள் கூறுவதுண்டு. கதையின் தீர்வு தலைப்பிலும் தொக்கி நிற்கலாம். எனவே படைப்புக்குத் தலைப்பு அதிமுக்கியம்.

சிற்றேடொன்றுக்குச் சிறுகதையொன்றை அனுப்பிய போது, அது படைப்பாளிக்குத் திரும்பி அனுப்பப்பட்டது. நாகரிகமாக, பண்பாக அவ்வேடு காரணத்தை எழுத்திலும் பதிவு செய்திருந்தது. பிறமொழிச் சொற்கள் அதிகமெனச் சுட்டிக் காட்டியிருந்தது. கதை கொழும்பில் பேருந்துக்குள் நிகழ்கின்றது. இச் சூழலில் தனித் தமிழ் சாத்தியப்படுமா? உரையாடல்கள் அப்படி இருக்குமா? கதைஞர் தனது தனித் தமிழ் வீச்சைக் காட்டி இருந்தால்- அப் படைப்பு யதார்த்தமாக இருந்திருக்குமா? இத்தகைய பிரச்சினைகள் இன்று ஊடகவியலாளர்களுக்கும் படைப்பாளிகளுக்கும் நடுவே சுவராக எழுந்து நிற்கின்றன. இவைகளையும் செம்மைப் படுத்திச் சீராக்குவது இன்றைய படைப்பிலக்கியத்தின் தேவையாக இருக்கின்றது.

'மீசை நரைத்தாலும் ஆசை நரைக்கவில்லை' என்ற பாங்கில் இன்று பவள விழா வயதினரும் இளசுகளோடு சேர்ந்து புனைவிலக்கியம் படைக்க முன் வந்து கொண்டிருக்கின்றனர். மகா சந்தோஷம். எழுத்துத் தனி மனித உணர்வுகளுக்கு வடிகாலாக அமையுமென ஆழ்ந்த இலக்கியப் புலமையாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். ஆனால், இவர்கள் முன்னெந்தக் காலத்திலும் படைப்பூழியத்தில் ஈடுபட்டிருக்கமாட்டார்கள்! தாம் உலகப் பேரிலக்கியங்களைக் கரைத்துக் குடித்திருப்பதாகவும் எழுப்பிச் சொல்வர். இவர்களுக்கு முற்றத்து மல்லிகையின் மணம் தெரியாது. இப் புது வரவுகளின் சில படைப்புகளை வாசிக்கும் போது மனம் குமுறும். "நம்பலாம் நடந்தது" என்ற பத்திகளில் வெளிவந்திருக்க வேண்டியவைகளாகவிருக்கும். "வயது போனவர் ஏறிவந்து தாறார் என்ன செய்வது?" எனப் பத்திரிகையாளர்கள் தம்பக்கத்தை நியாயபடுத்துவர். அப்போ வாசகனின் தலையில் 'குப்பை கூழங்களைக் கட்டியடிக்க முடியுமா?' இலக்கிய வாசிப்பு நுகர்ச்சி தடைப்படாதா? படைப்பிலக்கியத்துக்குச் சகல பருவத்தினரதும் பங்களிப்புக் குவியத்தான் வேண்டும். இருந்தும், உரத்த அர்ப்பணிப்புகளின் மூலம்- தமிழகத்துக்கே சவாலிடுமளவுக்கு உயர்ந்துள்ள ஈழத்துப் படைப்பிலக்கிய ஆற்றலைக் கொச்சைப்படுத்துவதா? மதிப்பிறக்கம் செய்வதா? எப்பருவத்தினராக இருப்பினும் பிரசுர வேட்கை, புகழ் என்பவற்றை நச்சி அவசரக் கோலத்தில் தமது ஆக்கங்களை வெளியிட முனையக் கூடாது. தமக்கென்றொரு சுயதிருப்தி வந்த பின்னரே புனைவுகளைக் நேரப் பிரயோகமாகவோ அல்லது தபால் மூலமாகவோ அச்சு ஊடகங்களை அடையச் செய்ய வேண்டும்.

நடந்த உண்மைக் கதையைத் தான் எழுதுகிறேன். படைப்பு யதார்த்தமாக இருந்தாத்தான் இலக்கியமாகும் எனவும் சிலர் வாதிடுவதுண்டு. கதா மாந்தர்களைக் கூட நம்மோடு தினசரி ஊடாடுபவர்கள் என எண்பித்து, அப்பாத்திரங்களோடு தமக்கிருக்கும் உறவையும் கதைஞர்கள் அடிக் குறிப்பிட்டுக் காட்டுவர். குறுங்கதைகளைக் கூடச் செம்மையாகப் படைக்க முடியாத அநுபவப் பிரம்மாக்கள் எம்மத்தியில் 'எழுத்தாளன், படைப்பாளி, கதைஞன்' என்ற 'பந்



தா'க்களோடு வலம் வருவதைத் தரிசிக்கிறோம். ஓரளவுக்கேனும் இலக்கிய ஆளுமையுள்ள படைப்பாளிக்கு இதெல்லாம் வியப்பைத் தான் தரும்!

எவரிடமாவது சென்று தனது படைப்பைச் செம்மைப்படுத்தும்படி இரப்பதைத் தவிர்க்கக் கதைஞர் தனது ஆக்கத்தைத் தானே மதிப்பிடும் தரத்தவராக இருக்க வேண்டும். இது எப்படிச் சுவறும்? கை கொடுக்கக் கூடியது தீவிர வாசிப்புத்தான்! தொடர் படைப்பாளி இலக்கிய வாசகனாக ஆகவேண்டும். எந்தவொரு படைப்பாளியினோடான குரோதத்தினாலும் தான் சங்கை செய்யாத கருத்தியலுக்காவும் படைப்பாளியை ஒதுக்கி வைப்பது அபக்குவ நிலையே! முற்போக்கு, நற்போக்கு என்பவைகளோடு நின்று விடாது மரபு இலக்கியங்களையும், மு. தளையசிங்கம் போன்றோரது இலக்கியங்களையும் வாசிக்க வேண்டும். பிற மொழிப் பரீச்சயமற்றவர்கள் மொழி பெயர்ப்புகளை வாசிக்கலாம். படைப்பிலக்கிய விமர்சனங்களைத் தொடர்ச்சியாக வாசிக்க வேண்டும். கருத்தரங்குகள், புனைவிலக்கியப் பட்டறைகள் என்பவற்றில் கலந்து கொள்ள வேண்டும். நிச்சயமாக இதனால் கருத்துச் செழுமை, நோக்கு, உரு, சொல்லாட்சி என்பவை செம்மையாகும். சுய செம்மைப் படுத்தல் உச்சம் பெறும். இந்த விடயத்தில் படைப்பாளிகள் கண்டது கற்கப் பண்டிதனாவான் என்ற எமது மூத்தோர் வாக்கையும் மனங் கொள்ளல் வேண்டும்.

புனைவொன்றின் முதல் பந்தியைப் படித்தே அப்படைப்பின் தரத்தை எடை போடலாமெனச் சில மூத்த இலக்கியவாதிகள் கூறுவதுண்டு. இது சர்ச்சைக்குரியதே! படைப்பாளியொருவர் நல்லதொரு கருத்தைச் சொல்ல எத்தனித்துப் புனைவாற்றல் தேக்கத்தால் ஆரம்பத்திலேயே தன் படைப்பைக் 'கொட்டிக் குலைத்து' விடலாம்! ஆனால், படைப்புக்குள் செல்லச் செல்ல வாசகனைத் திருப்திப்படுத்தலாம். எனவே, வாசகர்கள் நுனிப் புல் மேயாது பொறுமையோடும், பொறுப்போடும் புனைவுகளை வாசிக்க வேண்டும். ஆரம்பத்தில் ஏமாற்றிய படைப்பு முடிவில் வாசகனைத் தன் கைக்குள் போட்டு விடவும் கூடும். இருந்தாலும், எந்தவொரு எழுத்துருவுக்கும் ஆரம்பம் அதிமுக்கியம். அதுவே வாசகன் புனைவுக்குள் செல்வதுக்கான நுழைவுச் சீட்டு!


நிறைவாகப் படைப்பொன்றை 'அம்போ' எனத் தள்ளி விடுவதோ அல்லது ஊனத்தோடு பிரசுரிப்பதோ ஈழத்துப் படைப்பிலக்கியத்துக்குத்தான் பாதகமாக அமையும்! அவைகளைச் செம்மைப்படுத்த வேண்டும்! தன் படைப்பை இன்னொருவரால் செம்மைப்படுத்திய பின் படித்த போது தனக்குத் திருப்தியாக இருந்ததாகப் பிரபல எழுத்தாளர் சுஜாதா கூறியுள்ளார். எனவே, அச்சு ஊடகங்கள் படைப்புகளைச் செம்மைப் படுத்தத் தயங்கக்கூடாது. தம் படைப்பு இன்னொரு வாத்தியாரால் செம்மைப்படுத்தப்படுகிறதே எனப் படைப்பாளிகள் மனங் கோணக் கூடாது. புரிந்துணர்வுகள் மேன்மையைத் தான் சொரியும். முடிந்தளவில் படைப்பாளியின் ஒத்துழைப்போடேயே படைப்புகளைச் செம்மைப்படுத்தல் ஈழத்து படைப்பிலக்கியத்துக்கு அகலித்த அந்தஸ்தை ஏற்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களத்தில் ஜெயகாந்தன்


-திக்குவல்லை கமால்



இலங்கை கலாசாரத் திணைக்களத்தின் அண்மைக்கால சிறப்புச் செயற் திட்டங்களில் ஒன்றாக, 'பிரபல படைப்பாளிகள் நூல் வரிசை' என்ற மகுடத்தில் பல்வேறு எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தி வருகிறது. அந்த வரிசையில் 'நவீன தமிழ் இலக்கியப் புரட்சிவாதி ஜெய காந்தன்' என்ற நூல் சிங்களத்தில் வெளி வந்துள்ளது.

சிங்கள வாசகர்களுக்கு ஜெயகாந்தனை அறிமுகப்படுத்துவதே இதன் பிரதான நோக்கம். அவரது பிறப்பு- வளர்ப்பு முதல் இலக்கியப் பிரவேசம் மற்றும் அவரது படைப்புக்கள்- குறிப்பாக சிறுகதைகள் பற்றிச் சுருக்கமாகவும், தெளிவாகவும் விபரிக்கப்பட்டுள்ளது. இந்நூலில்

பல்வேறு வாதப் பிரதிவாதங்களுக்குள்ளான 'அக்கினிப் பிரவேசம்' உள்ளிட்ட நான்கு சிறுகதைகளும் சேர்க்கப்பட்டுள்ளன.



இந்திராணி வசந்தா பீரிஸின் மொழியாக்க உதவியோடு, பிரதிக் கல்விப் பணிப்பாளரும் படைப் பாளியுமான க. முரளிதரன் இதனை தொகுத்துத் தந்துள்ளார்.

கடந்த ஆண்டில் புதுமைப் பித்தனை அறிமுகப் படுத்தியதை நாமறிவோம். புரிந்துணர்வு மிக்க இந்நடவடிக்கை இக்காலச் சூழலில் வரவேற்கத் தக்கதொன்றாகும்.






# 'நேசமுடன்'- ஒரு வலைப்பதிவு

ஆர். வெங்கடேஷ் தமிழக சிறுசஞ்சிகை உலகம் வழியாக அறியப்பட்ட நல்லதொரு படைப்பாளி. நாவல் சிறுகதை கவிதை என பன்முக வடிவங்களில் தன்னை வெளிப்படுத்தி வருபவர். இணையத் தளத்திலும் தீவிரமாக இயங்கி வருபவர். பல பதிப்பகங்களிலும் இணையத்தள நிறுவனங்களிலும் பணியாற்றியவர். இவர் 'நேசமுடன்' எனும் வலைப்பதிவை ஒரு சஞ்சிகை வடிவத்தில் நடத்தி வருகிறார். அத்தோடு அச்சஞ்சிகையின் உள்ளடக்கங்களை நண்பர்களுக்கு மின்னஞ்சல் மூலம் அறிவிக்கிறார். 'நேசமுடன்' அவ்வலைப்பதிவில் இடம் பெற்ற சில விடயங்களை உங்கள் பார்வைக்கு தருகிறேன்.

அவ்விடயங்கள் தமிழகத்தை வைத்து எழுதியிருந்தாலும் பொதுவான சில விடயங்களை மையப்படுத்துவதால் நமக்கும் தேவையானதும் பொருத்தமானதுமாக இருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

*http://www.nesamudan.com/blog*

1. கொச்சைப்படுத்தல் பேட்டிகள்

தினமணி நாளிதழின் ஞாயிறு இணைப்பிதழ், 'தினமணி கதிர்', 27.09.09 தேதியிட்ட இதழில் மூத்த கவிஞர் கனிமொழியின் ஒரு பக்க பேட்டி வெளிவந்திருக்கிறது. கேட்கப்பட்ட கேள்விகள் இவை:

1. உங்களைப் பற்றி?
2. உங்கள் இயற்பெயரே கனிமொழி தானா?
3. கவிதை ஆர்வம் வந்தது எப்படி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. உங்கள் ஆதர்ச எழுத்தாளர் யார்?
5. மரபுக் கவிதைகளை விட்டு நவீன கவிதைகளைத் தேர்வு செய்தது ஏன்?
6. வெளிநாட்டுப் பயணம்?
7. கவிதைகள் சார்ந்த உங்களின் வேறு பணிகள்?
8. வாங்க விரும்பும் விருது?
9. திரைப்படப் பாடல் எழுதுவீர்களா?

இப்பேட்டிக்கு எழுதப்பட்டுள்ள அறிமுக பத்திகளில் இது ஒன்று: 'கவிதைகளில் மரபுக் கவிதை, நவீன கவிதை என்ற இருவேறு வடிவங்கள் இருந்த போதும் நவீன கவிதையை தனது வசமாக்கி அந்த கவிதைக்காகவே கலைமாமணி விருதும் பெற்றுள்ளார் கலாப்ரியா.'

இந்தப் பேட்டியை இங்கே நான பிரித்து ஆராயப் போவதில்லை. அப்படிச் செய்தால், இன்னும் நிறைய செய்திகளை எடுத்துச் சொல்ல முடியும். என் ஆதங்கம், தினமணி போன்ற மூத்த பத்திரிகையாளர்கள் நிறைந்த இதழிலேயே இப்படிப்பட்ட பேட்டி வந்திருப்பதுதான். அவர்களுக்குக் கலாப்ரியாவைத் தெரியாதா? தமிழில் அவர் எத்தனை ஆண்டுகளாக எழுதுகிறார், நவீன கவிதைக்கு அவருடைய பங்களிப்பு என்ன என்றெல்லாம் அவர்களுக்குத் தெரியாதா?

அப்படி இருந்தும், அவருடன் இப்படி ஒரு ருடிமெண்டரியான பேட்டியை எடுத்துப் போடுவதில் என்ன அர்த்தமிருக்கிறது? கலைமாமணி கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் அவருடைய பங்களிப்பு நவீன கவிதையில் என்றுமே நின்று நிலைப்பது. அப்படி இருக்கும்போது, இந்தப் பேட்டி, அவருக்கு என்ன புகழைச் சேர்க்கிறது?

இலக்கியவாதிகள் பேட்டியின் வேலை என்ன? தெரியாத விவரங்களை, அனுபவங்களை, முயற்சிகளை, வாசிப்புகளை, நோக்குநிலைகளை அவரிடமிருந்து வெளிக்கொண்டு வருவதுதானே? அவருடைய சாதனைகளுக்கு மகுடம் சூட்டுவதாக அல்லவா கேள்விகள் இருக்கவேண்டும்? அல்லது அவர் செய்யத் தவறின விஷயங்களைப் பற்றிய விமர்சனமாக கேள்விகள் அமையலாம். அரசியல பேட்டிகளின் தன்மை வேறு. அது வேறு விஷயங்களை வெளியே கொண்டு வரவேண்டும்.

அந்தப் பேட்டியைப் படித்து முடிக்கும் போது, ஒரு இலக்கியவாதியின் அனுபவத்தில் ஒரு துளியையேனும் வாசகன் பெற்றிருக்கவேண்டும். அவனுடைய வாசிப்பு விரிவின் திசைகளைப் புரிந்து கொண்டு இருக்க வேண்டும். அதுதான படிக்கும் வாசகனுக்குக் கிடைக்கும் பலன்.

வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துகிறோம் என்ற பெயரில், ஒரு சாதனையாளரின் 30 ஆண்டுக்கால, 40 ஆண்டுக்கால பங்களிப்பை, கூனிக் குறுகி நிற்க வைத்துவிடுகிறார்கள். பல பேட்டிகளில் இதே பிரச்னையைப் பார்க்கிறேன். இதற்குப் பின்னால் இருக்கும், 'என்னால்தான் நீ வெளியுலகுக்கே தெரிய வருகிறாய்' என்ற தொனி மிகவும் அபாயகரமானது. அருவருப்பானது.

மூத்த எழுத்தாளர்களிடம், கவிஞர்களிடம் பேட்டி எடுக்கும்போது, ஆரம்பிக்கும் போதே, உயரமான தளத்தில் தொடங்க வேண்டும். ஆரம்பப் பத்திகளில், அவருடைய முக்கியத்துவத்தை அடிக் கோடிட்டுக் காட்டிவிட்டு, பேட்டிக்கான கேள்விகள் அடுத்த கட்டத்துக்கு நகர வேண்டும். அப்போது தான், பேட்டிக்கும் கௌரவம், அதைக் கொடுக்கும் படைப்பாளிக்கும கௌரவம், வெளியிடும் இதழுக்கும் கௌரவம்.



பேட்டிகளில் எரிச்சல் தரக்கூடிய ஒரு கேள்வி, எழுத்தாளன் என்றால், எப்போது சினிமாவுக்கு வசனம் எழுதுவீர்கள் என்ற கேள்வி. கவிஞர் என்றால், சினிமாவுக்குப் பாட்டெழுதுவீர்களா என்ற கேள்வி. சினிமாதானா ஒரு இலக்கியவாதியின் அல்டிமேட் கோல்? ஏன் வாழ்க்கையில் அவன் வேறு எதுவுமே சாதிக்க மாட்டானா? என்ன சோகை பிடித்த சிந்தனை இது? ஒரு சினிமா நடிகனிடம் போய், நீங்கள் எப்போது 'ஜே.ஜே: சில குறிப்புகள்' மாதிரி ஒரு நாவல் எழுதுவீர்கள் என்று கேட்பார்களா? எப்படி அது ஒரு அபத்தமான கேள்வியோ, அதேபோன்றதுதான், எழுததாளன் முன் வீசப்படும் சினிமாக் கேள்வியும்.

பேட்டி எடுக்கப் போகும் முன்பு, ஒரு குறிப்பிட்ட எழுத்தாளரின் ஒன்றிரண்டு புத்தகங்களையேனும் படித்திருக்க வேண்டும். இன்றைய அவசரமான பத்திரிகை உலகில், படித்துவிட்டு போவதோ, விவரங்களைத் திரட்டிக்கொண்டு போவதென்பதோ சாத்தியமே இல்லை என்று சொல்பவர்கள் இருக்கிறார்கள். இது எவ்வளவு உண்மையோ, தெரியவில்லை. ஆனால், நிலைமை இதுதான்.

இதுபோன்ற சூழ்நிலைகளிலும் பேட்டியின் தரத்தை நிமிர்த்திக் காண்பிப்பவர் அசோகமித்திரன். எப்படிப்பட்ட கேள்விகளுக்கும், எழுத்துப்பூர்வமான பதில்களால், பேட்டிக்கு உயர் அந்தஸ்தைத் தந்துவிடுபவர், அவர். பல பேட்டிகள கொடுத்த அனுபவம் அவருக்கு.

இல்லையெனில், பேட்டிகள், எழுததாளர்களை மேன்மைப்படுத்துவதைவிட, கொச்சைப்படுத்திவிடும் சாத்தியங்களே அதிகம்.

## 2.தமிழ் புத்தக விநியோகம்: என்ன பிரச்னை?

தமிழ்ப் பதிப்புலகத்தின் மார்க்கெட் சைஸ், வளர்ச்சி விகிதம், மொத்த ஆக்டிவ் பதிப்பாளர்கள் பற்றி என்னுடைய முந்தைய கட்டுரையான 'தமிழ் பதிப்புலகம் – இன்றும் நாளையும்' கட்டுரையில் பேசியிருந்தேன். அக்கட்டுரையைப் படித்த நண்பர்கள் கேட்ட கேள்விகளில் முக்கியமானது, ஏன் தமிழில் புத்தக விநியோகம் வளரவில்லை? இங்கே என்ன பிரச்னை என்பதுதான்.

தமிழில் புத்தக விநியோகம் என்பது சவலைப் பிள்ளை. ஒவ்வொரு புதுப் பதிப்பகம் தொடங்கும்போதும், எல்லாவற்றையும் ஆரம்பத்தில் இருந்தே புதிதாக ஒவ்வொருவரும் செய்ய வேண்டி இருக்கிறது. புத்தக விநியோகம் ஏற்கெனவே தயாராக இருக்கும் ஒரு உறுப்பாக இங்கே இல்லை. அதை ஒவ்வொருவரும் தம் பதிப்பகத்தின் ஒரு பகுதியாக வளர்த்து எடுக்க வேண்டி இருக்கிறது.

புத்தக விநியோகத்தை முழுமையான ஒரு தொழிலாக, வேலையாக இங்கே யாரும் எடுத்துச் செய்வதில்லை. அப்படியே இருக்கும் விநியோகஸ்தர்களும் தத்தமது ஊரைச் சுற்றி மட்டுமே புத்தகங்களை விநியோகிப்பவர்களாக இருக்கிறார்கள். கோவை என்றால் விஜயா வேலாயுதம். இவர் விநியோகஸ்தர் மட்டுமல்ல, பதிப்பாளர், புத்தகக் கடையையும் நடத்துபவர்.

அதாவது, தமிழகத்தின் பல ஊர்களில் புத்தகக் கடை வைத்திருப்பவர்களே, விநியோகஸ்தர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களால், தங்கள் ஊரைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றியுள்ள ஓரிரு ஊர்களுக்கு மட்டுமே புத்தகங்களைச் சப்ளை செய்ய முடிகிறது. தமிழகம் முழுவதற்கும் ஒரு விநியோகஸ்தர், அவரிடம் புத்தகங்களை அச்சடித்துக் கொடுத்துவிட்டால், அவர், எல்லா இடங்களிலும் போய் சேர்த்துவிடுவார் என்ற நிலைமை இன்னும் வரவில்லை.

ஆங்கிலப் புத்தக விநியோகத்திலும் இந்த நிலைமைதான். ஆனால், இன்னும் கொஞ்சம் விரிவாக அங்கே செய்ய முடிகிறது. இந்தியா புக் ஹவுஸ், இந்தியா புக் டிஸ்டிரிபியூட்டர்ஸ் போன்ற விநியோகஸ்தர்கள் இந்தியா முழுமையும் விநியோகம் செய்கிறார்கள். ஆனால், அவர்களுடைய விநியோகமும் முழுமையானது அல்ல. பல மாநிலங்களில் அவர்களால் முழுமையாக விநியோகம் செய்ய முடிவதில்லை. சென்னையில் உள்ள வெஸ்ட் லாண்ட், ஒரு முக்கிய விநியோகஸ்தர்.

இந்த விநியோகஸ்தர்களிடம் ஒரு சில செளகரியங்கள் உள்ளன. இவர்களிடம் நேரடியான விற்பனைப் பிரதிநிதிகள் இருக்கிறார்கள். அவர்கள் தமிழகத்தில் உள்ள பல கடைகளுக்குப் புத்தகங்களைக் கொண்டு சேர்த்துவிடுகிறார்கள். சில புத்தகக் கடைகள் நேரடியாக இவர்களிடமே வந்து புத்தகங்களை வாங்கிச் சென்று, தங்கள் கடைகளில் வைத்து விற்பனையும் செய்கிறார்கள்.

இதெல்லாம் செய்வதற்கு ஒரு நிர்வாக அமைப்பு வேண்டும். பணியாளர்கள் வேண்டும். பணியாளர்களுக்குச் சம்பளம், புத்தகங்களை வைக்க சேமிப்புக் கிடங்கும், இன்ன பிற வசதிகளும் வேண்டும். ஆங்கில புத்தக மார்க்கெட்டில் இதையெல்லாம் செய்துகொள்ள உரிய புத்தக கமிஷன் கிடைக்கிறது. ஆங்கில மார்க்கெட்டில், வெளிநாட்டில் இருந்து வரும் பல புத்தகங்கள் குறைந்தபட்சம் 40 சதவிகிதமேனும் விற்பனைக் கழிவுடன் வருகிறன. ஒரு சில புத்தகங்களுக்கு 70 சதவிகிதம் வரை விநியோகஸ்தர்களுக்குக் கழிவு கிடைக்கும். இதிலிருந்துதான், கடைக்காரர்களுக்கான கழிவு கொடுக்கப்படுகிறது.

விநியோகமும் மார்க்கெட்டிங்கும் ஒன்றுடன் ஒன்று இணைந்தது. ஆங்கில புத்தகங்களை வெளியிடும் பதிப்பகங்கள் தங்கள் நூல்களுக்கு பெரிய அளவில் சந்தைப்படுத்தும் திட்டங்களை, அறிவிப்புகளை, புத்தகம் வெளிவருவதற்கு முன்பே செய்யத் தொடங்கிவிடும். ஹாரி பாட்டர் நூல்களைப் பாருங்கள். அந்த நூல் வரும்முன்பே, அதைப் பற்றிய செய்திகள் தொடர்ந்து மீடியாவில் வந்து கொண்டே இருக்கும். சில இதழ்களில் அதனுடைய சாம்பிள் அத்தியாயம், எழுத்தாளரின் பேட்டி வெளியாகும். முடிந்தால் வெளியீட்டு விழா. புத்தகங்கள் வெளியான பின்பு, கடைகளில் ஒட்ட சின்னச் சின்ன போஸ்டர்கள், தொடங்க விட டாங்களர்கள் அனுப்பி வைப்பார்கள்.

ஒரு புத்தகம் பற்றிய போதிய அளவு விளம்பரம் இல்லையென்றால், அது சந்தையில் போய் சேரவே சேராது. வாங்குபவர்களுக்கு அதைப் பற்றிய முழு புரிதல் இல்லாமல் எப்படி பெரிய அளவில் வியாபாரம் சாத்தியம்? தமிழில், தோப்பில் முகம்மது மீரானின் அஞ்சுவண்ணம் தெரு நாவல் வந்திருக்கிறது. இந்தத் தகவல் எத்தனை பேருக்குத் தெரியும்? ஸ்ரீதர கணேசன், சு.தமிழ்ச்செல்வி ஆகிய எழுத்தாளர்களையும் அவர்தம் எழுத்துக்களையும் நானேதான் போய் கண்டுபிடித்து வாங்கிக்கொண்டேன். ஜெயமோகனின் விஷ்ணுபுரம் நாவல், சமீபத்தில்தான் நான்காவது பதிப்பு வெளியாகியிருக்கிறது. தமிழில் மெச்சப்படும் ஒரு நாவலுக்கே இதுதான் நிலைமை.



இதனால் என்ன பாதிப்பு? கடைகளில் என்கொயரியே இருக்காது. நாலு பேர் தொடர்ந்துபோய் ஒரு புத்தகம் இருக்கிறதா, வைத்திருக்கிறீர்களா? என்று கேட்டால் தான், கடைக்காரர் அதை வாங்கி வைப்பார். அப்போதுதான் விற்பனை அதிகரிக்கும். விற்பனை அதிகரித்தால், கடைக்காரர்கள் அதிகரிப்பார்கள், விநியோகஸ்தர்கள் அதிகரிப்பார்கள். இது ஒரு சுழற்சி.

இன்றைக்கு தமிழில் இருக்கும் நிலைமை முற்றிலும் வேறாக இருக்கிறது. கடைக்காரர்கள்தான் எல்லாம். அவர் தனது கடையில் என்ன புத்தகத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து புரொமோட் செய்கிறாரோ அந்த நூல்கள்தான் வாங்குபவர்களின் கண்களுக்குத் தென்படும். மேலும், அவரே நேராகப் பதிப்பகங்களிடம் பேசி நூல்களை வரவழைத்துக்கொள்ளுகிறார். இடையில் எதற்கு ஒரு டிஸ்டிரிபியூட்டர், அவருக்கு எதற்கு ஒரு மார்ஜின் என்று தெளிவாக பேசுகிறார்கள்.

அதனால், தமிழில் விநியோகஸ்தர் என்பவரின் ரோலுக்கே இடமில்லாமல போய்விட்டது. எல்லா பதிப்பாளர்களும் நேரடியாக புத்தகக் கடைகளையே சார்ந்திருக்கிறார்கள்.

தமிழில் விநியோகத்துறை வளர முடியாததற்கு மற்றொரு முக்கிய காரணம், தூரம். வெளிநாடுகளில் இருக்கும் பதிப்பகங்களோ, வட இந்தியாவில் இருக்கும் பதிப்பகங்களோ தமிழகத்தில் புத்தகத்தை விற்க வேண்டுமானால், அதற்கு இங்கே ஒரு விநியோகஸ்தரை வைத்துக் கொள்வது பொருத்தமாக இருக்கும். இங்கே இருக்கும் தமிழ் பதிப்பாளர்களுக்கு தமிழகத்துக்குள்ளே விநியோகம் செய்ய 'எதற்கு தனியாக விநியோகஸ்தர்கள்' என்று நினைக்கின்றன. எப்படி இருந்தாலும் வாங்குபவர்கள், சென்னை வரும்போதோ, அல்லது ஏதேனும் ஒரு புத்தகக் கண்காட்சியிலோ புத்தகத்தை வாங்கிவிடுவார்கள், விநியோகத்துக்கு என்று ஏன் கவலைப்பட வேண்டும் என்ற எண்ணமும் பதிப்பாளர்களுக்கு இருக்கலாம்.

இந்த எண்ணங்கள் ஓரளவுக்குச் சரி. ஆனால், முழுமையும் சரி என்று சொல்லி விட முடியாது. விநியோகம் என்பது பரவலாக்குதல். ஒரு நூலை பல இடங்களுக்குக் கொண்டு சேர்ப்பது அவர்களுடைய முக்கியமான வேலை. எங்கே எந்த விதமான புத்தகங்கள் விற்பனையாகக்கூடும் என்பதைப் புரிந்துகொண்டு, அங்கே அந்தத் துறை சார்ந்த நூலைக் கொண்டு போய்ச் சேர்ப்பது அவர்களுடைய வேலை. இது மார்க்கெட் இண்டெலிஜென்ஸ் சம்பந்தப்பட்டது.

எத்தனை பதிப்பாளர்களுக்கு இந்த மார்கெட் பற்றிய தெளிவு இருக்கிறது? எனக்குத் தெரியவில்லை. பள்ளி, கல்லூரி புத்தகங்கள் மட்டுமே விற்கக்கூடிய கடைகளில், பொது நூல்களும் இருக்கின்றன. ரயில்வே ஸ்டேஷன் கடைகளில் சீரியஸ் புத்தகங்கள் அடிக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. இங்கெல்லாம் விற்கக்கூடாதா? இதெல்லாம் புது சந்தையை திறக்கும் முயற்சிகள், போட்டுத்தான் பார்ப்போம், என்னாகிறது என்று புரிந்து கொள்ளலாமே? என்று பேசினால் என் பதில் மௌனம்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் கரிசனம் முழுவதும் இந்த முயற்சியில் செலவிடப்பட்டிருக்கும் நேரம், உழைப்புச் சம்பந்தப்பட்டது. தேவையற்ற இடங்களில் தேவையற்ற நூல்கள் வைக்கப்பட்டால், அதனால், எந்தப் பலனும இல்லை. உழைப்பும் நேரமும்தான் வீண்.

பதிப்பாளர்கள் நேரடியாக கடைக்காரர்களிடம் போகும்போது, பாதிப்பு பதிப்பாளர்களுக்குத்தான். அவர்களால் எத்தனை கடைகளை நேரடியாகப் பார்த்துக் கொள்ள முடியும்? விளைவு, பல பதிப்பாளர்கள், தங்களுக்கு என்று ஒரு லைன் வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். அதில் எவ்வளவு அதிகபட்சம் விற்க முடியுமோ அதை விற்பனை செய்கிறார்கள். மற்ற லைன்களில் ஆள்கள் போட்டு தொடர முடியாதபோது, அதை விட்டு விடுகிறார்கள். இரண்டு மூன்று வாரங்களுக்கு ஒரு முறை, இந்த லைனில் இருக்கும் ஒரு விற்பனைப் பையன், ஊர் ஊராகக் கிளம்பிப் போய், பணத்தை வசூல் செய்துகொண்டு வருகிறான். முடிந்தால், புதிய ஆர்டர்களையும் எடுத்துக் கொண்டு வருகிறான். இதுதான் இன்று தமிழில் நடைமுறையில் உள்ள விநியோக முறை.

விளைவு, நல்ல நூல்கள் கூட, அதிகப் படிகள் விற்பனை ஆவது இல்லை. பல நூல்கள் பல ஊர்களில் கிடைப்பது இல்லை. பல நூல்கள் கடைகளைப் போய் சேருவதே இல்லை. எல்லாம், தமிழக அரசின் நூலக ஆணையை எதிர்பார்த்து கிடங்குகளில் முடங்கிக் கிடக்கும். ஒரு நூலை ஒரே சமயத்தில் தமிழகம் முழுவது ஒரே நாளில் வெளியிட முடியாத நிலை, இங்கே. அந்த நெட்வொர்க் பலம் பல பதிப்பாளர்களுக்குக் கிடையாது.

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு, ஞானரதம் இதழ் ஆசிரியராக இருந்த தேவ சித்ரபாரதி அவர்கள் ஒரு முயற்சியை மேற்கொண்டார். ஊர் ஊராகப் புத்தகக் கடைகள் போடுகிறேன், கிட்டத்தட்ட 5000 படிகள் வரை ஒவ்வொரு நூலையும் விநியோகம் செய்ய முடியும் என்று அவர் முயன்றார். வெற்றி பெற முடியவில்லை.

அதே போல், என்.சி.பி.எச். பதிப்பகம், தமது நூல்களையும் ராதுகா பதிப்பக நூல்களையும் நடமாடும் பேருந்துகளில் வைத்து விற்பனை செய்து வந்தார்கள். நான் பல நூல்களை இந்த பேருந்து விற்பனையகங்களில் இருந்து வாங்கியிருக்கிறேன். இப்போது அந்த வாகனங்கள் கண்ணில் படுவது இல்லை. பின்னர், கிழக்கு பதிப்பகம் இதே கான்செப்ட்டை பின்பற்றி, பிராடிஜி நூல்களை விற்பனை செய்யும் வேன் ஒன்றை உருவாக்கி, கடைகள் இல்லாத ஊர்களுக்கு அனுப்பி புத்தக விற்பனையைச் செய்ய முயன்றது. அந்த முயற்சி எவ்வளவு தூரம் வெற்றி பெற்றதோ தெரியவில்லை.. தொடர்கிறதா என்றும் தெரியவில்லை.

தமிழில் புத்தக விநியோகத்தில சிறிய அளவில் ஈடுபட்டுள்ள நண்பர்களிடம பேசும் போது, அவர்கள் தெரிவிக்கும் கருத்துகளும் யோசிக்கக் தக்கதாக இருக்கின்றன. மையமான இடங்களில் தடை வைத்திருப்பவர்கள் கூடுதலான விற்பனைக் கழிவு கோருகிறார்கள். மேலும் புத்தகம் விற்ற பணத்தை உடனடியாகத் தராமல் தாமதப்படுத்துகிறார்கள். விற்காத புத்தகங்களைத் திரும்ப எடுப்பதும் சிரமமாக இருக்கிறது. அதற்கும் காலம் தாழ்த்துகிறார்கள். மற்றொரு பக்கமோ, பதிப்பாளர்கள், விற்ற புத்தகங்களின் கணக்கைக் கேட்டு, பணத்தைச் செட்டில் செய்யச் சொல்லுகிறார்கள். இரண்டு முனைகளி



லும் மாட்டிக்கொண்டு நூல் அளவு கூட லாபம் பார்க்க முடியாமல் தவிப்பவர்கள் விநியோகஸ்தர்கள்தான், என்கிறார்கள் இவர்கள்.

இந்த இடியாப்பச் சிக்கலில் எந்த முனையைப் பிடித்து, ஒழுங்கைப் புரிந்து கொள்வது என்று தெரியவில்லை. ஆனால், இந்த நிலையினால் உண்மையாக பாதிக்கப்படுபவர்கள் பதிப்பாளர்கள். நல்ல புத்தகங்கள் இருக்கும், விரிவாக விநியோகம் செய்யும் வாய்ப்பில்லாமல், போட்ட முதலீடு திரும்ப வராமல், ஒரு கட்டத்தில் மெல்ல மெல்ல நஷ்டத்தில் மூழ்கிப் போகிறார்கள்.

இவ்வளவையும் மீறி, தமிழ்ப் பதிப்புலகம் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்சம் 12 – 15 சதவிகிதம் வரை வளருகிறது. அதுவே சாதனைதான்!

## 3. மீள முடியுமா?

விடிகாலை எழுந்தவுடன் எது இருக்கிறதோ இல்லையோ, எனக்கு இணைய இணைப்பு வேண்டும். மடிக்கணினி முன் அமர்ந்து ஒரு மணிநேரம் முக்கியமான செய்தி மற்றும் பொருளாதார இணைய தளங்களை எல்லாம் படிக்க வேண்டும். பின்னர், வந்திருக்கும் மின்னஞ்சல்களை பார்த்து, பதில் போடவேண்டியவற்றுக்கு பதில் போட்டு, நாற்காலியில் இருந்து எழுந்திருக்க ஐந்தரை ஆறு மணி ஆகும். அதற்குப் பின்னர்தான் காலை நடைப் பயிற்சியே.

இணைய இணைப்பு இல்லையென்றால், மடிக் கணினி பக்கமே நான செல்வதில்லை. கடந்த பதினைந்து நாள்களாக, என் நிலைமை இப்படித்தான் ஆகிக் கொண்டு இருக்கிறது.

ஒரு நாள் எங்கள் வீட்டுத் தொலைபேசி செயலிழந்து போனது. பி.எஸ்.என்.எல். காரர்களிடம் புகார் தெரிவிக்க வந்து ரிப்பேர் செய்தார்கள். போன் வேலை செய்யத் தொடங்கியது. பிராட்பேண்ட் இணைய இணைப்புக்குக் கேடு ஏற்பட்டு விட்டது. தொலைபேசி அழைப்பு வந்தால், இங்கே இணைய இணைப்பு சரியத் தொடங்கிவிடும்.

அல்லது இணைய இணைப்பே கிடைக்காது. இங்கேதான் விசித்திரம் விளையாடும். காலையில் எழுந்தவுடன், இன்று இன்னின்ன விஷயங்களை எல்லாம் பார்க்கவேண்டும் என்ற ஆவலோடு மடிக் கணினி முன் அமர்வேன். மோடம்மை ஆன் செய்வேன். உடனே, பச்சைக் கண்கள் ஒவ்வொன்றாக விழித்துக்கொள்ளத் தொடங்கும். ஒயர்லெஸ், ஏடிஎஸ்எல், ஸ்டேட்டஸ் கண்களும் நின்று நிதானமாக ஒளிரத் தொடங்கும். ஆனால், மடிக்கணினியில் இணைய இணைப்பு வந்திருக்காது.

இங்கிருந்து டென்ஷன் ஆரம்பிக்கும். உடனே எல்லா ஒயர்களையும் மீண்டும் ஒருமுறை அழுத்தி வைப்பேன். மூன்று நான்கு முறை மோடத்தை ஆஃப் செய்து மீண்டு ஆன் செய்வேன். கணினியையும் இரண்டு மூன்று முறை ரீஸ்டார்ட் செய்வேன். ஆனால், கணினியில் மட்டும் இணைப்பு கிடைக்கவே கிடைக்காது.

அவ்வளவுதான், போதை ஜல்லென வடிந்துவிடும். அதற்குள் காலை விடிந்துவிடும். இனிமேல் கணினி முன் உட்காருவது சாத்தியமே இல்லை. எரிச்சல் பீடிக்க எழுந்துகொள்ள வேண்டியதுதான்.

அடுத்த படையெடுப்பு, திருவல்லிக்கேணி டெலிபோன் இணைப்பகத்துக்கு. அல்லது தொலைபேசியில் புகார் பதிவு. இரண்டு மூன்று மணி நேரத்துக்கெல்லாம் ஒரு லைன்மேன் போன் செய்வார். அவருக்குக் கொஞ்சம் விரிவாகப் புரிய வைக்க வேண்டும். 'போன் லைனில் பிரச்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை சார். பிராட்பேண்டில்தான் பிரச்சினை. கனெக்ஷன் வரவே மாட்டேங்குது' என்றவுடன், 'பிராட்பேண்டா சார்.. அது எங்களுக்குத் தெரியாது சார். நான் ஒரு நம்பர் தரேன். ஜே.... கிட்ட பேசுங்க.'

அடுத்தது, விவரங்கள் கேட்டபின், 'நீங்க எப்போ ஆபீஸ்லேருந்து வருவீங்க சார்?'

'சாயங்காலம் ஆகும். நீங்க வரீங்கன்னா, நான் சீக்கிரம் வரேன்.'

'அதுதான் சார் பிரச்னை. இங்க ஆள் இல்லை. இது ரொம்ப ஈஸி சார். நீங்க வீட்டுக்கு வந்துட்டு, மெஷின் முன்னால் உட்கார்ந்துட்டு என்னைக் கூப்பிடுங்க, சார். நான் போன்லேயே வழி சொல்றேன்.'

ஒரு நாள் அதையும் செய்து பார்த்தேன். அவர் சொன்ன வழிமுறைகளை எல்லாம் பின்பற்றி செய்து பார்த்தாயிற்று.

'எல்லாம் சரியா இருக்கே சார். ஏன் கனெக்ஷன் வரல?'

'அதைத்தான் நானும் கேக்கறேன் சார்?'

'திருப்பியும் கூப்பிடறேன் சார். கொஞ்சம் வெயிட் பண்ணுங்க.' இது நடந்து பத்து நாள்களாகி இருக்கும். இன்னும் அவர் கூப்பிடப் போகிறார்.

நான் படும் அவஸ்தையைப் பார்த்து, என் மனைவி களமிறங்கினார். கணினியையும் மோடத்தையும் அவர் ஆன் செய்ய சட்டென இணைய இணைப்பு கிடைத்தது. பெருமிதத்தோடு, காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டார். அப்போதுதான் இன்னொரு விஷயம் புரிந்தது, இணைப்பு முழுவதும் துண்டாகவில்லை. அது எங்கேயோ மக்கர் செய்கிறது.

இப்போது பிரச்சினை, அது எப்போது மக்கர் செய்யும் என்று தெரியாததுதான். ஏதாவது அவசரமாக தேட வேண்டும், டவுன்லோட் செய்யவேண்டும், மின்னஞ்சல் பார்க்க வேண்டும் என்றால், அன்று இணைப்பே கிடைக்காது. நீங்கள் தலை கீழாக நின்றாலும், மோடம் சிவனே என்று பார்த்துக் கொண்டு இருக்கும். பிரும்ம நிலை.

பிரும்ம முகூர்த்தத்தின் போது, பிரும்ம நிலை ஏற்பட்டால்தான் எரிச்சல் உச்சகட்டத்தை அடையும். ஏதும் பேசாமல், காலை நடைபயிற்சிக்குப் போய்விடுவேன். கடற்கரையில் காலாற நடக்கும் போதுதான், எவ்வளவுதூரம் இதுபோன்ற நவீன வசதிகளுக்கு நான் அடிமைப்பட்டுப் போயிருக்கிறேன் என்பது புரியும்.

இணையமோ கணினியோ இல்லாமல் வாழ்ந்ததில்லையா? அல்லது உலக செய்திகளையும் பொருளாதாரத்தையும் படிக்காமல் இருந்தபோது, நான் ஒன்றும் குறைந்துபோய் விடவில்லையே? மின்னஞ்சல்கள் இல்லாமலும் வாழ்ந்திருக்கிறோமே? வசதிகள், அடிமைத்தனத்தை வளர்த்துவிட்டன என்பது ஒரு புறம். இணையத்தில் எல்லா தகவல்களும் இலவசமாகக் கிடைக்கின்றன என்று, அள்ளிப் போட்டுக்கொள்ளும் அவசரம் மறுபுறம். மற்றவர்களை விட கூடுதல் விவரங்களை, செய்திகளைத் தெரிந்தவனாக இருக்க வேண்டும் என்ற போட்டி மனப்பான்மையின் பரபரப்பு இன்னொரு புறம். விளைவு, இன்று என்னால் கையால் எதையும் எழுத முடியாத நிலை. எங்கே போனாலும் எழுதுவதற்கு கணினியோ, மடிக்கணினியோ வேண்டும். படிக்க இணைய இணைப்பு வேண்டும்.

யோசித்துப் பார்த்தால், அடிமைததனம் வெட்கமாக இருக்கிறது. தெரியவில்லை. இதிலிருந்து மீளவேண்டுமா அல்லது இப்படித்தான் வாழவேண்டுமா? மேலும் இந்த வலையில் இருந்து மீளத்தான் முடியுமா? அதுவும் தெரியவில்லை.



# இது ஓர் அரசியல் பொழுதுபோக்கு- சுற்றுலா!

**-டொமினிக் ஜீவா**

சமீபத்தில் இலங்கைக்கு அரசியல் சுற்றுலாப் பயணம் வந்து சென்ற இந்திய நாடாளுமன்றத் தமிழகப் பிரதிநிதிகளின் வருகையையொட்டி வெளிவந்த சகல தகவல்களையும் நான் மிக்க கவனத்துடன் படித்துத் தெரிந்து வைத்திருந்தேன்.

பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள் ஈறாக ஏதோ பெரியதொரு அரசியல் திருப்ப நிகழ்ச்சி அவர்களினது வரவால் இந்த மண்ணில் நிகழ்ந்தேறப் போகின்றது என்றொரு மன மாயையை நமது மக்களின் மனசுகளில் ஏற்கனவே விதைத்து வைத்திருந்தன, இத்தகைய வெகுசன ஊடகங்கள்!

அவர்கள் வந்தார்கள். பார்த்தார்கள். திரும்பிப் போனார்கள். மத்திய சர்க்காருக்கு அறிக்கை சமர்ப்பித்தார்கள். அவ்வளவுதான்.- ஒன்றுமே நடைபெறப் போவதில்லை!

குழுவாக வந்தவர்களில் நான் மிக மிகக் கவனமாக அவதானிக்கப்பட்டவர் கவிஞர் கனிமொழி அவர்கள் தான். காரணம், ஏற்கனவே அவரொரு கவிஞராகப் புதிய தலைமுறையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தவர். இளந்தலைமுறையினால் அங்கீகரிக்கப்பட்டு ஓரளவு இலக்கிய உலகில் பேசப்பட்டு வந்தவர்: தமிழின் துரதிர்ஷ்டம் என்னவென்றால், அவர் இன்று ஓர் அரசியல்வாதியாகத் தந்தையாரால் முடி சூட்டப்பட்டு விட்டார்.

பிரபலங்களின் இரத்தத் தொடர்புள்ள வாரிசுகளாக இருப்பது மிகப் பெரிய வசதிகளில் இதுவும் ஒன்றுதான். சுலபமாகப் பிரபலப் புகழ் பெற்றுவிடலாம். அதே சமயம் ஊடகங்களின் தனிக் கவனத்திற்கும் கிட்டிய வெகுசனப் புகழுக்கும் ஆட்பட்டு விடலாம்.

இந்தப் பகைப்புலத்தில் தான் நான் கவிஞர் கனிமொழியை இன்று நின்று நிதானமாக அவதானித்துப் பார்க்கின்றேன்.

அவர் தனது தந்தையின் அடியொற்றி இலக்கிய வாழ்க்கைக்குக் கவிஞராக அறிமுகப்படுத்தப்பட்டிருந்த வேளையிலும், அவரிடம் திராவிட இயக்கத்தினருக்கென்றே உரிமையான எழுத்து நடையோ வசனச் செல்வாக்கோ சிந்தனையோட்டமோ ஆரம்ப காலங்களிலிருந்து தென்படவேயில்லை.

அவரொரு நவீன தமிழ்க் கவிஞராகவே தன்னை இனங்காட்டி வந்துள்ளார். அதன் பெறுபேறுகளையும் பலர் அவரது கவிதைகளின் உள்ளடக்கத்திலும் மொழி ஆளுமைகளிலும் சிந்தனைப் போக்கிலும் அவதானித்து வந்திருக்கலாம்.

என்று அவர் நாடாளுமன்றப் பதவி ஏற்பு மூலம் அரசியல்வாதி ஆக்கப்பட்டாரோ அன்றே அவரது கவி ஆளுமை தோற்றுப் போய்விட்டதோ என்றே நான் கருதுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டாக வந்த பிரதிநிதிகளில் அவர் ஒருவர் தான் பிரகாசமான பெண்மணியாகக் கருதப்பட்டார். ஊடகங்களால் பிரதானமாகக் கணிக் கப்பட்டார்.

அதற்குப் பிரதான காரணமே அவரது தந்தையார், தமிழகத்தின் முதலமைச்சர் என்ற பின்னணிதான்.

எனவே, ஊடகங்களும் அவருக்கும் அவரது செய்திகளுக்கும் மிகமிகப் பிரதான முக்கிய இடம் கொடுத்து தகவல்களை வெளியிட்டு வந்திருந்தன. பெரும்பாலாக ஏனையோர்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டனர். சந்தித்த பிரமுகர்களும் அவரை நோக்கியே தத்தமது கவனத்தைக் கவர முனைப்புக் காட்டி இயங்கினர். புகைப்படங்களுக்கு 'போஸ்' கொடுத்து மகிழ்ந்தனர்.

கவிஞராக முளைவிட்டு மக்கள் மத்தியில் வேர்விட்டு வளர முயற்சித்த கனிமொழி இன்று அரசியல்வாதியாகப் பரிணாமம் எடுத்தது தான், மிக மிகக் விசனிக்கத் தக்க ஒரு சங்கதியாகும்.

இந்த அரசியல் பிரவேசத்திற்கு ஒரு பின்னணியும் உண்டு. கலைஞருக்குத் தொடர்ந்து இயங்க முடியாத வயசுத் தள்ளாமை. மதுரை மகன் பற்றி தொடர்ந்து வருகின்ற செய்திகளும் அத்தனை ஆரோக்கியமானதாகத் தெரியவில்லை. ஆட்சிக் கட்டிலில் இருப்பவரும் அத்தனை ஆழ அகலமானவராக உருவாகவில்லை.

அடுத்துப் பயமுறுத்திக் கொண்டிருப்பவரும் ஒரு பெண். அரசியலில் பெண்களின் பங்கு சம உரிமை கேட்கும் நிலைக்கு இன்று உயர்ந்து போயுள்ளது. வருங்காலத்தில் பெண் தலைமையும் அவசியம் தேவைப்படும். அதே சமயம் அந்தத் தலைமை வெளியே இருந்தும் வந்து, தொந்தரவு பண்ணக் கூடாது. எனவே, இவையாவற்றையும் கணக்கில் எடுத்துப் பார்க்க வேண்டிய கட்டாய நிலைக்குக் கலைஞர் தள்ளப்பட்டதின் பெறுபேறுதான் தொடர்ந்து குடும்ப ஆதிக்க அரசியல் நிலைக்க வேண்டுமென்றால், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணையும் பக்கம் பக்கமாக வளர்த்தெடுக்க வேண்டியது காலத்தின் தேவை. இதற்குக் கலைஞர் ஈடு கொடுக்க வேண்டிய இன்றைய அரசியல் சூழ்நிலையும் ஏற்பட்டுவிட்டது.

இதுவரை காலமும் திராவிடக் கட்சியினர் சர்வதேச அளவில் கவனம் செலுத்தியதேயில்லை. ஆகத் திராவிடம் தான் பேச்சும் மூச்சும்.

இன்று காலம் மாறிவிட்டது.

அகில இந்திய அரசியலில் பங்கேற்க வேண்டுமானால், உலக அரசியல் பக்கமும் வந்து சேர வேண்டிய காலத்தின் கட்டாய தேவையாகிவிட்டது. ஆகவே, ஒரு கல்லில் இரண்டு மாங்காய்கள்! எனவே தான் இலங்கை இனப் பிரச்சினையில் தமிழக ஆளும் கூட்டணியின் அதீத கவனம் செலுத்தப்பட்டு, பத்துப் பேர்கள் கூட்டாக வந்து, கூட்டாகச் சென்றுவிட்ட சங்கதி.

இதில் ஓர் அவதானத்தை நான் வெகு துல்லியமாக கண்டு கண்டு எனக்குள் நானே சிரித்துக் கொண்டேன்.

அடுத்த நேர உணவுக்கோ மாற்றிக் கட்டக் கூடிய துணிக்கோ வழியற்றதுகளின் முகாம்களைத் தேடித் தான் இந்தக் குழுவினர் இந்த மண்ணுக்கு வந்து சென்றார்கள். நமக்குச் சொல்லப்பட்ட தகவல்களும் இதை யொட்டியே அமைவதாயிருந்தன.



ஆனால், பத்திரிகை, தொலைக்காட்சிகளில் நாம் பார்த்த வண்ணக் காட்சிகள் ஏதோ சினிமாப் படங்களின் 'சூட்டிங்' நடந்ததைப் போலத் தான் பெரும்பாலும் எமக்குக் காட்சிப்படுத்தப்பட்டன.

சுருக்கமாக ஒரு பார்வையை என் கண்கள் அடிக்கடி தரிசித்தன. அடுத்த நேரம் உடுத்த உடுப்பற்ற 'இது'களைக் காண வேண்டுமெனத் துடித்துப் பதைத்து ஓடோடி வந்த இவர்களில் பொறுப்பானவரான கனிமொழி, இந்த இந்த நிகழ்ச்சிகளில் காட்சி தரும் வேளைகளில் எல்லாம் விதம் விதமான வண்ணச் சேலைகளுடன் தான் காட்சி தந்தார் என்பதை சீரணிக்கவே என்னால் முடியவில்லை!- திரைப் படப் படப் பிடிப்பாகக் காட்சி தந்தன இவைகள் யாவும்

இந்த வேளையில் மகத்தான மனிதன் காமராஜரை நினைக்க வேண்டியுள்ளது. கூட்டத்திற்குப் போக இருப்பதால் மாற்று வேட்டி இல்லாமல் உடுத்திருந்த வேட்டியையே தோய்த்துக் காயப் போட்டு விட்டுக் காவலிருந்த மக்கள் தலைவன் ஜீவாவை எண்ணிப் பார்க்கின்றது, மனசு. கக்கன் என்றொரு பண்பாளனை, ஜே. சிவசண்முகம்பிள்ளை என்றொரு பெரிய மனிதனை ஆர். நல்லக்கண்ணு என்ற இன்றும் வாழ்ந்து வரும் தோழர் திருமகனை இந்தக் கட்டத்தில் நினைத்து நினைத்துப் பெருமிதம் கொள்ளுகின்றது, என் நெஞ்சு.

கவி மனசு அரசியலாக்கப்படும் போது, இப்படித்தான் திரிபடைந்து விடுமோ, என்னமோ, எனக்கேதுமே தெரியவில்லை!

உண்மையாகவே ஈழத்துத் தமிழ் மக்களுக்கு ஆக்கபூர்வமான திசைவழிகளில் உதவ வேண்டுமானால், இங்கு வர வேண்டிய அவசர தேவையில்லை. அங்கிருந்தபடியே செய்து முடிக்கலாம், பலவற்றை.

தமிழ் மொழி வெறும் இந்திய மொழிகளில் ஒன்று மாத்திரமல்ல. அம் மொழி இன்று சர்வதேசப் பாஷை. தமிழ் மொழி இந்திய மொழிகளில் ஒன்றென்ற காரணத்தால் வெளிநாடுகளில் இருந்து தமிழில் வெளிவரும் எந்தப் புத்தகங்களையும், சஞ்சிகைகளையும் மத்திய அரசு சட்டபூர்வமாகவே தடுத்துச் சட்டமியற்றி வைத்துள்ளது.

வங்கம், இந்தி, ஆந்திர, மலையாள, மொழிகளைப் போல, தமிழ் வெறும்- இந்தியப் பிரதேச மொழியல்ல. இன்று கணக்கெடுத்துப் பார்த்தால், தமிழின் சர்வதேசப் பரம்பல் பெறுமதி விளங்கும். உலகம் முழுக்கத் தமிழன் வாழுகின்றான். தமிழில் பேசுகின்றான். எழுதுகின்றான்!

இலங்கையிலிருந்து வாரம் ஒரு புதிய நூல் வெளிவந்து கொண்டிருக்கின்றது.

முடியுமானால் மத்திய சர்க்காரில் இன்று அமைச்சர் பதவி வகிக்கும் தி.மு.க. முன்முயற்சி எடுத்து, வெளிநாடுகளில் இருந்து வெளிவரும் தமிழ் நூல்களுக்கு மத்திய சர்க்கார் விதித்துள்ள மொழித் தடையை நீக்கட்டுமே- பார்க்கலாம்!

அங்கிருந்தே இந்த வேலைகளை பாராளுமன்றப் பிரதிநிதி என்ற முறையில் கவிஞர் கனிமொழி செய்து முடிக்கலாம். தமிழ் மொழிக்கு இந்தச் செயல் தனித்துவச் சிறப்பைக் கூடத் தரலாம்.

ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்கள் இந்த ஆக்கபூர்வமான யோசனையைத் தான் இப்போதைக்குத் தந்துதவலாம்- கவிஞர் கனிமொழி என்ன சொல்லப் போகின்றார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல முறையில் எழுதும் நடை

–கே. எஸ். சிவகுமாரன்

இலக்கிய நடை எழுதப்படும் பொருளுடன் இணைந்துள்ளது. ஆயினும், உள்ளடக்கத்தைப் புரியாத முறையில் எழுத்து நடை அமையக் கூடாது என்பதை நாமறிவோம்.

என்னைப் பொறுத்தமட்டில் இலக்கியம் தொடர்பான எனது எழுத்து நடை செம்மையாய் அமைய நான் கடைப்பிடிக்கும் சில பண்புகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். சிறப்புத் தன்மையுடைய சொற்றொடர்களை (Fancy Phrases) த் தவிர்த்துக் கொள்வேன்.

வருணனையாக அதிகம் எழுத மாட்டேன். நேரடியாகவே எளிதிற் புரிந்து கொள்ளும் விதத்தில் எழுத முற்படுவேன். கூடியவரை பொருத்தமான, உரிய சொல்லையே பயன்படுத்துவேன். விபரிப்புக் கூட அருந்தலாக வருமிடத்து பொதுப்படையாக அல்லாமல், குறித்த வருணனையாகப் பொருள் புலப்படும் விதத்தில் எழுதுதல் நான் விரும்புவது.

ஆக்க இலக்கியமாகப் படைப்பு இருக்கும் பட்சத்தில் எழுத்து நடையை விட உணர்வு நிலைச் சித்திரிப்பு முக்கியமான அம்சம் எனக் கருதுகிறேன். உணர்வு நிலையை Mood என்பார்கள். எடுத்துக் கொண்ட பொருள் தொடர்பாக ஆசிரியர் கொண்டுள்ள எண்ணப் போக்கை இது குறிக்கும். எழுத்து ஊடாக ஆசிரியர் தன்னை வெளிப்படுத்தும் பாங்கை Mood காட்டி நிற்கும்.

ஆசிரியர் தான் கூற வருவதை முழுமையாகக் கூறிப் படிப்பவரிடையே பிரதிபலிப்பை ஏற்படும் விதத்தில் எதிர்வினையை எழுப்பும் விதத்தில் எழுதப்படுவதை நல்ல நடை என்பார்கள்.

நல்ல எழுத்து நடையில் நல்ல மொழிவளப் பிரயோகமும் தென்படும். முறைசார்ந்த மொழியாகட்டும் (Formal), அவ்வாறல்லாத மொழியாகட்டும் (Informal) மொழி பொருத்தமான சொற்பிரயோகத்தைக் கொண்டதாக இருத்தல் விரும்பத்தக்கது.

மொழியின் தொனி (Tone) கூட அவதானிக்கப்படும். தொனி என்னும் பொழுது நாம் மனதிற் கொண்டுள்ளது இது தான். குறிப்பிட்ட உணர்ச்சியை வெளிப்படுத்தும் உணர்ச்சி நயம்.

எழுதுபவரின் ஆளுமையும் (Personality) கவனத்திற்குரியது. உள்ளத்தில் ஒளியுண்டாயின் வாக்கிலும் ஒளியுண்டாம், Style in the man என்றெல்லாம் நம் முன்னோர் கூறிப் போனார்கள்.

திறனாய்வில் எழுத்து நடை எவ்வாறு அமைகிறது என்று அடுத்துப் பார்ப்போம். முதலிலே எடுத்துக் கொண்ட பொருள் பற்றிய விளக்கமும், பகுப்பாய்வும் அமைகிறது. அதன் பின்னர் திறனாய்வாளரின் தனிப்பட்ட கருத்து அல்லது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.



இடையிடையே அபிப்பிராய/ திறனாய்வுக் கூற்றுக்கள் தெரிவிக்கப்படுகின்றன.

திறனாய்வின் ஆரம்பத்திலே ஆசிரியரின் தனிப்பட்ட கருத்துத் தவிர்க்கப்பட்டு, எடுத்துக் கொண்ட பொருள் பற்றி விளக்கமும் உண்மை விபரங்களும் தரப்படுகின்றன.

சொற்கள் சிக்கனமாகப் பாவிக்கப்படும். உண்மை விபரங்களுக்கே முதலிடம் கொடுக்கப்பட வேண்டுமேயன்றி, கலகத்தை ஏற்படுத்தும் விதத்தில் மொழிப் பிரயோகம் இருத்தல் கூடாது.

எழுத்து நடை இறுக்க நிலை தவிர்ந்து மகிழ்ச்சியை வாசகரிடத்தில் ஏற்படுத்தும் விதத்தில் அமைவது விரும்பத்தக்கது. வாசகர் படிப்பதற்கு சுவாரஸ்யமாக இருக்க வேண்டும்.

கூறியது கூறலைத் தவிர்ப்பதும் அவசியம். எழுத்து நடை தெளிந்த நீரோடை போன்று வாசகனைத் தன்பக்கம் இழுத்துச் செல்லும் வகையில் அமைவது நல்லது.

திறனாய்வாளர் தமது கூற்றுக்களுக்கு ஆதாரமானவற்றை எடுத்துக் கொண்ட நூலில் இருந்தே பெற்று விளக்க வேண்டும்.

## யாழ் இலக்கிய வட்டம்

**மூதறிஞர், கவிஞர் அரியாலையூர் வே. ஐயாத்துரை ஞாபகார்த்த கவிதை நூலுக்கான விருது– 2008**

யாழ். இலக்கிய வட்ட அனுசரணையுடன் அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட மூதறிஞர், கவிஞர் வே. ஐயாத்துரையின் ஞாபகார்த்த கவிதை நூலுக்கான விருது பின்வரும் நூல்களுக்கு வழங்கப்படுகிறது. அதற்கான பரிசுத் தொகை. 10,000 ரூபாவை மூதறிஞர், கவிஞர் அரியாலையூர் ஐயாத்துரையின் மகனும், யாழ் இலக்கிய வட்ட உறுப்பினருமான திரு. ஐ. வரதராசா அவர்கள் வழங்கவுள்ளார். இப் பரிசுத் தொகை இரு நூல்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும். பரிசு வழங்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**பரிசு பெறும் நூல்கள்:-**

1. **இது நதியின் நாள்**- பெண்ணியா
2. **மூச்சுக்காற்றால் நிறையும் வெளிகள்**- துவாகரன்

கி. கிருபானந்தா
செயலாளர்
யாழ் இலக்கிய வட்டம்,
இலங்கை இலக்கியப் பேரவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



–டொமினிக் ஜீவா

எல்லாருமே ஒரு வயது பையன்கள். கீழ் வகுப்பு மாணவர்கள். பள்ளிக்கூடம் விடும் பொழுது சாயங்காலம் ஒருங்கி கூடி, அதில் பெரும்பாலான பையன்கள் கும்பல் கும்பலாக லூட்டி அடித்துத்தான் பொழுதைப் போக்குவார்கள். ஒருவரது தோள் மீது ஒருவர் கை போட்டபடிதான் வரிசை கட்டி நடப்பார்கள்.

பள்ளிக்கூடம் போகும் வழியில் ஒரு நீண்ட ஒழுங்கை. பக்கத்தே பிள்ளையார் கோயில். காலையிலும் சாயங்கால வேளைகளிலும் வயது போன ஐயர் ஒருவர் தினசரி வந்து அக் கோவிலில் பூஜை செய்துவிட்டுத் திரும்புவார். அவர் நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்தவர். சைக்கிளில் தான் வருவார்- போவார்.

அவர் கூட்டாக வரும் மாணவர்களைப் பார்த்துச் சிரித்து வைப்பார். பையன் களுக்குப் பரம திருப்தி, அவரது சிரிப்பால். இடையிடையே அவரைப் பற்றிப் பகிடி விட்டுச் சிரித்துக் கொண்டே செல்வார்கள்.

கோயிலுக்குப் பக்கத்தே வடக்குப் பக்கம் திரும்பிய இடத்தில் ஒரு கல்வீடு. ஓட்டு வீடு. மூன்று மாமரங்கள் பக்கம் பக்கமாக நின்றன. சற்றுத் தள்ளினாற் போல, ஒரு நாவல் மரம்.

கூட்டமாக வரும் மாணவர்களுக்கு காய்த்துத் தொங்கும் அந்த வீட்டு மாமரங்கள் மீது ஒரு கண். சில துடியாவரமான பையன்கள் இடையிடையே கல்லெடுத்து மரத்திலுள்ள காய்களை நோக்கி எறிவார்கள்.

அங்கு வலது கை மடங்கிய ஒரு பெரியவர் வீட்டுக் காவலாளியாக இருந்தார். குடியிருப்பார் ஒருவருமில்லை. கிழவன் நடு முற்றத்திலிருந்து கிடுகு பின்னிக் கொண்டிருப்பார். அதுதான் அவரது பொழுது போக்குப் போலும்.

ஒருவன் குனிந்து கையில் கல்லெடுத்து மாமரத்தை நோக்கி அடிப்பான். ஏனையோர்களும் கையில் கற்களை ஏந்தி நிற்பார்கள். சில கற்கள் இலக்குத் தவறி வீட்டு ஓட்டின் மீது விழும். சத்தம் கேட்கும்.

இவர்களினது இந்தச் சேட்டை நாளாந்தம் நடைபெறுவது வழக்கம். பழக்கப்பட்ட ஒரு சம்பவமாகவே இது நிகழும். பையன்கள் கூட்டாகக் கூடி நின்று



படபடவென்று மரத்தை நோக் கிக் கல்லடிப்பார்கள்.

''அடே பொடிசுகளா!'' எங்கேயோ மூலையிலிருந்து கிழவனின் குரல் கேட்கும். குரல் கேட்ட அடுத்த கட்டமாக வளவின் வாசல் பக்கம் நீண்ட பொல் லுடன் காட்சி தருவார் கிழவன். ''கொஞ் சம் நில்லுங்கோடா! இந்தா வந்திட் டன்'' என வேகமாகக் குடுகுடு என ஒற் றைக் கையை வெகு வேகமாக வீசிக் கொண்டு ஓடி வருவார், அந்தக் கிழவ னார்.

''சொத்திக் கையா!- சொத்திக் கைக் கிழவா!'' எனக் கோஷமெழுப் பிக் கொண்டே, பிள்ளையார் கோயில் வளவுத் திருப்பத்தினூடாக வேலிப் பொட்டுக்குள்ளால் ஓடி மறைவார்கள் கூக்குரலிட்டபடி, மாணவர்கள்.

இதில் சிறீதரன் என்ற சிறுவன் இந்தக் கலாட்டாக்கள் ஒன்றிலுமே பங்குபற்றுவதில்லை. இதில் எந்தக் காரணத்தாலோ கூடப் படிக்கும் நவநீத னுக்கு இவன் மீது சற்று மன எரிச்சல்!

அன்று கூட, ''சொத்திக் கையா!..... சொத்திக் கையா.....'' எனக் கும்பல் கூடிக் கிழவனின் அங்கக் குறை பாட் டைக் குரலெழுப்பிக் கோஷமிட்ட வேளையிலும் கூட, சிறீதரன் கூட்டத்து டன் கூட்டமாக ஓடி வந்து வேலிப் பொட்டுக்குள்ளால் புகுந்து, கூட்டத்தி னருடன் வெளியேறினானே தவிர, ஒரு தடவை கூட, அவன் வாய் திறந்து கிழவனைப் பட்டஞ் சொல்லிக் கூப்பிட வேயில்லை.

நவநீதனுக்கு இந்தச் செய்கை எரிச்சல் எரிச்சலாக இருந்தது. கிட்டத் தட்ட அந்தச் சிறார்களின் கூட்டத்திற்கு அவனொரு தனித் தலைவனாகவே கணிக்கப்பட்டான். அவனது தினசரி நடவடிக்கைகளும் அதனை மெய்ப்பிக் கும் படியாகவே காரியங்கள் நடந்தேறி வந்தன. ''ஸ்கூலிலை தான்ரா நீ ராசா. வெளியிலை நான் தாண்டா'' என்பான்.

நவநீதன், சிறீதரனின் சேட்டுக் கலரை அப்படியே அள்ளிப் பிடித்துக் கொண்டு கோபத் தொனி கொப்பளிக் கக் குரலெழுப்பிக் கேட்டான். ''சொல் லடா, சிறீ! நீ ஏன்ரா எங்களோடை சேர்ந்து கொண்டு, அந்தக் கிழவனைச் சொத்திக் கையா........ சொத்திக் கையா எண்டு ஏன்ரா கத்துறதில்லை. சொல்லடா...... சொல்லடா....... உண் மையை இப்ப சொல்லிப் போடு..... இல்லாட்டி..... இல்லாட்டி......'' சட் டையை இன்னும் இழுத்துப் பிடித்து, இறுக்கினான்.

''சொல்லுறன்ரா! சட்டையை இப்ப விடறா! அப்ப சொல்லுறன்! வீட்டிலை எனக்கொரு தாத்தா இருக்கிறார்டா. அப்பாவின்ரை அப்பாதான்ரா அவர். என்னிலை சரியான நேசமடா! எப்ப வுமே 'தம்பி.... தம்பி...!' என்று தான்ரா கூப்பிடுவார். அவருக்கும் இப்படித் தான்ரா ஒரு கை சொத்திக் கை...!''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மல்லிகை மனம் நிறைந்து பாராட்டுகின்றது



இவ்வாண்டுக்கான 'சாஹித்திய ரத்னா' விருதை ஜனாதிபதியிடமிருந்து பெற்றுக் கொண்ட நற்கனமைய, பிரபல எழுத்தாளர் 'செங்கை ஆழியான்' அவர்களை மல்லிகை மனநிறைவுடன் பாராட்டி மகிழ்கின்றது.

இன்று வரைக்கும் அவர் தொடர்ந்து எழுதி வருவது ஒரு சிறப்பு மிக்க ஒரு சாதனையாகும்.

ஆசிரியர்

## இலங்கை இலக்கியப் பேரவை விருதுபெறும் நூல்கள் - 2008

**இலங்கை இலக்கியப் பேரவையின் விருதுக்கும் பரிசுக்குமுரிய இலக்கிய நூல்கள் பின்வருமாறு :-**

1. நாவல்: லோமியா- எஸ். ஏ. உதயன்
2. சிறுகதை: நினைவுகள் மடிவதில்லை- 'சிறுவி'
3. கவிதை: இது நதியின் நாள்- பெண்ணியா
4. ஆய்வு: தகுதியான நூல்கள் கிடைக்கப் பெறவில்லை
5. சிறுவர் இலக்கியம்: தாமரையின் ஆட்டம்- கே. எம். எம். இக்பால்
6. நாடகம்: ஒரு கலைஞனின் கதை- கலைஞர். கலைச்செல்வன்
7. பல்துறை: மனமேறும் தோணி- கோகிலா மகேந்திரன்
8. சமயம்: சிவஞானபோதச் சிற்றுரை- மட்டுவில் ஆ. நடராஜா,
   இறை விழுமியம் அருள்பணி அ. ஸ்ரீபன்
9. மொழி பெயர்ப்பு: சூளவம்சம் கூறும் இலங்கை வரலாறு- செங்கை ஆழியான்
   சிறுவர் நீதி போதனைக் கதைகள்- வைரமுத்து சுந்தரேசன்
10. காவியம்: எந்நூலும் கிடைக்கப் பெறவில்லை

விழா நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

சி. சிவதாசன்
செயலாளர்
இலங்கை இலக்கியப் பேரவை





# கடலின் அக்கரை போனோரே.....

-முருகபூபதி

ஒரு காலத்தில் இந்தியாவிலிருந்து மக்களை 'கள்ளத் தோணி' என்று ஏளனம் செய்தவர்கள் இருந்தார்கள். நண்பர் மாத்தளை கார்த்திகேசுவின் ஒரு நாடகத்தில் ஒரு காட்சியில் இப்படி ஒரு வசனம் வந்ததாக, மேமன் கவியின் 'புதுசுகள்' வெளியீட்டு விழாவுக்காக யாழ்ப்பாணத்துக்கு யாழ்தேவியில் பயணித்தபொழுது என்னுடன் கிளிநொச்சி வரையில் வந்த நண்பர் 'கோமாளிகள்' ராமதாஸ் தெரிவித்தார்.

அந்த நாடகத்தை நான் பார்க்கவில்லை.

மாத்தளை கார்த்திகேசுவின் வசனம் இதுதான்: "என்னை கள்ளத்தோணி... கள்ளத்தோணி என்று சொல்றாங்க...நான் கடலையே பார்த்ததில்லையே"

காலம் கடுகுது. இன்று இலங்கையிலிருந்து ஏராளமானவர்கள் மலேசியா வந்து படகுகளில் அவுஸ்திரேலியா நோக்கி சட்டவிரோதமாக வந்து குவிந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், கள்ளத்தோணி என்று சொல்லாமல் BOAT PEOPLE என்று நாகரீகமாக இங்குள்ள வெள்ளை இனத்தவர்களும் இந்நாட்டின் ஊடகங்களில் செய்தி வாசிப்பவர்களும் அவர்களை அழைக்கின்றனர்.

எனது அப்பாவும் ஒரு காலத்தில் அதாவது 1940 களில் தமிழ்நாடு பாளையங்கோட்டையிலிருந்து சில நண்பர்களுடன் 'கள்ளத் தோணி' ஏறித்தான் புத்தளம் கற்பிட்டியில் கரையொதுங்கினாராம். அதன் பிறகு அப்பா தனது தாயகத்துக்கு திரும்பாமலேயே 1983 இல் மறைந்தார். அவர் இலங்கையில் ஒரு சிங்களப் பெண்ணை மணந்து விட்டதாக எனக்கு சேதி கொண்டு வந்தார்களாம். பாரதியார் சொன்ன புண்ணியம் தான் என்று அப்பா சொன்னார். அந்த பாக்கியத்தினாலோ தமிழ் மக்களுக்கு இலங்கையை சிங்களத்தீவு என்று சொல்லி விட்டுப் போய்விட்டார்.

அப்பாவின் மறைவுக்குப் பின்னர் 1984 இல் முதல் தடவையாக தமிழகம் சென்று அப்பாவின் உறவினர்களைப் பல்லாண்டு தேடிக் கண்டுபிடித்தபொழுது ஒருவர், "உங்கம்மா தமிழ் பேசுவாங்களா?" என்று கேட்டார் பாருங்க.

அமெரிக்காவையும் ஐரோப்பாவையும் அவுஸ்திரேலியாவையும் கண்டு பிடித்தவர்களும் படகுகளில் வந்தவர்கள்தான். இந்தியாவிலிருந்து தமது தோழர்களுடன் இலங்கை வந்த விஜயனும் படகில்தான் பயணித்தான். படகோட்டிகள் கண்டுபிடித்த நாடுகள்தான் அதிகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமார் 220 ஆண்டுகளுக்கு முன்னர் **கப்டன் குக** என்பவர் ப...கொன்றில் வந்து கண்டு பிடித்த கண்டம்தான் இந்த அவுஸ்திரேலியா. இங்கிலாந்திலிருந்து குற்ற வாளிகளை படகில் ஏற்றிவந்து இறக்கும் தேசமாக இருந்த இந்த கங்காரு நாடு, பல்தேசிய கலாசார நாடாக மாறிவிட்டது.

கடந்த சில மாதங்களுக்குள் சுமார் முப்பது படகுகள் அவுஸ்திரேலிய கடல் பிராந்தியத்துக்குள் அத்துமீறி பிரவேசி த்து, அரசுக்குப் பெரிய தலையிடியாகி விட்டது. இந்த காகிதம் எழுதிக்கொண்டி ருக்கும் சந்தர்ப்பத்தில் இங்கு அனைத்து ஊடகங்களிலும் மிக முக்கிய செய்தியாகி விட்டது இந்த படகு மக்கள் விவகாரம். இந்தோனேஷியாவுக்கும் இது ஒரு பாரிய பிரச்சினையாகிவிட்டது.

அவுஸ்திரேலியா பாராளுமன்றத்தில் இந்த அகதிகள் விவகாரம் வாதப் பிரதி வாதமாகியுள்ளது. அத்துமீறி வரும படகு களை தடுத்து நிறுத்தும் அவுஸ்திரேலிய கடற்படை, அதில் வருபவர்களை கிறிஸ் மஸ் தீவுக்கு கொண்டு சென்று, அங்கு ள்ள தடுப்பு முகாமில் வைக்கிறது. அவர் கள் இந்த நாட்டுக்குள் பிரவேசித்து அகதி அந்தஸ்து கோருகிறார்கள். ஏராளமான இலங்கைத் தமிழர்கள் வருவதனால் குடி வரவு இலாகா தமிழ்- ஆங்கில மொழி பெயர்ப்பாளர்களையும் அதிகாரிகளுடன் அந்தத் தீவுக்கு அழைத்துச் செல்கிறது.

சில வருடங்களுக்கு முன்னரும் இப்ப டித் தான் ஒரு படகில் சுமார் 83 இலங் கைத் தமிழ் இளைஞர்கள் வந்து விட்டார் கள். அவர்களும் கிறிஸ்மஸ்தீவில தடுத்து வைக்கப்பட்டார்கள். நான் வசிக்கும மெல்ப னிலிருக்கும் சில மனித உரிமை அமைப்பு கள், இங்குள்ள குடி வரவு திணைக்கள வாயிலில் ஒரு அமைதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள். அந்த இளைஞர்களுக்கு இந்த நாட்டிற்குள் வருவதற்கு அரசு அனுமதிக்கவேண்டும் என்பதுதான் அந்த ஆர்ப்பாட்டத்தில் முன்வைக்கப்பட்ட கோரிக்கை. அதில் நானும் பல சிங்கள தமிழ் அன்பர்களும் கலந்து கொண்டோம். தடுத்து வைக்கப்பட்ட அந்த இளைஞர்க ளுக்காக தமிழ்த் திரைப்பட சி.டி.க்களும் தமிழ் பத்திரிகை, இதழ்கள், புத்தகங்க ளும் ஒரு மொழி பெயர்ப்பாளர் ஊடாகக் கொடுத்து அனுப்பினேன்.

அரசுக்கு பலதரப்பிலும் விடுக்கப்பட்ட அழுத்தத்தினால் அந்த இளைஞர்களுக்கு இந்த நாட்டுக்குள் வருவதற்கும் இந்த நாட்டு வதிவிட உரிமை கிடைப்பதற்கும அனுமதி கிடைத்தது. அவர்களில் சிலரைச் சந்தி த்துமிருக்கின்றேன். நான் அங்கம் வகிக் கும் ஒரு மனித உரிமைகள் அமைப்பு சர்வதேச அகதிகள் வாரம் ஒன்றில அந்த இளைஞர்களுக்காக, ஒரு வரவேற்பு இராப் போசன விருந்தையும் இசை நிகழ்ச்சியை யும் ஒழுங்கு செய்தது. ஆனால், விரல் விட்டு எண்ணக் கூடிய இளைஞர்கள தான் வந்தார்கள். வராதவர்கள் சொன்ன கார ணம் "நாம் இப்போது அகதிகள இல்லை"

எனக்கு, 'ஆறு கடக்கும் வரைதான் அண்ணன், தம்பி கதை' தான் ஞாபகத் துக்கு வந்தது. குறிப்பிட்ட 83 தமிழ இளை ஞர்களுக்கும் இந்த நாடு, அகதி அந்த ஸ்து கொடுத்து இங்கு வாழ்வதற்கும் அனுமதித்த பின்னர், ஆட்களை படகுக ளில் கடத்தும் வியாபாரிகள் அதிகரித்து விட்டனர். வண்ணியில் இந்த ஆண்டு ஆரம் பத்தில் நடந்த உக்கிரமான மோதலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு காரணமாகிவிட்டது. வருபவர் கள் மலேஷியா வந்து அங்கிருந்து படகேறு வதாக சொல்லப்படுகிறது.

சமீபத்தில் இந்தோனேஷியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 260 பேரில் ஆண்கள் பெண்கள் குழந்தைகள தம்மை அவுஸ்திரேலியாவுக்குள் அனுமதிக்குமாறு கோரும் காட்சிகளை இங்குள்ள தொலைக் காட்சிகளில் பார்த்தபோது, நெகிழ்ந்து போனேன். அதிலும் ஒரு குழந்தை தெளி வான ஆங்கிலத்தில் பேசி கண்கலங்க வைத்துவிட்டது.

அவுஸ்திரேலிய பிரதமர் இந்த படகு மக்களால் தமது அரசுக்கு பெரிய தலை யிடி வரும் என்று முன்பே தெரிந்துதான், அதனைத்தடுப்பதற்காக அதிகாரிகளை இலங்கை அரசுடன் பேசுவதற்காக அனுப்பி வைத்தார். இலங்கை அரசு கடல கண் காணிப்புகளை மேற்கொண்டு ஆள கடத்த லில் ஈடுபடும் புள்ளிகளை பிடிப்பதாகவும் (நீர்கொழும்பு, காலி, மட்டக்களப்பு பிரதே சங்களில்) செய்திகள் வருகின்றன. ஆனால், படகுகள் வந்து கொண்டு தான் இருக் கின்றன.

ஒருவருக்கு 15 ஆயிரம் டொலர்கள் இந்த படகுப் பயணத்துக்கு தேவைப்படு வதாகவும் சொல்லப்படுகிறது. சில மாத ங்களுக்கு முன்னர், ஒரு நாள் இரவு என க்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. எனக்குத் தெரிந்த ஒரு பெண் யாழ்ப்பா ணத்திலிருந்து பேசினார், நான் அவரை இறுதியாக குப்பிளானில் தான் சந்தித்தி ருக்கிறேன். அதுவும் 25 வருடங்களுக்கு முன்னர். "அண்ணா, நான் இன்னார பேசுகி றேன். உங்கள் ஊருக்கு அருகிலா கிறிஸ் மஸ் தீவு இருக்கிறது?" என்று கேட்டார்.

"இல்லையே அது வேறு ஒரு நாடு. தீவு." என்றேன்.

"எனது மகனும் அங்கே வந்து விட் டான். உங்களால் பார்க்க முடியுமா?"

"இல்லையம்மா. நாம் அங்கே செல்ல முடியாது. படகுகளில் வருபவர்களை தடுத்து வைத்து விசாரிக்கும் ஒரு தீவு தான் அது. உங்கள் மகனின் பெயரைத் தாருங்கள். அப்படி ஒருவர் அங்கு வந்து சேர்ந்திருக்கிறாரா என்று இங்கிருந்து செல்லும் மொழி பெயர்ப்பாளர்கள ஊடா கக் கேட்டு விசாரிக்கின்றேன்." என்று சொல்லிவிட்டு "அது சரி எனது தொலை பேசி இலக்கத்தை எங்கிருந்து பெற்றீர் கள்?" எனக் கேட்டேன்.

"உங்கட இலக்கத்தையா எடுக்க முடி யாது?"- எனச் சாதாரணமாகச் சொல்லி விட்டு, தொலைபேசியை வைத்து விட் டார். அவர் குறிப்பிட்ட பெயரில் ஒரு இளை ஞர் அங்கே இருப்பதாக பின்னர் தொடர் புகள் மூலம் அறிந்தேன்.

இவ்வளவு பணம் கொடுத்து ஏன மக் கள் படகுகளில் உயிரைப் பணயம வைத்து புறப்படுகிறார்கள்? கொலம்பஸ்ஸும் வாஸ்கொட காமாவும் இபுண் பட்டூடாவும் கப்டன் குக்கும் இப்படித்தான் ஒரு காலத் தில் உயிரைப்பணயம் வைத்து வந்து நாடுகளை கண்டு பிடித்திருப்பார்கள்.

நாம் வசிக்கும் விக்ரோரியா மாநில த்தில் 220 ஆண்டுகளுக்கு முன்னர் தங்கம் அகழ்ந்த ஒரு பிரதேசம் இருக்கி றது. பலரட் என்ற பெயரில் இருக்கும் அந்த ஊரிலிருந்த தங்கச்சுரங்கம் **(சவரின் ஹில்)** அமைந்த இடத்தை உல்லாசப் பிரயாணத்துக்குரியதாக்கி விட்டார்கள். 1887 ஆம் ஆண்டு காலத்

தில் அந்த இடம் எப்படி இருந்ததோ அப்படியே வைத்து பராமரிக்கிறார்கள். நடை உடை பாவனை குதிரை வண்டி என்பன அங்கு செல்பவர்களை 18 ஆம் நூற்றாண்டுக்கு அழைத்துச்செல்கிறது.

அங்கு ஒரு நாள் சென்றபோது அங்கிருந்தவர்கள், "எந்தப்படகில் வந்தீர்கள்?" என்று வேடிக்கையாக கேட்டார்கள். இந்த ஆண்டு நாம் நடத்திய எழுத்தாளர் விழாவுக்கு வருகை தந்த நண்பர் தெளிவத்தை ஜோசப்பும் அந்த இடத்தைச சென்று பார்வையிட்டார்.

18 ஆம் நூற்றாண்டில் இந்த கடல் சூழ்ந்த கண்டத்துக்கு அந்நிய நாடுகளிலிருந்து மக்கள் படகுகளில்தான் வந்தார்கள். 21 ஆம் நூற்றாண்டிலும் வந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் காரணங்கள் தான் வேறு! வேறு!

இலங்கைத் தமிழர் விவகாரம் இந்திய அரசியலில் பேசு பொருளாகியது போன்று, அவுஸ்திரேலியாவிலும் இந்த படகு மக்களினால் பேசு பொருளாகிவிட்டது. ஆயுதக் கடத்தல், போதை வஸ்து கடத்தல், கள்ளக்கடத்தல் என்றெல்லாம் கடந்த காலங்களில் அறிந்தோம். இப்பொழுது மனிதக் கடத்தல பற்றி ஊடகங்கள் பதிவுசெய்கின்றன.

கடலின் அக்கரை செல்பவர்களின் கனவுகள் கண்ணீரில் கலந்தவை. இந்தியாவுக்கு கடல் மார்க்கமாகச் சென்ற பலர் ஜலசமாதியான கண்ணீர்க் கதைகளும் உண்டு. மக்களுக்காகத்தான அரசுகள். அரசுகள்தான் மக்களுக்கு சுபிட்சமான வாழ்வை வழங்க வேண்டும். வழங்காத பட்சத்தில் கடலின் அக்கரை நோக்கிய பயணங்கள் உயிரைப் பணயம் வைத்தும் படகுகளில் தொடரத தான் செய்யும்.

## பாதுளிகள்......

**-சீனா. உதயகுமார்**

1. பூக்களைப் பறிக்கும்
அழகான பூக்கள்
அவள் விரல்கள்!

...0...0...0...

2. திருமண சந்தையில்
பகல் கொள்ளைக்காரன்-
'வரதட்சணை' மாப்பிள்ளை!

...0...0...0...

3. கன்னங்கள் தொடும்
ஒலிம்பிக் வளையங்கள்
அவள் சுருள் முடிகள்!

...0...0...0...

4. நாளைய சாதனைக்கான
இன்றைய முதலீடு
உன் அவமானங்கள்!

...0...0...0...

5. இதயங்களை இணைக்கும்
கூட்டல் குறி
சிலுவை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழி

**-தாட்சாயணி**

அவன் வயிற்றுப் பிழைப்புக்காகத்தான் மரம் வெட்டத் தொடங்கினான். மரம் வெட்டிக் கொண்டுதான் வாழ்க்கைப் பயணத்தை ஓட்ட வேண்டிய நிலை. ஆனால், அவனுக்கு எந்த தேவதையும் காட்சி கொடுக்கவில்லை. எந்தத் தேவதையும் தங்கக் கோடரி கொடுத்து அவனது வாழ்வைக் கடாட்சிக்கவும் இல்லை. இவனுக்கு ஒவ்வொரு மரத்தை வெட்டுகின்ற போதும், இதயத்தைக் கொத்துகிற மாதிரி இருக்கும். மரத்தை வெட்டுகின்ற போது, எழுகின்ற பச்சை மரவாசம், அவனது நாசியைத் துன்புறுத்துவதாகவே அமையும். அந்தத் தொழிலை விட்டு விட வேண்டும் என்று பல நாளாய் நினைத்திருந்த போதிலும், அதற்கேற்ற காலம் வரவில்லை.

ஒற்றை ஒற்றையாய் அவன் வெட்டும் மரங்கள், கொத்துக் கொத்தாய் மாறிச் சரிவதாய் இவன் கண்களில் பிரமை தோன்றியிருக்கிறது. ஒவ்வொரு மரமும் ஒவ்வொரு கோபுரமாய் மண்ணில் ஊன்றியிருந்தன. அத்தனையையும் வெட்டிச் சரிக்கின்ற போது, மனதில் தோன்றும் பரிவு, மண்ணின் வேர்களைத் தேடுகிறது. வேர்கள் அறுபடும் உணர்வு உள்ளூர வேதனை தருகிறது.

உறவுகள் அறுவதன் வேதனை புரிந்த அவனுக்கு, இன்றுதான் ஒன்றொன்றாய் மரங்களின் வேதனை புரிகிறது. எந்த ஒரு உயிரும் மண்ணில் நிலைத்திருக்கத் தன் இலைக் கரங்களை நீட்டி, நிழல் துளாவி, வாழ வைக்கும் மரங்களைத் தன் கொடுங் கரத்தால் அறுத்தவன் அவன். மரங்களின் கோபம் மழையை ஓட ஓட விரட்டுகிறது. மேகங்கள் தள்ளித் தள்ளிக் கலைந்து போகின்றன. உயிர்ப்பிழந்த காலங்களில் புற்கள் கருகிப் போய் விடுகின்றன. மரங்களில் தவமியற்றும், குருவிகள் வாழ்விடமின்றி, மனிதனைச் சபித்துப் பறக்கின்றன. குருவிகளின் குதூகலத்தைப் பறித்தவனாய் அவன் இனங்காணப்படுகின்றான். குருவிகள் அவனைக் கொத்திப் பறக்கின்றன.

அவன் சிறுவயதில் கண்டது போலான பெரு மரங்களை இப்போதெல்லாம் காணக் கிடைப்பதில்லை. அவனுக்கு ஆறேழு வயதிருந்த போது, ஊர் எல்லையில் பெரியதொரு ஆலமரம் பரந்து விரிந்திருந்தது. மாலை வேளைகளில் கிளிகளும், குருவிகளும் அந்த மரத்திலமர்ந்து கீச்சிடும் சத்தம் கேட்டுக் கொண்டேயிருக்கும். ஒரு இன்னிசைக் கதம்ப நிகழ்ச்சி போல, அந்த ஓசைகள் மனதுக்கு ரம்யமாயிருக்கும். அந்த மரத்தை யாரும் வெட்டவில்லை. அந்த மரத்தடியில் வயோதிபர்கள் இளைப்பாறிக் கதை தொடர்வதை அவன் சிறுவயதுகளில் அவதானித்திருந்தான். எத்தனை ஆண்டுப் பழைய மரமோ தெரியாது. ஆனால், அது மட்டும் நிமிர்ந்து கம்பீரமாகப் பல உயிர்களுக்குப் பழம் தந்து அவற்றை வாழ்வித்துக் கொண்டிருந்தது.

அந்த மரம் ஒரு மழைக் காலத்துப் புயலில் பாறி விழுந்தது. பெரிய அரக்கன் ஒருவன் மல்லாந்து கிடந்தது போல, அதன் தோற்றம் அமைந்திருந்தது. ஒரு விதத்தில் பார்த்தால்

கொஞ்சம் சோகமாகக் கூட இருந்தது. ஒரு துயர காவியம், போல அலமலந்து கிடந்த அந்த மரத்தின் பேரில் இரக்கம் ஏற்பட்டுச் சில வாண்டுகள் கூட்டம் வேடிக்கை பார்த்த போது, இவனும் அந்தக் கூட்டத்தில் இருந்தான். வயோதிபர்கள் சிலர் அந்த மரத்தின் வீழ்ச்சியில் மனம் வெம்பிப் போயினர். அவ்வளவு நாளும் அந்த மரத்தின் கிளைக ளைச் சொந்தம் கொண்டாடிய குருவிகள், பறவைகள் அதன் பின் எங்கே போயிற்றென்று தெரியவில்லை. என்றுமில்லாதவாறு அமானுஷ்ய அமைதி அந்த வெளியை நிறைத்தது.

அடுத்து, வந்த வெயிற் காலங்கள் கொடுமையானவையாய் இருந்தன. ஒரு மரத்தின் இருப்பு எவ்வாறு ஒரு சூழலைக் குளிர்ச்சியாக்குகின்றது என்பது அந்த மரத்தின் இழப்போடு புரிந்தது. வெக்கை அகோரம் தாங்காமலோ அல்லது அந்த மரத்தின் ஞாபகத்திலோ அந்த மரத்தினடியில் இளைப்பாறிய பெரியவர்களில் ஒருவர், அங்கே இன்னொரு மரத்தை நாட்டி வைத்தார். தினமும் தண்ணீர் ஊற்றி அவர் பாதுகாக்கும் அந்த மரக்கன்றுக்கும் சோதனைகள் வரத்தான் செய்தன. கட்டாக்காலி மாடுகள் அதனைக் கடித்துக் காயப்படுத்தின. திடீரென்று கிரிக்கெட் பந்தடிக்கப் பழகிய சிறிசுகளின் விளையாட்டில் அந்த மரக்கன்றுக்கும் காயங்கள் ஏற்படத் தொடங்கின. இவ்வாறாக அந்த முதியவரின் முயற்சிகளும் பலிக்காமல் போய், வைக்கப்படும் மரக்கன்றுகள் பட்டுப் போய், கடைசியாய் அந்த முதியவர் சுற்றி வர பனை மட்டைகள் வரிந்து ஒரு கன்றை நாட்டி வைத்தார். அது வளர்ந்து செழித்ததைக் கண்கொண்டு பார்க்கமாட்டாமல் அவர் காலமும் முடிந்து போய் விட்டது. பிறகு, அவர் ஞாபகமும் சேர்ந்து, இரண்டொரு முதியவர்கள் அந்த மரக்கன்றைப் பாதுகாத்து இப்போது அது சிறியதொரு மரமாய் அந்த இடத்தில் வேர் ஊன்றி நிற்கிறது. முன்பிருந்த மரத்தோடு ஒப்பிடும் போது, அது விடலை தான். என்றாலும், எதிர்காலம் அதன் கரத்தில் இருப்பதென்னவோ உண்மை தானே!

மரங்களைத் தூரத்திலிருந்து பார்க்கும் போது, ஒவ்வொன்றும் ஒவ்வொரு வடிவத்தில் இருப்பதாய்ப்படும். அதிசயமாய் ஒரு மரத்தில் இருந்த காட்சி இவன் மனதில் அழியாத படிவு கொண்டிருந்தது. மரம் ஓரிடத்தில் தலைபோல் வட்டத் திணிவு எழும்பியிருக்க, இன்னோர் கிளை பின்புறம் வளைந்து, முன்புறக் கிளையைத் தொட்டிருக்க, கையை உயர்த்தி, உடலை வளைத்து பின்புறமாய் உயர்த்திய காலைத் தொட்டு நடனமிடும் சாட்சாத் பரமசிவனின் நாட்டிய வடிவமாகவே தோன்றியது. அதை வெட்டுவதற்கு அவன் மனது மிகவும் முரண்டு பிடித்தது. ஆனால், அந்த மரத்தை அவன் வெட்டாவிட்டால், இன்னொருவன் வெட்டி விடுவான் என்பது அவனுக்குத் தோன்றியேயிருந்தது. அதைவிட வீட்டிலே பசியோடு கிடக்கும் பச்சைக் குழந்தையின் நினைப்பு வேறு அந்தக் கலை உணர்வைத் தூக்கி எறிந்தது.

"ஏனம்மா மரத்தை வெட்டுறியள்.....?" வீட்டுக்காரப் பெண்மணியிடம் கேட்டான்.

"காணிக்கை வீடு கட்டப் போறம். நெடுக இரவல் வீட்டை இருக்கேலுமே......?" அவள் தனது புராணத்தை ஒப்புவித்தாள்.

"மரத்தை விட்டிட்டு, அங்காலை வீட்டைக் கட்டலாம் தானை.....?"

"வீடு கட்டுறதுக்குக் காசு காணாமக் கிடக்கு. உதை வித்துத் தான் சரிக் கட்டோணும்..." பெரு மூச்சோடு அவள் சொன்னாள்.



அந்த வேம்பிலிருந்து அவர்கள் எவ்வளவு பயன் பெற்றிருக்கக் கூடும்! நச்சுக் காற்றை அகற்றி வேப்பம் பூ வாசம் பரப்பி அந்தச் சூழலைக் குளிர்வித்த மரம் எவ்வளவு அழகாய் இருந்திருக்கும். அருகில் வீடு கட்டப்பட்டாலும் கூட அந்த வீட்டைக் கெட்ட காற்று அணுகாமல் பார்த்திருக்கும். அவர்கள் வாழ்வுக்கு மட்டுமன்றி, நாவுக்குச் சுவையூட்டும் வடகத்தைக் கூட, அந்த வேப்பம் பூக்கள் வாரி வழங்கியிருக்கும்.

அவன் தெருவோரங்களில், கோவில் முற்றங்களில், தோள் தொடும் உயரத்தில் கிளைகளையும், பூக்களையும் பரப்பியபடி நிற்கும் வேம்புகளைப் பார்த்திருக்கின்றான். இலைகளின் காம்புகளோடு பிணைந்தபடி கிடக்கின்ற பூக்களின் காம்புகள். சித்திரை, வைகாசியில் வேம்புகளைப் பார்த்தால், வெண்மையாகவே காணப்படும். பச்சையை மூழ்கடித்துப் பளிச்சிடும் அந்த வெள்ளைப் பூக்கள். சில வேளைகளில் அவன் அந்தப் பூக்களைத் தெரிந்தெடுத்து மனைவியிடம் கொண்டு போய்க் கொடுத்திருக்கிறான். அவளது முகத்தில் அந்தப் பூக்களைப் பார்த்தவுடன் ஏற்படும் பளபளப்பு, இன்னும் அவன் கண்முன் தெரிகிறது.

கைகளை இருபுறமும் அகல நீட்டி வாய் பிளந்து நிற்கும் அரக்கன் போலவும், சில கிளைகள் தோற்றம் கொண்டிருக்கின்றன. சின்ன வயதில் பாடப்புத்தகத்தில் பார்த்த, தலை மேல் கை கூப்பித் தவமிருக்கும் அர்ச்சுனனின் தோரணை போலவும் ஒரு மரம் இவனுக்குத் தோன்றியிருந்தது. இவ்வாறு பல்வேறு வடிவங்களில் மரங்கள் தோற்றம் கொள்கின்றன.

ஒவ்வொரு மரங்களை வெட்டியவுடனும் ஏற்படும் அசதி, ஆரம்ப காலங்களில் கண் மயக்கம் தந்து தூக்கத்திற்கு இட்டுச் சென்றுவிடும். அதுவே அவனது தொழிலென, வெட்டப்படும் மரங்களுக்குக் கூலி கிடைத்துவிடும் சந்தோஷம் அன்றைய சாப்பாட்டுக்கு வழி கோலுவதாய், அவனது மனைவி வைக்கின்ற சோற்றுக்கும், குழம்புக்குமான பிரயத்தனமாய் முடிந்துவிடும்.

ஆரம்பத்திலிருந்த காசுப் பஞ்சம் கொஞ்சம், கொஞ்சமாய்க் குறைந்து அவனும் வீடுகட்டி, மற்றவர்க போல் கையில் காசு புழங்கத் தொடங்கியது. ஆனாலும் அவன் மரம் வெட்டுவதை நிறுத்தி விடவில்லை. அவனுக்குத் தெரிந்த ஒரே தொழில் அது தான்.

காதலித்துக் கட்டிய மனைவி. முத்துப் போல மூன்று பிள்ளைகள். போதுமான வருமானம். சந்தோஷக் காற்றில் ஊஞ்சலாடிய காலம். அவளை இவன் கைப்பிடித்துக் கொண்டவுடன் அவனைப் பகைத்துக் கொண்ட குடும்பம், மண் வாரிக் கொட்டி இவனைத் தூற்றிய தாய், உழைப்பேதுமில்லாத தமையன், அவன் மரம் வெட்டுவதையே ஆதாரமாகக் கொண்டிருந்தான். தமையன் குடும்பமும் அவனைத் தான் ஆதாரக் கோடாய்ப் பற்றியிருந்தது. பக்கத்தில் வசித்த அக்காவின் குடும்பம். வீட்டை விட்டுக் காட்டுக்கு ஓடிப் போன தம்பி...... இவனை அந்தக் குடும்பத்தில் யாரும் அவளுக்கு விட்டுத்தர விரும்பவில்லை.

கல்யாணம் பண்ணிக் கொஞ்சக் காலத்தில் 'குடும்பக் காட்' எடுக்கக் கூட முடியவில்லை. முதல் பிள்ளை பிறக்கும் வரை இவர்களுக்குப் பங்கீட்டு அட்டை கிடைக்கவில்லை. தாய் தன் பங்கீட்டு அட்டையிலிருந்து அவனது பெயரைப் பிரித்தெடுக்க அனுமதிக்கவில்லை. "சீதனக் காசை அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரட்டுக்கும்.... அதுக்குப் பிற தான் பேர் வெட்டித் தருவன்..."

அவள் வயிற்றுப் பிள்ளையோடு அலைந்தாள். விதானையார் அவர்களுக்கிடையே சமரசம் செய்து வைக்க முனைந்தார். இரண்டு, மூன்று மாதம் அலைந்த பிறகு அவன் மரம் வெட்டிக் கிடைத்த கூலியைச் சேர்த்து பத்தாயிரம் ரூபாவைக் கொண்டு போய் அவளிடம் கொடுத்த பிறகுதான், பங்கீட்டு அட்டையைக் கொடுத்துப் பெயர் வெட்டச் சம்மதித்தாள். அதன் பிறகு அவர்களுக்கு எந்தச் சோலியும் இருக்கவில்லை. அவனும் மனைவியும், குழந்தைகளுமென அவனது குடும்பம் பெருகிற்று. செல்வமும் வளர்ந்தது.

ஏதிலியாய்க் கிடந்த அவனது தாயின் குடும்பம் அவனைப் பிறகு ஒட்டத் தொடங்கிற்று.

"எனக்கும் ஒருதரும் இல்லை. உங்கட ஆக்களோடையும் ஒட்டாமல் போனா, பிள்ளையளுக்குப் பாசம், நேசம் தெரியாமல் போகும்"

அவள் அவனது குடும்பம் ஒப்புரவாயிருப்பதையே விரும்பினாள். யுத்தத்தின் அகோரத் தாண்டவத்தில் மரங்கள் அழிக்கப்பட்டது போல, அவளது குடும்பமும் ஒரேயடியாய்ச் சிதைந்திருந்தது. மிஞ்சியிருந்தவள் அவள் ஒருத்தி தான். கிளைகள் வெட்டப்பட்ட தனிக் கட்டையாய்க் கிடந்த அவளைத் துளிர்க்க வைத்தவனே அவன் தான்.

சிறிசுகள் அந்த வீட்டோடு, பாசம் பற்று வைக்கத் தொடங்கின. மாலைப் பொழுது அந்த வீடே தஞ்சமாகின. இவன் ஆரம்பத்தில் வீட்டுக்கும் தாய்க்குமெனக் கொஞ்சம் பணம் கொடுத்துக் கொண்டு தான் வந்தான்.

மரங்கள் வெட்ட வெட்ட அவனுக்குப் பணம் கிடைத்தது. வியர்வைத் துளிர்க்கத் துளிர்க்க, மரங்களின் உயிரை அவன் உறிஞ்சினான். துண்டுகள் ஒவ்வொன்றும் இன்னும் அதிக விலை பெற்றுப் போவதை அவன் கண்டிருக்கிறான். ஆனால், அவற்றின் விலையால் இன்னும் மரங்கள் துண்டுகளாகிப் புதுவடிவம் பெற்றுப் பெறுமதி அதிகரிப்பதைக் கண்டிருக்கிறான். அவ்வாறு பெறுமதி அதிகரிப்புப் பெறுவதை விட அவை மரங்களாயிருப்பதில் தான் இயற்கையின் பெறுமதி கூட என்பதை யாரும் உணர்வதாய்த் தெரியவில்லை. ஆரம்பத்தில் காட்டுக்குப் போய்க் காய்ந்த மரங்கள், சுள்ளிகளை வெட்டி விறகாக்கி விற்ற அவன் பின்னாளில், மரக்காலைச் சொந்தக்காரனான ரகுவிடம் வேலைக்குச் சேர்ந்தான். அதன் பிறகு தான் மரம் மரமாய் வெட்டிச் சாய்க்கத் தொடங்கினான். மரங்கள் வெட்டப்படுதல் தடுக்கப் பெற்றிருப்பினும் கூட, எவ்வழியிலேனும் ரகு மரம் வெட்டுவதற்குரிய அனுமதியைப் பெற்று வந்துவிடுவான். காட்டிலே பட்டுப் போன விறகுக்குதவும் மரங்களை வெட்டி வந்தவரைக்கும் அவனது வாழ்வில் எந்த ஏற்றத் தாழ்வுமின்றி ஏனோதானோவென்று கழிந்த வாழ்வு, இவன் ஊருக்குள் மரம் வெட்டத் தொடங்கிய பிறகு, கொஞ்சம் உச்சத்துக்குப் போயிற்று. அவன் நெஞ்சிலிருந்த கொஞ்ச ஈரமும் வரண்டு போகக் கோடரியை அவன் கையில் எடுப்பான். அவனைப் பொறுத்த வரை அவன் நல்லதொரு மரம் வெட்டியாகப் பெயர் எடுத்திருந்தான். எந்த மரம் எத்தகையது என்பது அவனுக்குத் துல்லியமாகத் தெரிந்திருந்தது. பாறையாய் இறுக்கிக் கடினத் தன்மை பெற்றிருந்த மரங்களும், வெட்ட இலேசாகியிருக்கும் மரங்களும் இவன் கண்ணுக்குப் பார்த்தவுடனேயே தெரிந்துவிடும். எந்த மரம் பலகைக்கு உதவும், எந்த மரம் கதவுகளுக்கு உதவும்



என்பதெல்லாம் அவனுக்கு அத்துபடியாகியிருந்தன. ஆனால், அவனால் ஒவ்வொரு மரத்தின் வீழ்ச்சிக்குப் பின்னருமான ஊரின் காலநிலை மாற்றங்களை ஊகித்துணர முடிந்தது. வெயில் வெக்கை அகோரமாக அடிப்பதையும், மாரிகாலம் தப்பி வருவதையும் அவனால் அறிய முடிந்தது. மரங்கள் தறிக்கப்படும் பகுதிகளின் அருகில் புற்கள் கருகி மேய்ச்சலிடும் மாடுகள் கதறித் திரிவதையும் கண்டிருக்கிறான். எனினும், அவனது பிழைப்பு அது. அவன் மரங்களை வெட்டிக் கொண்டுதானிருந்தான்.

இரவுகளில் நிம்மதியாக உறங்க முடியாத காலங்களும் வந்தன. பிள்ளைகள் ஒருவல், ஒருவராய் நோய்க்குள் விழுந்தார்கள். 'அம்பாள்' வருத்தம் வந்து ஒரு கோடை காலத்தில் அடுத்தடுத்து அந்தப் பிஞ்சுகளைப் பறிகொடுக்க நேர்ந்தது. அவள் வயிற்றிலடித்து அழுதாள். குழறிக் குழறி அவள் நெஞ்சுத் தண்ணீர் வற்றிப் போனது

தாய்க்காரி மருமகளைக் குரோதம் பொங்கப் பார்த்தாள்.

"உதுக்குத் தானோ என்ரை மோனைக் கட்டினனி.....?" எனச் சினந்தாள்.

"தாயிண்டை வயித்தெரிச்சல் பிள்ளையளைத் திண்டுட்டுது.....!" ஊர் சொன்னது.

கொஞ்ச நாளில் அவளுக்கும் வயிற்று வலி வந்தது. உருண்டு, புரண்டு கதறினாள். எந்த மருந்துக்கும் தீரவில்லை. அவள் ஆஸ்பத்திரியை நாடுவதை விடுத்து கோவில்கள், சாத்திரிகள் என அலைந்தாள்.

"அந்த மனிசிதான் தேத்தண்ணீக்கை ஏதோ போட்டுத் தந்திட்டுது. கோவில்லை அம்மன் அப்பிடித்தான் சொன்னது......"

அவனிடம் புலம்பினாள். அவன் திகைத்து ஒடுங்கினான்.

"என்ரை பிள்ளையளைப் பேத்தியார் தானையெண்டு நம்பி அனுப்பினனே. அதுக்கு அவள் பாவி செய்தது காணும்.....!" பழி தீர்க்க முடியாத மூர்க்கத்தில் கத்தினாள்.

"அம்மாவிலை அப்பிடிப் பழி போடாதை" திகைப்பிலிருந்து மீண்டு அவனும் கத்தினான். பிள்ளைகளை இழந்த துக்கம் வேறு. ஆறுதலுக்கு யாருமில்லை.

"உங்களுக்குத் தாய். அதாலை விட்டுத் தராதையுங்கோ. அவள் செய்தாளோ...... இல்லையோ.....? அந்த வீட்டிலை தான் என்னவோ செய்ததுகள்..... உங்கட சகோதரம் என்ன திறமோ.....?"

அவனால் எதையும் யோசிக்க முடியவில்லை. நின்றால் இன்னும் கத்தி விடுவான் போல் தோன்ற, கோடரியோடு வெளிக்கிட்டு விட்டான். கோபமும், வேதனையும் சேர கோடரி மரங்களை ஓங்கி அறைந்தது. அவள் வயிற்று வலியால் புழுவாய்த் துடித்தாள். அவன் வீட்டுக்கு வந்தபோது, வயிற்றில் திருநீறு பூசிப் படுத்திருந்தாள்.

"ரெண்டு கிழமைமைலை எடுத்து விடுறனெண்டு அம்மன் சொன்னது" என்றாள்.

அவனால் தூங்க முடியவில்லை. தூக்கத்தில் கனவுகள் மொய்த்தன. கோடரியால் மரத்தை வெட்டக் குருதி வழிந்தது. கோடரி இரத்தக் கறையோடு கிடந்தது. வெறும் வெளியெங்கும் பாலை மணல். மரங்களின் சுவடுகளே இல்லை! புழுதி பறந்த இடத்தில் எலும்பு தெரிய நடந்து கொண்டிருக்கிறான் அவள்.

சட்டென்று மாறிக் குழம்பும் கனவுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரை. புயற் காற்றில் அடர்ந்து நிற்கும் மரங்கள், தாறுமாறாய்க் கிளை விரித்து ஆடுகின்றன. சில கிளைகள் முறிந்து சாய் கின்றன. முறியும் கிளைகள் கால், கை முளைத்து ஒவ்வோர் உருவங்களாய் ஆட் டம் போடுகின்றன. ஒவ்வோர் மரங்களின் அடி மரங்களிலும் பொதிந்து கிடக்கும் இவன் குழந்தைகளின் முகங்கள். கோடரியை ஓங்க முடியாமல் அதில் தெரியும் அந்தப் பிஞ்சு முகங்கள்.

திடுக்கிட்டுச் சிலிர்த்தெழும்புகின்றான். நெடுநாளாய் இழந்துவிட்ட தூக்கம் நெருங்கி வருவதாயில்லை. மனைவி தூக்கமின்றிப் புலம்பிக் கொண்டிருக்கிறாள்.

"பாவம் எண்டு பிள்ளையளை அண்ட விட்ட எனக்கு உவள் உப்பிடிச் செய்து போட் டாள்! உவள் நல்லாயிருக்கமாட்டாள்....!"

அவளது புலம்பல் தீராது. இவனுக்கும் இனி மன அமைதி கிட்டாது. அமைதியாய்ப் போன ஆறு வருஷ வாழ்க்கை இனிக் கிட் டாது. அவளுக்கும் இனி வாழ்நாள் பூராவும் மனதை அலைக் கழிக்கப் போகிற மன அவசம்.....

எந்தப் பழி அவனது குடும்பத்தை அழித் துப் போட்டது.....?

மரங்களின் சாபம் அவன் வாழ்வையே அழித்ததா.....?

தன் மடியை நிறைக்க, மரங்களை அழி த்த அவனை இயற்கை பழி வாங்கியதா.....?

இனி, ஜென்மத்தில் நிம்மதி கிடைக்காது போலிருந்தது. தாய் வீட்டுக்கும் போகப் பிடிக்கவில்லை.

மனைவியினது புலம்பலும் அவனை நரகத்துள் தள்ளிக் கொண்டிருந்தது.

தவறவிட்ட குழந்தைகளின் உயிர்ச் சிரிப்பை இனி எங்கு போயும் தேடிப் பொறுக்க முடியாது. இனியென்ன வாழ்க்கை....? எல்லாமே முடிந்து போன பிறகு......?

அவன் கையை விசுக்கியவாறே மரங்க ளற்ற தெருவில் நடந்தான். மரக்காலையைக் கடந்த போது, ரகு கை தட்டிக் கூப்பிட்டது கேட்டது. விருப்பமின்றித் திரும்பினான்.

வெட்டப்பட்ட மரங்கள் வெவ்வேறு அள வுப் பிரமாணங்களில் அடுக்கப்பட்டுக் கிடந் தன. ஆங்காங்கே மரச் சீவல்கள் சிதறுண்டு கிடந்தன. விந்தையான வகையில் பச்சை மரவாசம் ஒரு கதம்பமாக எழுந்தது.

"சோலையடியிலை, ரெண்டு வேம்பு தறிக்கோணும். நாளைக்கு வந்திடப்பு....."

ரகுவின் குரல் எங்கிருந்தோ கேட்பது போல் தோன்றுகிறது.

"கொஞ்சம் உடம்புக்கேலாமல் கிடக்கு, வேறை ஆரையும் கொண்டு தறியுங்கோ அண்ணா....." சொல்லிக் கொண்டே நடக்கிறான்,- வயிற்றுப்பாட்டுக்கு ஏதாவது பார்க்க வேண்டுமே.

சட்டென்று ஏதோ தோன்ற திரும்பிப் பார்த்தான். அடுக்கப்பட்ட மரத்துண்டங்கள் கண்ணிற்பட்டன.

கூலிக்கு மரம் வெட்டிய எனக்கே இந்தக் கதியென்றால்..... மரங்களை விலை பேசித் துண்டங்களாக்கி வியாபாரம் செய்யும் ரகுவுக்கு...... இன்னும் என்னென்ன துன்பங் கள் காத்துக் கிடக்கின்றனவோ......?

வேதனையான ஒரு சிரிப்பு அவனது உதட்டில் தோன்றி மறைந்தது.





# தத்து

—வேல் அமுதன்

கனடாவால் வந்த கனகரத்தினத்திற்கு வீட்டில் பெரிய வரவேற்பு. தந்தை கந்தையா மகன் கனடாவுக்குத் திரும்பிப் பயணிக்க முன், காற்கட்டுப் போட்டுவிட வேண்டும் எனத் தீர்மானிக்கின்றார்.

கொழும்பிலுள்ள நெருங்கிய நண்பர்களிடமும்- கலியாணத் தரகர்மாரிடமும்- திருமண நிலையங்களுக்கும் சென்ற கந்தையா, கனகரத்தினத்தின் ஜாதகத் தோடு பொருந்தக் கூடிய ஜாதகரின் புகைப்படங்களையும் பார்த்து கல்பனா என்ற ஒரே ஒரு பெண்ணைத் தெரிவு செய்தார்.

கனடா மாப்பிள்ளை என்பதால், கல்பனாவின் வீட்டார் அந்த புரப்போசலுக்கு முழுமனச் சம்மதமும் தெரிவித்தனர்.

சிக்னல் சாதகமாக விழுந்ததை அறிந்த கனகரத்தினம், சந்தர்ப்பத்தை நழுவ விடக்கூடாது என எண்ணி, பெண்ணுடன் பேசிப் பழகிப் பார்க்க வேண்டும் என்ற நிபந்தனையோடு, அடிக்கடி- சில நாட்களில் இரண்டு மூன்று முறையும் கல்பனா வீட்டுக்குப் போய் வருகிறார்; நெருங்கிப் பழகவும் முற்படுகிறார்.

வேறு குமர்ப்பிள்ளைகளும் உள்ள வீட்டிற்குக் கட்டுப்பாடில்லாமல் கனகரத்தி னம் வந்து போவதை அடியோடு விரும்பாத கல்பனாவின் தந்தை கந்தவனம், உடனடிப் பதிவுத் திருமணத்திற்கு மாப்பிள்ளை வீட்டாரின் சம்மதத்தோடு ஏற்பாடு செய்கிறார்.

சபையர் ஹோட்டில் கலியாண எழுத்து.

Registrar வந்துவிட்டார். அந்த நேரம் பார்த்து மாப்பிள்ளை மாயமாக மறைந்து விட்டார்! ஹோட்டல் வளாகம் முழுவதும் தேடியும் அவர் யார் கண்ணிலும் படவே யில்லை.

உண்மை என்னவென்றால், கனடாவில் கனடாப் பெண்ணொருத்தியை மண முடித்து- இரகசியமாகச் சேர்ந்து வாழ்ந்து வரும் கனகரத்தினம், Polygamy சட்டத் திற்குப் பயந்து, ஆரின் கண்ணிலும் படாமல் மீளக் கனடாவுக்குப் பயணிக்கக் கிளம்பிவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழதங்கள்

மெச்சத் தக்க மகிழ்ச்சியான செய்தி என்னவென்றால், இன்னமும் ஐந்து ஆண்டுகளுக்குப் பின் மல்லிகையின் தொடர் வரவின் 50-வது ஆண்டை எட்டிப் பிடிப்பதுதான்.

ஐரோப்பிய- அமெரிக்க நாடுகளைப் பற்றி அப்படியொன்றும் எனக்குச் சொல்லத் தெரியவில்லை. தமிழில்- சிற்றேடொன்று அரை நூற்றாண்டுக் காலத்தைத் தொட்டு நிரப்புவது மிகப் பெரிய சாதனைதான்!

அதிலும், முக்கியமான அடிப்படைச் செய்தி ஒன்று உண்டு. ஒரே ஆசியரியரின் ஆசிரியத் தன்மையை உள்ளடக்கி, ஒரு சிற்றிதழ் அரை நூற்றாண்டுக் காலத்தை உள்ளடக்கி வெளி வருவது மிகப் பெரிய இலக்கிய சாதனைதான்!

என்ன ஆச்சரியமாக இருக்கிறதா?

பயப்படாதீர்கள். இன்னமும் இடையேயுள்ள ஐந்து ஆண்டுகளும் பார்த்திருக்கப் பறந்து போய்விடும். காலத்தைப் பற்றிக் கொஞ்சம் கூடக் கவலைப்பட வேண்டாம்.

இலங்கை பல்கலைக்கழக ஆய்வு மாணவிகள் இருவர் மல்லிகை இதழ்களைப் பற்றி ஏற்கனவே ஆய்வு செய்து முடித்துவிட்டனர். இனி வரப் போகும் சந்ததியினரும் நிச்சயம் மல்லிகையின் இலக்கியத் தாக்கம் பற்றிப் பரவலாகவே ஆய்வு செய்யத்தான் போகின்றனர்.

இனிமேல் தான் மல்லிகை மிக மிகப் பொறுப்புடன் கடமையாற்ற வேண்டுமென நான் மனப்பூர்வமாக ஆசிக்கின்றேன்.

தொடர்ந்து எழுதுபவர்கள் தொடர்ந்து எழுதி வருகின்றார்களே என்ற அநுதாபத்தில். திரும்பத் திரும்ப எழுதியவர்களின் எழுத்துக்களையே மல்லிகையில் தொடர்ந்து பிரசுரிக்க முற்படாதீர்கள். அது மல்லிகையின் வளர்ச்சிக்குத் தாக்கம்.

புதுப் புது எழுத்தாளர்களைத் தேடிப் பிடியுங்கள். அவர்களுடைய எழுத்துக்களுக்கு எழுத்தூக்கம் கொடுங்கள். புதிய புதிய பரம்பரையை உருவாக்கத் தெண்டியுங்கள். உங்களால் தான் அது முடியும்.

கடந்த அரை நூற்றாண்டுக் காலங்களுக்கு மேலாக இந்த நாட்டு வளரும் இலக்கியப் பரம்பரைக்குத் தக்கதான பங்களிப்புச் செய்து வந்தவர்களில் நீங்களும் ஒருவர். இதை இலக்கிய உலகமே நன்கறியும்.

எனவே, தெளிவான பார்வையுடன் எதிர்கால நோக்குடன் முன் வந்து செயற்படப் பாருங்கள்.

ஒன்றை நான் நீண்ட நாட்களாக அவதானித்து வந்துள்ளேன். உங்களது இலக்கிய நேர்மையை, அந்த அர்ப்பணிப்பு உழைப்பைக் கொச்சைப்படுத்திக் கிண்டல் பேசுகின்றவர்கள் கூட, உங்கள் மீது ஒரு வகைப் பயம் கலந்த மரியாதையையும் கொண்டுள்ளார்கள் என்பதை நான் அவர்களுடன் நேரில் சம்பாஷிக்கும் போது நேரடியாகவே அவதானித்து வைத்திருக்கின்றேன்.



ஒரு தீவிர இலக்கியவாதிக்கு, வரலாற்றை உருவாக்கும் முன்னோடிக்கு அது தான் முதற் தேவை. உங்களது இலக்கியப் பரப்பில் முக்கியமாக நான் அவதானித்ததொன்று. வெறும் எழுத்தாளனாக ஆரம்ப காலங்களில் அறியப்பட்ட நீங்கள், இன்று அரை நூற்றாண்டு காலத்தை எட்டப் போகும் ஒரு தொடர் சஞ்சிகையின் ஆசிரிய பீடத்தை அலங்கரிப்பவர்களில் ஒருவருமாவீர்கள். அத்துடன் **மல்லிகைப் பந்தல்** வெளியீட்டு நிறுவனத்தின் ஸ்தாபகருமாவீர்கள்.

இதற்காக நீங்கள் கடந்த காலங்களில் கொடுத்துள்ள விலை- உழைப்பு- நிச்சயமாக வரலாற்றில் இடம் பெறத்தான் போகின்றது.

பயப்படாதீர்கள். முன்னே போங்கள். நாங்கள் பின்னே வருகின்றோம்!

**நீர்கொழும்பு. கே. கணேசநாதன்**

மிக நீண்ட காலமாகவே மல்லிகையைப் பற்றிச் சொல்ல எனக்கு நிறய நிறையக் கருத்துகள் உண்டு. மனசுக்குள் அவற்றை அசை போட்டு அசை போட்டுக் காலத்தை இதுவரை கடத்திக் கொண்டு வந்திருக்கிறேனே தவிர, எதையுமே எழுத்தில் இது வரை பதிய வைக்க வேண்டு மென்று தோன்றவேயில்லை!

நான் கடந்த இருபதாண்டுக் காலமாக மல்லிகையின் தொடர் வாசகன். உண்மையாக இந்தக் கட்டத்தில் ஒன்றை மனந்திறந்து சொல்லுகின்றேன். மல்லிகையைப் போன்ற தனிமனித முயற்சிச் சிற்றேடுகள் தொடர்ந்து நின்று நிலைக்கும் என்பதை நான் ஆரம்ப காலத்திலிருந்து நம்பவேயில்லை! ஏனெனில் ஓரிரு வருஷங்கள் இடைக்கிடையே வந்து வந்து தலைகாட்டிச் செல்வதைத் தவிர, இத்தகைய சிற்றேடுகள் வேறொரு பெரிய சாதனைகளையும் செய்ய முடியாது என அப்பவே நான் எனது மனசில் எடைபோட்டு வைத்திருந்தேன். நின்று நிலைக்காத அத்தகைய சஞ்சிகைகள் தமது காலத்தில் இலக்கியப் பிரச்சினைகளைப் பதிவு செய்துள்ளன என்பதையும் நான் மறைக்காமல் ஒப்புக் கொள்ளத்தான் செய்கிறேன். ஆனால், மல்லிகையின் தொடர் வரவை நமது நாட்டின் முப்பதாண்டு உள்நாட்டு இனமோதல்களின் பின்னணியில் தான் நோக்க வேண்டும்.

அது தான் சரியான சரித்திரப் பார்வையாகும்.

உள்நாட்டுப் போர் வெடித்து, உச்சக் கட்டச் சூழ்நிலையில் யாழ்ப்பாண மண்ணில் வெளிவந்து கொண்டிருந்த மல்லிகை தனது வருகைத் தளத்தை மாற்றி அமைத்துக் கொண்டது. இதன் பின்னணிச் சூழ்நிலையிலேதான் மல்லிகையின் பெறுமதி மிக்க தொடர் வரவை நாம் கூர்ந்து பார்க்கத் துணிய வேண்டும்.

சுய ஊரில், சுய வீட்டில் வாழ்ந்து கொண்டு, தன்னளவில் பொருளாதாரப் பலத்தைக் கட்டுக்குள் வைத்துக் கொண்டு, ஓரளவு குடிசைக் கைத்தொழில் போல ஓர் இலக்கியச் சஞ்சிகையைத் தற்காலிக சிரமங்களைத் தாங்கிக் கொண்டு வெளியிட்டு வருவது சுலபம். ஆனால், யுத்தச் சூழ்நிலையில் ஊர்விட்டு, ஊர் பெயர்ந்து, இந்த வாழ்க்கைச் செலவு அதிகரித்த காலகட்டத்தில் தலைநகருக்குக் குடிபெயர்ந்து, தொடர்ந்தும் மல்லிகையைத் தொடராக இத்தனை ஆண்டுக் காலங்களாக வெளியிட்டு வருவதைத் தமிழில் என்ன வார்த்தை சொல்லி அழைப்பது என்றே எனக்கு இதுவரையும் புரியவில்லை.

'**ஜீவ சாதனை!**' எனச் சொல்லலாமா? எனவும் யோசித்துக் கொண்டிருக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனி மனிதப் புகழ்ச்சியல்ல, எனது நோக்கம்.

ஆனால், தனி மனிதச் சாதனைகளைக் கண்டு கொள்ளாமல் சும்மா மேம்போக்காக வரலாற்றுச் சாதனைகளை எதிர்காலத் தலைமுறையினர்க்கு ஆவணப்படுத்திச் சொல்லாமல் விட்டு விடுவது கூட, ஒரு வகையில் நமது மண்ணுக்கும் மொழிக்கும் செய்யும் பாரதூரமான பெரும் தவறு என்றே நான் மெய்யாகவே கருதுகின்றேன்.

மல்லிகை ஆசிரியரை நான் நேரடியாக இரண்டொரு முறைதான் கண்டிருக்கிறேன். பேசிப் பழக்கமில்லை. பேசப் பயம். அவரது எளிமையான தோற்றமும் காத்திரமான கருத்து நிலைப்பாடும், அவரது எழுத்தில் மறைமுகமாகச் சுடர் விடும் இலக்கியத் திமிரும் என் நெஞ்சை எப்போதுமே கவர்ந்து வந்தவைகள்தான்!

அதே சமயம் இந்த 44ஆண்டுக் கால மாகத் தன்னந்தனியாகத் தனித்து நின்று ஓர் இலக்கிய இதழை வெளியிட்டுக் கொண்டு வருவதும் அவரது வார்த்தைக்கமையக் கூறுவதானால், மல்லிகைப் பந்தல் வெளியீட்டு நிறுவனத்தை முன்நிறுத்தி நடத்தி வருவதை இரட்டைக் குழல் துப்பாக்கி என்ற பதிப்பக நிறுவனத்தையும் இணைத்து இன்று வரைக்கும் பல்வேறு நூல்களை வெளியிட்டு வருவதை யும் என்ன பெயர் சொல்லி அழைக்கலாம் என எனக்குள் யோசித்துக் கொண்டிருக் கின்றேன்.

தனிநபர் புகழ் பாடுவதல்ல எனது நோக்கம்.

ஆனால், தனிநபர்களின் அயராத ஊக்கம், உழைப்பு நெறியாழ்கை, வரலாற் றுச் சாதனைகளை நாம் புறக்கணித்து விட்டு, சுபீட்சமான நல்லதொரு எதிர்கால த்தை- எதிர்காலச் சந்ததியை- உருவாக்கி விட முடியாது என்பதையும் நாம் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஒட்டப் பிடாரம் குருசுவாமி, ரெங்கநாதன், துரை விசுவநாதன் போன்றோரின் பெயர்களை இடையிடையே அவரது எழுத்தில் தரிசிக்க முடிகின்றது. இம்மூவரும் தமிழ் நாட்டைப் பிறந்த பூமியாகக் கொண்டவர்கள். கொழும்பில் வியாபாரிகளாகப் பரிணமித்தவர்கள். அவர்கள் வியாபார ரீதியாகக் கோடி கோடியாகக் கொழும்பு மாநகரில் கையாண்டிருக்கலாம். வர்த்தகப் பெருமக்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டிருக்கலாம். ஆனால், ஓர் எழுத்தாளச் சகோதரனிடம் கொண்டிருந்த நட்புப் பாசம் தானே. இன்றுவரைக்கும் அன்னாரது நாமங்கள் தானே நம்மைப் போன்றவர்களுக்கு ஞாபகத்தில் நிலைத்து நிற்கின்றது.

இதைக் கூட, மல்லிகையின் சாதனை தான் என நான் எனது மனசுக்குள் நினைத்து மகிழ்வதுண்டு.

நிறைய நிறைய எழுதிவிட்டேன் போலத் தோன்றுகின்றது. நீண்ட கால மன ஆதங்கத்தை எழுத்தில் பதிய வைத்ததில் எனக்கொரு மன ஆறுதல். அவ்வளவு தான். இதைப் போன்ற கருத்துக்களை எத்தனையோ தடவைகள் பலரும் கூறக் கேட்டிருப்பார், மல்லிகை ஜீவா.

**வெள்ளவத்தை. க. வரதராஜன்**

ஒக்டோபர் இதழில் வந்த 'குறை நிறைத்தல்' சிறுகதை உண்மையிலேயே அருமையாக இருந்தது. எழுதிய உ. நிசார் பாராட்டுக்குரியவர் தான்.

சுவைரியத்தும்மாவின் நகை பறிபோய் விடுமோ என்று மனம் திக்குத்திக்கென அடித்துக் கொண்டது. அவர் கவலைப்படாமல் பேசிக் கொண்டே சென்றதும் நாங்கள் பின்னே போக வேண்டியிருந்தது. இது போன்ற கதைகளை உ. நிசார் மேலும் எழுத வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**கொழும்பு- 6. எஸ். ஆர். பாலச்சந்திரன்**



# தூண்டில்

**- டொமினிக் ஜீவா**

➤ இரண்டாவது யுத்த காலத்தில் 44-ல், ஜப்பானில் முதன்முதலில் அணுகுண்டு வீசிய அமெரிக்க விமானியின் பெயரென்ன?

**சிலாபம். எஸ். குகநேசன்**

போல் ரிபெற்ஸ் (Paul Tibbets). அந்த யுத்த கால முடிவில் அணுகுண்டு வீசப்படாமல் இருந்திருந்தால் கூட, ஜப்பான் சரணாகதி அடைந்திருக்கக் கூடும். திட்டமிட்டே அமெரிக்கா அணுகுண்டுப் பரிசோதனைக்காக ஹிரோஷிமா, நாகஷாஹி நகரங்கள் மீது வீசி குண்டினது வலிமையை முதன் முதலில் பரிசோதித்துப் பார்த்தது. உண்மையாக ஜெர்மனியில் தான் அணுகுண்டு முதன் முதலில் போடப்பட்டிருக்கப் படவேண்டும். ஜெர்மனி வெள்ளையர்களைக் கொண்ட ஐரோப்பிய நாடு. எனவே அமெரிக்க ஏகாதிபத்தியம் தவிர்த்துக் கொண்டது. மாறாக ஆசிய நாட்டின் மீது வீசி, பரீட்சித்துப் பார்த்துக் கொண்டது. ஹிரோஷிமா, நாகஷாஹி மாத்திரமல்ல, மற்றும் ஏழு அணுகுண்டுகளை வீச அமெரிக்கா திட்டமிட்டிருந்தது. அதன் சர்வ அழிவு நாசத்தை எதார்த்தமாகப் புரிந்து கொண்ட உலக மக்களின் எதிர்ப்பைச் சமாளிக்க முடியாமல் இரண்டு குண்டுகளுடன் மட்டும் நிறுத்திக் கொண்டு விட்டது அமெரிக்க ஏகாதிபத்தியம்!

இன்று கூட அந்தக் குண்டின் தாக்கங்கள் ஜப்பானை அலைக்கழித்துக் கொண்டு தான் இருக்கிறது.

—இதில் வேடிக்கை என்னவென்றால் இன்று அந்த அமெரிக்க ஏகாதிபத்தியம் உலகிற்குச் சமாதானத்தைப் போதிப்பதுதான்!

➤ கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல் இத்தகைய எழுத்துத் துறையில் எதனை நீங்கள் விரும்பிப் படிப்பீர்கள்? எது சமூகத்தில் அதிகளவு தாக்கத்தை ஏற்படுத்தும்?

**கல்பிட்டி. கே. பி. ஷர்மிலா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ ஒரு படைப்பாளன் என்பது ஒரு கட்டம். ஒரு தொடர் சஞ்சிகையாளன் என்பது பிறிதோர் கட்டம். படைப்பாளி ஒருவன் தனக்குத் தேவையானவற்றைத் தேர்ந்தெடுத்துப் படிப்பான். ஆனால், சஞ்சிகையாளன் அப்படித் தனது படிப்பை மட்டுப் படுத்தி விடமுடியாது. ஆரம்ப கால கட்டங்களில் பொதுவாக நான் நாவல்களைத் தொடர்ந்து வாசிப்பதிலேயே அதிகளவு கவனம் செலுத்தி வந்தேன். பின்னர் சஞ்சிகையாளன் ஆனதன் பின்பு, நான் சகல துறைகளையும் சார்ந்த நூல்களையும் தேடித் தேடிப் படிக்க வேண்டிய அவசிய தேவை எனக்கு ஏற்பட்டு விட்டது. இன்று சகலதுறைகளைச் சார்ந்த நூல்களை, எழுத்துக்களை, கருத்துகளைப் படிக்க வேண்டிய தேவைக்கு உள்ளாகியுள்ளேன்.

➢ அமைச்சர்கள், அரசியல் தலைவர்களுக்கும் எழுத்தாளர்களுக்குமுள்ள அடிப்படை வேறுபாடுகள் தான் என்ன?

**மருதானை.** **ச. தாமோதரன்**

➢ அமைச்சர்கள், அரசியல் தலைவர்களின் நாமங்கள் அவர்கள் வாழுங் காலத்திலேயே தினசரிகளில் அடிக்கடி இடம் பிடிக்கும். ஆனால், படைப்பாளிகளின் நாமம், அவர்கள் மறைந்த பின்னர் வரலாற்றில் இடம் பெற்றுத் திகழும். அவர்களது அதீத ஆளுமை சரித்திரத்தில் இடம் பெற்று விரியும்.

➢ நாம் நமது அன்றன்றாட வாழ்க்கையில் தினசரி பாவித்து வரும் தீப்பெட்டியை- தீக்குச்சியை- கண்டு பிடித்தவர், யார்?

**புத்தளம்.** **எம். மனோகரன்**

➢ அவரொரு பிரிட்டிஷ்காரர் தான். ஜான் வாக்கர் என்பது அன்னாரது திருநாமம்.

➢ சமீபத்தில் உங்களுக்குக் கொழும்பில் **கொடகே** விருது கிடைத்ததே, அந்தச் சமயம் உங்களது உணர்வு நிலை எப்படி இருந்தது?

**ஜாஎல.** **ஆர். கருணாகரன்**

➢ எனக்கு மட்டுமல்ல, என்னுடன் சேர்த்து மூன்று படைப்பாளிகளுக்கும் இவ்விருது கிடைக்கப் பெற்றது. இதுவரையும் எனக்குக் கிடைக்கப் பெற்ற இலக்கிய விருதுகள் அனைத்துமே அரசு ஆதரவு நல்கி, உதவிய விருதுகள்— பரிசுகள்! ஆனால், பாமரச் சிங்கள மக்கள் மத்தியிலிருந்து தோன்றி, தனது சுய உழைப்பால் உயர்ந்து நிமிர்ந்த **கொடகே** என்ற புத்தக வெளியீட்டாளரின் பெயரால் இந்த விருது கிடைக்கப் பெற்றது, வரலாற்றுச் சிறப்பு மிக்கது. இந்தக் கருத்தை, விழா மேடையிலேயே நான் கூறியிருந்தேன்.

இதில் அதிசயம் என்னவென்றால், சிங்கள, தமிழ் , ஆங்கில நாளேடுகளில் பரிசு பெறும் படங்களும் செய்திகளும் இம்மூன்று மொழிப் பத்திரிகைகளில் ஒரு வாரமாகத் தொடர்ந்து வெளி வந்ததின் நிமித்தமாக, எனது பெயரும் மல்லிகையின் நாமும் சிங்களப் புத்திஜீவிகள் மத்தியில் பரவலாகப் பிரபலம் பெற்றுள்ளதைப் பின்வந்த நேரடித் தொடர்புகளே மெய்ப்பித்து விட்டன.

➢ கொழும்பை விட்டு, அங்காலை- இங்காலை நகர மாட்டீர்கள் போல, இருக்கிறதே?

**கல்முனை.** **ஆர். பரஞ்சோதி**

➢ நான் மல்லிகை, மல்லிகைப் பந்தல்



வெளியீடுகளை வெளியிட்டு வருவது தான் கொழும்பு மாநகர். ஆனால், எனது அர்ப்பணிப்பு, உழைப்பு, செயல் வடிவத்தின் அறுவடைகள் யாவுமே, கடல் கடந்தும் ஊர், கடந்தும், நாடு கடந்தும் சென்றடைகின்றனவே, இதற்கு என்ன சொல்லப் போகிறீர்கள்? இருக்கும் இடமல்ல, முக்கியம். நாம் நம்மை அர்ப்பணித்து உழைக்கும் உழைப்பின் அறுவடைகள் எங்கு போய்ச் சேருகின்றன, யார் யாரிடம் போய்ச் சென்றடைகின்றன என்பதே இங்கு முக்கிய மாகக் கவனிக்கத் தக்க ஒன்றாகும். கொழும்பி லிருந்து இன்று இயங்கி வரும் உலகப் பொது பிரஜை நான். இதையும் கொஞ்சம் கவனத்தில் கொள்ளுங்கள்.

➢ 45- வது ஆண்டு மலர் தயாரிப்பு, எந்தளவில் இருக்கிறது?

**கோப்பாய்.** **எஸ். கீதாஞ்சலி**

➢ நான் ஏற்கனவே மலர் வேலைகளை ஆரம்பித்து விட்டேன். மல்லிகை ஆண்டு மலர்கள் காலம் காலமாகப் பேசப்பட்டு வருபவை. அவை ஓர் இலக்கிய ஆவணமாகும். மலரில் தொடர்பு கொள்ள விரும்புபவர்கள் காலம் தாழ்த்தாமல் தங்கள் தங்களது படைப்புக்களை நேர காலத்துடன் எமக்குச் சேர்ப்பிக்க முயல வேண்டும். இந்தத் தகவலைச் சகோதரப் படைப்பாளிகளின் கவனத்திற்குக் கொண்டு வருவதும் மிக மிக முக்கியமாகும்.

➢ இன்றும் கூட, நீங்கள் உங்களை இளமையானவராகக் காட்டிக் கொள்கின்றீர்கள். இதன் மனோதத்துவக் காரணம் என்ன?

**யாழ்ப்பாணம்.** **சா. ரெமியன்**

➢ படைப்பாளிக்கு மரணமில்லை. அதனால், ஆண்டுகள் கழியலாம். வயது ஏறுவதில்லை! இதுதான் படைப்பாளிக்கான மகத்தான தத்துவம்!

➢ உண்மை நிலைவரத்தை எங்களிடம் மனந்திறந்து சொல்லுங்கள். உங்களுடைய இன்றைய பொருளாதார நிலை என்ன? இன்றைய இந்தக் கால கட்டச் சூழ்நிலையில், தினசரி வாழ்க்கையை எப்படிக் கொண்டு சென்று சமாளிக்கின்றீர்கள்?

**சுன்னாகம்.** **செல்வி ரூபராணி**

➢ இந்தக் கேள்வியைப் படித்த போது, உண்மையாகவே மனங் கசிந்து விட்டேன். மல்லிகையின் வாசகர் என்றால் இப்படிப்பட்டவர்கள் தான். எனது தினசரி வாழ்வின் துன்ப— துயரங்களை மனந்திறந்து என்னிடம் கேட்கிறார்களே— அதுவே போதும்! எனது சகல வாழ்வுத் தேவைகளுக்குமாக நான் மல்லிகையைத் தான் பரிபூரணமாக நம்பி இந்த 44 ஆண்டுக் காலங்களாகத் தினசரி இயங்கி வருகின்றேன்.

➢ நானொரு பல்கலைக் கழக மாணவி. படிப்பதில் ஆர்வமுள்ளவள்.

மல்லிகைப் பந்தல் வெளியீடுகளில் சிலவற்றை நான் வாங்கிப் படிக்க விரும்புகின்றேன். அதற்கு நானென்ன செய்ய வேண்டும்?

**தெஹிவளை. செல்வி ஜானகி கந்தசாமி.**

➢ கொஞ்சம் அவகாசமெடுத்து மல்லிகைக் காரியாலயத்திற்கு ஒரு தடவை வந்து போங்கள். உங்களுக்குத் தேவையான புத்தகங்களை ஆறுதலாகப் பார்வையிடலாம். தேர்ந்தெடுத்து வாங்கவும் செய்யலாம். எனவே, உசிதம் போலச் செய்யுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ ஒரு தடவை மலையகப் பக்கம் வந்தால் என்ன? எல்லாவற்றையும் நேரில் பார்த்த மாதிரியும் இருக்குமல்லவா? எங்களுக்கும் மல்லிகை ஆசிரியரை நேரில் பார்த்த திருப்தி இருக்குமல்லவா?

பதுளை ஆர். சரவணன்

✍ எனக்கும் இந்த மன ஆசை நீண்ட நாட்களாக உண்டு. சும்மா சும்மா ஆட்களின் முகங்களைப் பார்த்துத் திருப்தி கொள்வதை விட, ஏதாவது ஓர் இலக்கிய விழாவுக்கு அழைப்புக் கிடைத்தால் நிச்சயம் அங்கு வந்து, எல்லா நண்பர்களையும் ஒருங்கு சேரப் பார்த்துப் போகலாம் என்பது எனது நீண்ட கால ஆசை. முயற்சி செய்யுங்கள்.

➢ மல்லிகையை ஆத்மார்த்தமாக சிறு தொட்டு, இன்றுவரை நேசிக்கும் அபிமானிகளை ஞாபகம் வைத்துள்ளீர்களா?

மாவனல்லை ஆர். சுகாதேவன்

✍ மல்லிகையின் ஆரம்ப காலம் தொட்டே மல்லிகையில் தொடர் வரவின் மீது தனி அபிமானமும் அக்கறையும் கொண்டவர்களை முற்றுமுழுதாக இன்று வரைக்கும் இனங் கண்டு தொகுத்து வைத்துள்ளேன். பலர் ஆரம்ப காலங்களில் மல்லிகை மீது அபார அபிமானம் காட்டி வந்துள்ளனர். ஏதோ ஒரு வகையில் தங்கள் தங்களது மன அபிலாஷைகள் ஓய்வுபெற்றுவிட்டதும், மெது மெதுவாக நம்மை விட்டு ஒதுங்கி போய்விட்டனர். இது நமக்கு இயல்பாகவே அமைந்துவிட்டது. வடி கட்டி, வடி கட்டி ஆட்களை ஒதுக்க வேண்டிய தேவை நமக்கு இல்லாமலேயே போய்விட்டது. இன்று நின்று நிதானமாக நாம் நடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்க்கும் இந்த வேளையில் மன நிறைவோடு சொல்ல வேண்டியுள்ளது. நமக்கு சந்தர்ப்பத்துக்கு நிலைத்து நின்றவர்களின் நாமத்தை எழுத்தில் பதிந்து ஆவணப்படுத்த வேண்டுமென்பதே எனது பெரு விருப்பமாகும்— செய்வேன்!

➢ சமீபத்தில் நீங்கள் ரசித்துச் சுவைத்த நகைச் சுவைச் சம்பவம் என்ன?

கம்பளை எம். மணிமேகலை

✍ அண்ணா நூற்றாண்டு விழாவில் அண்ணா நூற்றாண்டுப் பரிசைக் கலைஞரும் முதலமைச்சருமான கருணாநிதி பெற்றுக் கொண்ட செய்தியைப் படித்தது தான்!

➢ நீண்ட மாரிய தேசிய நெருக்கடிகளுக்குப் பின்னர் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் ஓர் இலக்கியப் புத்துணர்ச்சித் திருப்பம் ஏற்பட்டு வருவதை நீங்கள் மனதார உணர்ந்து கொள்ளுகிறீர்களா? இந்த ஆரோக்கியமான இலக்கியத் திருப்பத்தைப் பற்றி என்ன கருதுகிறீர்கள்?

நல்லூர் எம். சுந்தரவேல்

✍ நீண்ட காலமாகவே ஈழத்து இலக்கியத்திற்கு விசுவாசமாகப் பங்களிப்புச் செய்துவரும் பல எழுத்தாள நண்பர்கள் ஏற்கனவே எமக்கிருந்த தளத்தைத் தந்துள்ளனர். அங்கு வாழும் மக்கள் மாத்திரமல்ல, பல தட்டுக் கலைஞர்களும், எழுத்தாளர்களும் சொல்லொண்ணாச் சிரமங்களையும் கஷ்ட நிஷ்டூரங்களையும் நேரடியாகவே அனுபவித்து வந்தவர்கள். எழுத்தாளர்களுக்கு இன்று தானாக வரும் வாய்ப்பைச் செவ்வனே பயன்படுத்துவது அவர்களை இன்னுமின்னும் முழுமைப்படுத்தும். செய்யுங்கள்— செய்து முடியுங்கள்.

## எமது புதிய வெளியீடுகள்



ISBN 978-955-659-205-4
பக்கங்கள்: xxvi + 150
விலை 550.00

**அநாமதேயங்களாக இருந்தோர் அறியப்பட்டவர்களானமை**
**இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்**
கலாநிதி குமாரி ஜயவர்த்தன
மொழிபெயர்ப்பு க. சண்முகலிங்கம்

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் முதலாளிவர்க்கம் எழுச்சி பெற்ற வரலாற்றை இந்நூல் கூறுகின்றது. நவீனகால வரலாற்றில் கவனிக்கப்படாத விடயமான இந்த முக்கிய விடயத்தை கூறும் இந்நூல் முதலாளித்துவ வளர்ச்சியின் படிநிலைகளை விவரிக்கிறது.

இந்நூல் சாதியமைப்பு வர்க்க முதலாளித்துவ மாற்றத்தில் முதன்மை பெறுவதை எடுத்துக் காட்டுகின்றது. பல சாதிகள், பல்வேறு இனக்குழுமங்கள், சமயப் பண்பாடுகளை பின்னணியாகக் கொண்ட அநாமதேயங்களாக இருந்தோர் (NOBODIES) அறியப்பட்டவர்களாக (SOME BODIES) சமூக பொருளாதார உயர்வதை இந்நூல் விளக்கிச் செல்கிறது.

1. ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம்
   - கலாநிதி நா. சுப்பிரமணியன்
2. செ. கணேசலிங்கன் நாவல்கள்: ஓர் ஆய்வு
   - அமிர்தலிங்கம் பௌநந்தி
3. நவீன அரசியல் சிந்தனை: ஓர் அறிமுகம்
   - க. சண்முகலிங்கம்
4. ஈழத்துத் தமிழ் நாவல் வரலாறும் வளர்ச்சியும்
   - கலாநிதி செ. யோகராசா
5. ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி
   - பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா 0
6. இலங்கையில் அரசியற் கட்சி முறைமை
   - சி. அ. யோதிலிங்கம் 00
7. பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் நாடகம்
   - பேராசிரியர் கா. சிவத்தம்பி 937.50
8. ஈழத்துப் பழைய இலக்கியங்கள்: வரலாறு தேடல்
   - பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை 300.00
9. தமிழியல் ஆய்வுக் கட்டுரைகள்
   - பேராசிரியர் அ. சண்முகதாஸ் 450.00

**குமரன் புத்தக இல்லம்**

அகன்ற ஆழ்ந்த அறிவிற்காய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் மிகப் பெரிய
நகையகம்



SINCE 1978

வெள்ளவத்தை
நித்தியகல்யாணி
ஜீவலரி

நம்பிக்கையே எமது பாரம்பரியம்

இல. 541, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு- 06


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org